5. மாகாண சபைகளை உருவாக்குவதனையும் அவற்றுக்கு அதிகாரம் பரவலாக்குவதனையும் இயலச்செய்வதற்கு அரசியலமைப்பைத் திருத்துவதற்கான தொரு சட்டமூலம் 2/3 பங்கினரின் பெரும்பான்மை மூலம் பாராளுமன்றத்தினுல் சட்டமாக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர், தேவையான சட்டமாக்கல் தத்துவங்களை மாகாண சபைகளுக்கு நேரடியாக அளித்து பாராளுமன்றம் சட்டமொன்றை நிறைவேற்றும். அத்தகைய தத்துவங்கள், சம்பந்தப்பட்ட மாகாண சபையுடனை அல்லது சபைகளுடனை கலந்தாலோசனையின் பின்னர் மூன்றி லிரண்டு பங்கினரினுல் நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டமொன்றின்மூலம் தவிர எம்முறையிலேனும் ஒழிக்கப்படுதலோ அல்லது மாற்றப்படுதலோ ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அரசியலமைப்பைத் திருத்துவதற்கும் பாராளுமன்றச் சட்டத்தைச் சட்டமாக்குவதற்குமான செய்முறையும் நடவடிக்கைமுறைகளும் உடன்படிக்கை செய்யப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் இலங்கை அரசாங்கத்தினுல் தொடங்கப் படும்.

7. ஐந்தாம் பந்தியில் உட்கருதப்பட்டுள்ள அரசியலமைப்புக்கான திருத்தம், மக்கள் தீர்ப்பொன்றில் அதற்கான அங்கீகாரம் தேவைப்பட மாட்டாத அத்தகைய ஒரு தன்மையினதாக இருத்தல் வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல்

8. மாகாண சபையொன்றுக்குப் பரவலாக்கப்பட வேண்டிய தத்துவங்கள் மேலே 5 ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சட்டத்தில் குறித்துரைக்கப் படும்.

மாகாண சபையொன்றுக்குப் பரவலாக்கப்பட வேண்டிய கூடிய முக்கியத்துவம் வாய்ந்த தத்துவங்கள் இதற்கான பின்னிணைப்பு I இல் குறித்துரைக்கப்படுகின்றன.

சட்டமாக்கல் தத்துவங்கள்

9. சட்டமாக்கல் தத்துவங்களைப் பிரயோகித்தல் தொடர்பாக, திருத்தப்பட்ட வாருன அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, பாராளுமன்றச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் பற்றிச் சட்டங்களைச் சட்டமாக்குவதற்கான தத்துவங்களை மாகாண சபைகள் உடையனவாயிருக்கும் ; இவை அம் மாகாணத் தினுள் நடைமுறையிலிருக்கும்.

நிறைவேற்றுத் தத்துவங்கள்

10. மாகாண சபையொன்றன் நம்பிக்கைக்குட்பட்டவராக இருப்பதற்கு மிக்க சாத்தியம் கொண்டவரான உறுப்பினர்களுள் ஒருவரைச் சனுதிபதி, சனுதிபதியின் அபிப்பிராயப்படி அச்சபையின் பிரதான நிறைவேற்றுநராக நியமித்தல் வேண்டும். பிரதான நிறைவேற்றுநர் மாகாண சபை உறுப்பினர் களுளிருந்து நிறைவேற்றுக் குழுவைத் தேர்ந்தெடுப்பதற்கு உரித்துடையவராவார்.

10 (அ) நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்கள், பிரதான நிறை வேற்றுநரின் விதப்புரையின் மேல் சனுதிபதியினுல் நியமிக்கப்படுவர் என்பதுடன், நிறைவேற்றுத் தத்துவங்கள், பிரதான நிறைவேற்றுநருக்கும் நிறைவேற்றுக் குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கும் கையளிக்கவும்படும்.

10 (ஆ) பிரதான நிறைவேற்றுநருக்கும் (நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களுக்கும்) கையளிக்கப்படக்கூடிய தத்துவங்கள், மேலே 5 ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட சட்டத்தில் குறித்துரைக்கப்படும். அத்தகைய நிறைவேற்றுத் தத்துவங்கள், மாகாண சபைக்குக் கையளிக்கப்பட்ட சட்டமாக்கல் தத்துவங்களின் எல்லாத் துறைகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 (இ) பிரதான நிறைவேற்றுநரும் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கவேண்டியவர்களல்லர். அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களல்லாவிடின், அவர்கள் பாராளுமன்றத்திலோ அல்லது பாராளுமன்றத்துக்கோ வகைகூற வேண்டியவர்களாக இருக்கமாட்டார்கள். எவ்வாருயினும், அச்சந்தர்ப்பத்தில், எக்கருமங்கள் தொடர்பில் சனுதிபதி பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாளியாகவிருப்பாரோ அக்கருமங்கள் தொடர்பில் சனுதிபதிக்கும் மற்றெல்லாக் கருமங்கள் தொடர்பில் மாகாண சபைக்கும் பொறுப்பாளியாவர்.

நிதிசார் தத்துவங்கள்

11. வரிகள், தீர்வைகள் அல்லது கட்டணங்கள் என்பவற்றை விதிப்பதற்கும் கடன்கள்மூலம் மூலவளங்களைத் திரட்டுவதற்கும் மாகாண சபைகள் தத்துவமுடையனவதால் வேண்டும் ; இவற்றிலிருந்து பெறப்படும் வரும்படிகள், குறிப்பாக, அச்சபைக்கெனத் தாபிக்கப்பட்ட ஒரு திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்படுமென்பதுடன், குடியரசிடமிருந்து பெறப்படும் மானியக் கொடைகள், குறித்தொதுக்கல் அல்லது பண அளிப்பனவுகள் என்பனவும் அந்நிதியத்துக்கு வரவு வைக்கவும்படும். சனுதிபதியினுல் காலத்துக்குக்காலம் நியமிக்கப்படும் பிரதிநிதித்துவ நிதி ஆணைக்குழுவொன்றன் விதப்புரைகளின் மீது நிதிசார் மூலவளங்கள் மாகாணங்களுக்குப் பங்கிட்டளிக்கப்படும்.

11 (அ) கடன்கள் அல்லது மானியக்கொடைகள் தொடர்பில், எவையேனும் வெளிநாட்டுக் கடன்களுக்கு அல்லது மானியக்கொடைகளுக்கு தேசியக் கொள்கைக்கிணங்க இலங்கை அரசாங்கத்தின் அனுமதி தேவைப்படும்.

11 (ஆ) மாகாண சபைகளினுல் விதிக்கப்படவேண்டிய வரிகளின் தன்மை, சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினுல் வரையறுக்கப்படும்.

தேர்தல்கள்

12. மாகாண சபையொன்றை அமைப்பதற்காக, நிருவாக மாவட்டங்களின் அடிப்படையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் மீது ஒவ்வொரு மாகாணம் தொடர்பிலும் தேர்தல்கள் நடாத்தப்படும். ஒவ்வொரு மாகாண சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, அம் மாகாணத்தினுள் உள்ள ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகை, பரப்பளவு என்பனவற்றுக்கிணங்கத் தீர்மானிக்கப்படும்.

மாகாண சபையின் உறுப்பாண்மை.

13. மாகாண சபையின் உறுப்பினர்கள், மேலே 12 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ளவாறு மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களாதல் வேண்டும். மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும், குறித்துரைக்கப்படும் ஒரு காலப்பகுதியினுள் அவர் அவ்வாறு விருப்பம் தெரிவிப்பின், மாகாண சபையின் பதவிவழி உறுப்பினரொருவராகவிருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். பாராளுமன்ற உறுப்பினரொருவர் அவரது விருப்பத்தைத் தெரிவிக்கத் தவறியமை காரணமாக மாகாண சபையின் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தால், வெற்றிடமெதுவும் ஏற்படுத்தப் பட்டதாகக் கருதப்படலாகாது.

பதவிவழி உறுப்பினர்களின் எண்ணிக்கை, சபையின் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை விஞ்சுதலாகாது.

14. ஏதேனும் மாகாண சபையின் அலுவல்கள், அரசியல் அமைப்பின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கொண்டு நடாத்தப்பட வில்லையெனச் சனாதிபதி திருப்திப்படுமிடத்து, சபையைக் குலைப்பதற்கானதும், அவசியமானவையென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விளைவாந்தன்மையினவான வழிவகைகளை மேற்கொள்ளுதற்கானதுமான கட்டளையொன்று உட்பட, அவ்வலுவல்கள் அவ்வாறு கொண்டு நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குத் தகுதியானவையெனத் தாம் கருதக்கூடியவாறான அத்தகைய வழிவகைகளை அவர் மேற்கொள்ளலாம் அல்லது அத்தகைய கட்டளைகளை நிறைவேற்றலாம். சபையொன்றைக் குலைக்கின்ற அத்தகைய ஒவ்வொரு கட்டளையும் ஒரு தடவையில் ஆறு மாதங்களைக் கொண்ட, ஆனால் மொத்தத்தில் ஓராண்டை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும்; ஆயின், எவ்வாறாயினும், குலைத்தற் கட்டளை ஆக்கப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களினுள் பாராளுமன்றம் அத்தகைய நடவடிக்கையை அங்கீகரித்தல் வேண்டும்.

15. ஏதேனும் மாகாணத்தினுள் 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட அபிவிருத்திச் சபைகளின் எண்ணிக்கையில் அரைவாசிக்கு மேற்பட்டவை, சாதாரணப் பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின்மூலம் தம்மை மாகாண சபையொன்றாக அமைத்துக் கொள்வதற்கு முடிவு செய்யின், அரசியலமைப்புக்கான சொல்லப்பட்ட திருத்தமும் செய்யப்பட்ட பாராளுமன்றச் சட்டமும் வலுவுக்கு வருகின்ற தேதியை உடனடுத்துப்பின்னர் நடைபெறும் கூட்டங்களில் அம் மாகாணத்தில் மாகாண சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமெனப் பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

15 (அ) அத்தகைய அபிவிருத்திச் சபைகளுள் பெரும்பான்மையானவை, மாகாண சபையொன்றின் பாகமாகப் பணியாற்றுவதற்குத் தீர்மானிக்காவிடின், அம் மாகாணத்துக்கான மாகாண சபையொன்று அமைக்கப்படுதலோ அல்லது அம் மாகாணம் தொடர்பில் பணியாற்றுதலோ ஆகாது.

15 (ஆ) அத்தகைய சந்தர்ப்பத்தில், ஏலவேயுள்ள மாவட்ட அபிவிருத்திச் சபைகள், 5 ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பாராளுமன்றச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்படும் மாவட்டச் சபைகளெனக் கருதப்படுதல் வேண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்பதுடன், காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாருன 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தில் தரப்பட்டுள்ள தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் கொண்டனவாக, மாகாணத்திலுள்ள மாவட்டங்களுள் ஒவ்வொன்று தொடர்பிலும் தொடர்ந்து பணியாற்றுதலும் வேண்டும்.

15 (இ) ஆயின், ஏதேனும் மாகாணத்திலுள்ள அபிவிருத்திச் சபைகளின் எண்ணிக்கையில் அரைவாசிக்கு மேற்பட்டவை, இவ்வுடன்படிக்கைத் தேதியன்று அம் மாகாணத்தில் இல்லாதொழிந்துள்ளவிடத்து அல்லது பணியாற்றுதவிடத்து, அரசியலமைப்புக்கான சொல்லப்பட்ட திருத்தமும் சொல்லப்பட்ட பாராளுமன்றச் சட்டமும் வலுவுக்கு வருவதன் மீது மாகாண சபையொன்று தாபிக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

16 (அ) மாகாண சபையொன்று அமைக்கப்பட்டுப் பணியாற்றுமிடத்து, அம் மாகாணத்திலுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கையில் ஓர் அரைவாசிக்கு மேற் பட்டவை தொடர்பில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், அம் மாகாண சபையில் எவரேனும் பதவிவழி உறுப்பினர்களுடன், அம் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக் கப்பட்டமையின் பயனைக்கொண்டு தனிவேருக அமர்ந்து, அத்தகைய மாவட்டம் அம் மாகாண சபையின் பாகமாக இல்லாதொழிதல் வேண்டுமெனச் சாதாரண பெரும்பான்மையொன்றின் மூலம் முடிவுசெய்து அதிலிருந்து விலகலாம்.

16 (ஆ) இப்பந்தியின் நோக்கங்களுக்காக, 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட அபிவிருத்திச் சபையொன்றன் உறுப் பினர்கள், இச்சட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாகக் கருதப்படு தல் வேண்டும்.

16 (இ) அச்சந்தர்ப்பத்தில், அத்தகைய ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின்கீழ் அபிவிருத்திச் சபையொன்று அமைக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய சபையாகவும் பணியாற்றும்.

17. வேறு விடயங்கள் (ஆராய்வுகளுக்காக)

17 (1) சிறுபான்மையினர் ஆணைக்குழு

இலங்கையின் சமமான பிரசைகளாக மொழிசார், மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்கும் நிறுவன ரீதியான அமைப்பொன்றுக இது எதிர்பார்க்கப்படும்.

17 (2) ஊழியம் பற்றிய தேசியக் கொள்கை

ஊழியம் பற்றி இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகள் ஓரங்காட்டாதனவாக விருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 (3) தமிழ் அலுவலகம் அல்லது அமைச்சு

இந்து சமய அலுவல்களுக்கான அமைச்சொன்று ஏலவேயுள்ளது. அத்தகைய வொரு தமிழ் அலுவலகத்தின் நோக்கெல்லையையும், பணிகளையும். தன்மையையும், குறிப்பாக விரும்பப்படின் பரிசோதனை செய்யமுடியும்.

17 (4) ஆயுதந் தாங்கிய படைகளில் சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் வகிக்கப்படுதல்

ஆயுதந் தாங்கிய படைகள் இயன்றளவுவரை குறித்துரைக்கப்பட்ட கால எல்லையொன்றினுள் இனவிகிதத்தைப் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் ஆயுதந் தாங்கிய படைகளுக்கான ஆட்சேர்ப்பு நிறைவேற்றப்படும்.

18. இலங்கையிலுள்ள அண்மைக் கால இந்திய வமிசாவழியினரான ஆட்கள்

1964 ஆம் 1974 ஆம் ஆண்டுகளின் இந்திய-இலங்கை உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளின்கீழ், இந்திய வமிசாவழியினரான எந்த ஆட்களுக்கு இந்திய அரசாங்கம் பிரசாவுரிமை வழங்க உடன்பட்டதோ அந்த மொத்தமான 6,00,000 ஆட்களுள் இந்தியப் பிரசாவுரிமைக்காக ஏறத்தாழ 5,05,000 விண்ணப்பகாரர்கள் மட்டுமே இருந்தனர் ; மீதியானவர்களான (ஏறத்தாழ) 95,000 ஆட்கள் கணக்கிற் கெடுக்கப்படாதிருந்தனர் ; ஆதலால் அவர்கள் தொடர்ந்தும் " நாடற்றவர்களாக " இருப்பர்.

இந்தியப் பிரசாவுரிமைக்கு விண்ணப்பித்துள்ள இந்திய வமிசாவழியினரான எல்லா ஆட்களுக்கும் அத்தகைய பிரசாவுரிமை வழங்கப்பட்டு அவர்கள் தாய் நாட்டுக்கு மீட்டனுப்பப்படும்போது, இந்த 95,000 ஆட்களுக்கும் பிரசாவுரிமை வழங்க இலங்கை அரசாங்கம் உத்தேசிக்கின்றது.

பின்வருவோரினல் முதலெழுத்தொப்பம் இடப்பட்டது :—

ஆர். மத்தாய்— பிரதிச் செயலாளர்
வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
புது டில்லி
30.8.85

ஈ. எவ். டயஸ் அபெயசிங்க— இலங்கைத் தூதுக்குழுச் செயலாளர்
30.8.85
பி. ப. 8.50

புது டில்லி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு I

மாகாண சபைகள், பின்வருவன உட்பட்ட விடயங்களுக்கான தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டுமென்பதுடன், அவற்றுக்குப் பொறுப்புடைமை கொண்டதாதலும் வேண்டும் :—

(i) இணைக்கப்பட்டுள்ள பத்திரம் I இல் வரையறுக்கப்பட்ட அளவுக்கு உள்நாட்டுச் சட்டமும் ஒழுங்கும்.

(ii) இணைக்கப்பட்டுள்ள பத்திரம் II இல் வரையறுக்கப்பட்ட அளவுக்கு மாகாணத்தினுள் காணிக் குடியிருப்புக்கள்.

(iii) இணைக்கப்பட்டுள்ள III ஆம், IV ஆம் பத்திரங்களில் தரப்பட்டுள்ள அளவுக்கு கமத்தொழிலும் கைத்தொழிலும்.

(iv) கல்வியும் கலாச்சாரமும் கல்வி பற்றிய சுருக்கமான கூற்றொன்று V இலும், கலாச்சாரம் பற்றியது VI இலும் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட விடயங்களும் பணிகளும் பற்றிய நிரல் யாவும் அடக்கியவை அல்ல. மேலதிக விடயங்கள் பின்னர் இறுதியாக்கப்படும்.

ஐயுறவுகளை அகற்றுவதற்காக, பாராளுமன்றத்துக்குப் பிரத்தியேகமான ஒதுக்கப்படும் விடயங்களும் பணிகளும் பின்னிணைப்பு 2 இல் குறித்துரைக்கப்படுகின்றன.

மாகாண அல்லது மாவட்டச் சேவையொன்றைத் தாபிப்பதற்கும், மத்திய அரசாங்கப் பகிரங்க சேவையிலிருந்து பகிரங்க அலுவலர்களை மாற்றுச் சேவையிலமர்த்துவதற்கும் ஆன ஏற்பாடு இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டுச் சட்டமும் ஒழுங்கும்

1. பொலிசுத் தலைவர்

1 . 1 மாகாண சபையொன்றன் இடப்பரப்பினுள் உள்ள எல்லாப் பொலிசு நிலையங்களிலும் சேவைபுரியும் பொலிசுப் படை உறுப்பினர்கள் எல்லோரும், மாகாணத்தின் பரப்பளவு, சனத்தொகை என்பவற்றைப் பொறுத்து, பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் அல்லது பொலிசுக் கண்காணிப்பாளர் ஒருவரின் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் பணியாற்றுவர்.

1 . 2 இதனகத்துப் பின்னர் பொலிசுத் தலைவர் எனக் குறிப்பீடு செய்யப்படும் அத்தகைய அலுவலர், பிரதான நிறைவேற்றுநரின் கலந்தாலோசனை யுடன் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினுல் பெயர் குறித்து நியமிக்கப்படு வார் ; அத்துடன் அவர், அத்தகைய மாகாணத்தில் வதிவோரில் பெரும்பான்மை யினரால் பேசப்படும் மொழியை நன்கறிந்த அலுவலரொருவராகவிருப்பார். பிரதான நிறைவேற்றுநருக்கும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கும் இடையே அபிப்பிராய பேதம் ஏற்படும் விடயத்தில், அக்கருமமானது சனுதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்படும் ; அவரது முடிபு இறுதியானதாகும்.

2. ஊழியர் கோப்புகள்

2 . 1 ஏதேனும் மாகாண சபையின் பிரதான நிறைவேற்றுநர், அத்தகைய மாகாணத்தினுள் சேவைபுரியும் எண்ணிக்கையினரான பொலிசுப் படை உறுப் பினர்களின் ஊழியர் கோப்பில் எவையேனும் மாற்றங்கள் செய்யப்படு முன்னர் கலந்தாலோசிக்கப்படுதல் வேண்டும்.

2 . 2 ஏதேனும் மாகாண சபையின் பிரதான நிறைவேற்றுநர், அத்தகைய மாகாணத்தினுள் உள்ள ஏதேனும் பொலிசு நிலையத்தில் சேவைபுரியும் பொலிசுப் படை உறுப்பினர்களின் ஏலவேயுள்ள ஊழியர் கோப்பில் எவையேனும் மாற்றங் கள் செய்யப்படு முன்னரும் அத்தகைய மாகாணத்தினுள் பொலிசு நிலையங்கள் திறக்கப்படுவதற்கும் மூடப்படுவதற்கும் முன்னரும் கலந்தாலோசிக்கப்படுதல் வேண்டும்.

3. பொலிசு ஊர்காவலர்களையும் உப பரிசோதகர்களையும் ஆட் சேர்த்தல்

3 . 1 பொலிசு ஊர்காவலர்களுக்கான வெற்றிடங்கள் நாட்டில் இருக்கு மிடத்து, அத்தகைய வெற்றிடங்களுள் நூற்றுவீதமொன்று ஒவ்வொரு மாகாண சபை இடப்பரப்புக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் குறித்தொதுக்கப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஏதேனும் மாகாண சபை இடப்பரப்புக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட வெற்றிடங்களுக்காக அத்தகைய மாகாண சபை இடப்பரப்பிலிருந்து வரும் விண்ணப்பகாரர்களிடையேயிருந்து பொலிசு ஊர்காவலரின் தெரிவானது அவ் விடப் பிரதேசத்திலேயே செய்யப்படுதல் வேண்டும்.

3.1.1 ஏதேனும் மாகாண சபை இடப்பரப்பிலிருந்து வரும் பொலிசு ஊர்காவலர்களின் பதவிகளுக்கான விண்ணப்பகாரர்களின் முதனிலை நேர்முகப் பரீட்சையானது, பிரதான நிறைவேற்றுந ரின் நியமத்தர் ஒருவரினுல் தலைமை தாங்கப்படுவதும் 3 ஆட்களைக் கொண்டதுமான சபையொன்றினுல் நடாத்தப்படுதல் வேண்டும். அதன் மற்றைய இரு உறுப்பினர்களுல் ஒருவர் பொலிசுத் தலைவரின் நியமத்தர் ஒருவராகவும் மற்றையவர் பிரதான நிறைவேற்றுநரின் நியமத்தர் ஒருவராகவும் இருத்தல் வேண்டும்.

3.1.2 இறுதி நேர்முகப் பரீட்சையானது, பாதுகாப்பு அமைச்சரின் நியமத்தர் ஒருவரினுல் தலைமை தாங்கப்பட்டதும், 3 ஆட்களைக் கொண்டதுமான சபையொன்றினுல் நடாத்தப்படுதல் வேண்டும் ; மற்றைய உறுப்பினர்களுள் ஒருவர் மாகாணத்தின் பொலிசுத் தலைவரின் நியமத்தர் ஒருவராகவும் மற்றையவர் பிரதான நிறைவேற்றுநரின் நியமத்தர் ஒருவராகவும் இருத்தல் வேண்டும்.

3.1.3 இறுதிச் சபையினுல் தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள் என். ஐ. பீ. இனுல் துனித்தாராயப்பட்டு, என். ஐ. பீ. இன் அறிக்கை திருப்திகரமானதாயின் பயிற்சிபெறும் பொலிசு ஊர்காவலர்களாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

3.1.4 பயிற்சிபெறும் பொலிசு ஊர்காவலர்கள் எல்லோரினதும் பயிற்சி யானது கட்டுக்குறுந்தவிலுள்ள பொலிசுப் பயிற்சிப் பாடசாலையில் பொலிசாரினுல் நடாத்தப்படுதல் வேண்டும்.

3.2 உபபரிசோதகர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நாட்டில் இருக்குமிடத்து, அத்தகைய வெற்றிடங்களுள் நூற்றுவீதமொன்று ஒவ்வொரு மாகாண சபை இடப்பரப்புகும் மத்திய அரசாங்கத்திற்கும் குறித்தொதுக்கப்படுதல் வேண் டும்.

3.2.1 ஏதேனும் மாகாண சபை இடப்பரப்பிலிருந்துவரும் உபபரிசோத கர்கள் பதவிகளுக்கான விண்ணப்பகாரர்களின் முதனிலை நேர் முகப் பரீட்சையானது, பிரதான நிறைவேற்றுநரின் நியமத்தர் ஒருவரினுல் தலைமை தாங்கப்படுவதும், 3 ஆட்களைக் கொண்டது மான சபையொன்றினுல் நடாத்தப்படுதல் வேண்டும். அத்தகைய சபையின் மற்றைய இரண்டு உறுப்பினர்களுள் ஒருவர் பொலிசுத் தலைவரின் நியமத்தர் ஒருவராகவும் மற்றையவர் பிரதான நிறைவேற்றுநரின் நியமித்தர் ஒருவராகவும் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பதவியுயர்வுகள்

4.1 ஏதேனும் மாகாண சபை இடப்பரப்பிலுள்ள ஏதேனும் பொலிசு நிலையத்தில் சேவைபுரிகின்றவர்களும் பதவியுயர்வுக்கு அபேட்சகர்களாக உள்ளவர் களுமான எல்லாப் பொலிசு ஊர்காவலர்களும் பொலிசு சார்ஜண்டுகளும் தொடர்பில் பொலிசு ஊர்காவலர்களைப் பொலிசு சார்ஜண்டு பதவி வரிசைக்கும் பொலிசு சார்ஜண்டுகளை உபபரிசோதகர் பதவி வரிசைக்கும் அவ்வாறு பதவி யுயர்த்துவதற்கான முதனிலை நேர்முகப் பரீட்சைகள், மாகாணத்தின் பொலிசுத் தலைவரினால் தலைமை தாங்கப்பட்டதும், 3 ஆட்களைக் கொண்டதுமான சபை யொன்றினால் நடாத்தப்படுதல் வேண்டும் ; அச்சபையானது, அத்தகைய மாகாண சபையின் பிரதான நிறைவேற்றுநரின் நியமத்தர் ஒருவரையும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் நியமத்தர் ஒருவரையும் கொண்டிருத்தல் வேண் டும்.

5. இடமாற்றங்கள்

5.1 பொலிசுப் படையின் எல்லா உறுப்பினர்களும் இலங்கைத் தீவின் ஏதேனும் பாகத்திலுள்ள பொலிசு நிலையம் எதற்கும் அத்துடன் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முதலியன போன்ற பொலிசுப் படையின் சிறப்பறிவு தேவைப்படும் ஏதேனும் கிளைக்கும் இடமாற்றப்படுவர். பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, ஏதேனும் மாகாணப் சபை இடப்பரப்பிலிருந்து இன்னொரு மாகாண சபை இடப்பரப்புக்கான எல்லா இடமாற்றங்கள் பற்றியும் மாகாண சபை இடப்பரப் பொன்றிலிருந்து பொலிசுப் படையின் சிறப்பறிவு தேவைப்படும் கிளைக்கும் பொலிசுப் படையின் சிறப்பறிவு தேவைப்படும் கிளையிலிருந்து மாகாண சபை இடப்பரப்பொன்றுக்குமான எல்லா இடமாற்றங்கள் பற்றியும் முடிவுசெய்வார். ஏதேனும் மாகாணசபை இடப்பரப்பினுள் செய்யப்படும் நாளாந்த இடமாற்றங்கள், பிரதான நிறைவேற்றுநருடனை கலந்தாலோசனையின் பின்னர் அத்தகைய மாகாணத்தின் அதன் பொலிசுத் தலைவரினால் செய்யப்படும்.

5.2 ஏதேனும் மாகாண சபை இடப்பரப்பினுள் உள்ள பொலிசு நிலையங்க ளில் சேவைபுரிகின்ற பொலிசுப் படையின் உறுப்பினர்களுள் பெரும்பான்மை யினர், அத்தகைய இடப்பரப்பில் வதிவோருள் பெரும்பான்மையினரால் பேசப் படும் மொழியை நன்கறிந்தவர்களாக இருப்பர் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்படும்.

இந்தியாவினால் முன்வைக்கப்பட்ட மாற்றுப் பிரேரணை : இலங்கை தரப்பு முன்னிலைக்கு மீள்வுறும்

(5.2 ஏதேனும் மாகாண சபை இடப்பரப்பினுள் உள்ள பொலிசு நிலையங்களில் சேவைபுரிகின்ற பொலிசுப் படையின் உறுப்பினர்களுள் ஆகக்குறைந்தது 80 சதவீதமாவது, மேலே 3 ஆம் பந்திக்கிணங்க மாகாண சபை இடப்பரப்புகளினுள் ஆட்சேர்க்கப்பட்டோராவர் என்பது உறுதிப்படுத்தப்படும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஒழுக்காற்று விசாரணைகள்

6.1 ஏதேனும் மாகாண சபை இடப்பரப்பினுள் உள்ள ஏதேனும் பொலிசு நிலையத்தில் சேவை புரிகின்ற பொலிசுப்படை உறுப்பினர் எவருக்குமெதிராகப் பொதுமக்கள் உறுப்பினரொருவரினால் ஏதேனும் முறைப்பாடு செய்யப்படுமிடத்தும், அத்தகைய முறைப்பாடு சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் குழாமொன்றினாலான விசாரணையை அனுமதிக்குமிடத்தும், அத்தகைய மாகாணத்தின் பிரதான நிறைவேற்று நரின் நியமத்தர் ஒருவர் அத்தகைய ஒவ்வொரு குழாத்தினதும் உறுப்பினராதல் வேண்டும்.

7. ஒழுங்கைப் பேணிக்காத்தலும், குற்றத்தடுப்பும், கண்டுபிடிப்பும், புலனுய்வும்

7.1 ஏதேனும் மாகாணத்தின் பொலிசுத் தலைவர், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் முழு மொத்தக் கட்டுப்பாட்டுக்கும் பணிப்புக்கும் கீழ் தொடர்ந்திருக்கையில், மாகாணத்தினுள் பொது ஒழுங்கைப் பேணிக்காத்தல் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும், மாகாணத்துக்கு மட்டும் இயைபான எல்லாத் தவறுகளையும் தடுத்தல், கண்டுபிடித்தல், புலனுய்வு செய்தல் என்பன தொடர்பிலும், அத்துடன் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் நியதிகளின்படி சட்டத்துறைத்தலைமையதிபதியின் தத்துவங்களுக்கமைய, அத்தகைய மாகாணத்தினுள் உள்ள எல்லா நீதிவான் நீதிமன்றங்களினுலும் ஆரம்ப நீதிமன்றங்களினுலும் விளக்கப்படக்கூடிய அத்தகைய எல்லாத் தவறுகளும் தொடர்பில் அவற்றிலான எல்லாக் குற்றவழக்குகளையும் தொடுத்தல் தொடர்பிலும் பிரதான நிறைவேற்றுநருக்கு விடையிறுக்கப்பாத்திரவாளியாவார்.

7 . 2 மேலே 7.1 என்னும் பந்தியின் ஏற்பாடுகள் பின்வரும் தகைமைகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும் :—

7 . 2 . 1 சட்டமும் ஒழுங்கும் சீர்குலையக்கூடுமென்ற நியாயமான அச்சத்தை ஏற்படுத்துவதும் அல்லது எழுப்புவதும், அரசாங்கத்தின் அதிகாரத்தை எதிர்பார்ப்பதுமான ஏதேனும் மேலதிகச் சட்டக் கிளர்ச்சி அல்லது இயக்கம் ஏதேனும் மாகாண சபை இடப்பரப்பில் தொடங்கப்படுமிடத்து, பொலிசுத் தலைவர், அத்தகைய மாகாணத்தினுள் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிக்காப்பதுக்குப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்குப் பொறுப்பாளியாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 . 2 . 2 ஏதேனும் மாகாண சபை இடப்பரப்பினுள் சட்டமும் ஒழுங்கும் சீர்குலையுமிடத்து அல்லது சீர்குலையும் ஆபத்து உள்ளவிடத்து, அத்தகைய மாகாணத்தின் பொலிசுத் தலைவர், அத்தகைய மாகாணத்தினுள் சட்டத்தையும் ஒழுங்கையும் மீண்டும் நிலை நாட்டுவதற்கு அல்லது பேணிக்காப்பதற்குப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்குப் பொறுப்பாளியாவார் என்பதுடன், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியும் அத்தகைய மாகாணத்தினுள் சட்டத்தையும் ஒழுங்கையும் மீண்டும் நிலைநாட்டுவதற்கு அல்லது பேணிக்காப்பதற்கு சிறப்பு அதிரடிப் படையினரை ஈடுபடுத்துவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

7 . 2 . 3 பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, பிரதான நிறைவேற்று நருடனை கலந்தாலோசனையின் பின்னர் , ஏதேனும் மாகாண சபை இடப்பரப்பினுள் புரியப்பட்ட ஏதேனும் தவறு, குற்றப் புலனுய்வுத் திணைக்களத்தினுல் புலனுய்வு செய்யப்படுவது தேசிய நலனுக்கு அல்லது விடயத்தின் சிக்கல் காரணமாக அவசியமானதென அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய தவறு குற்றப் புலனுய்வுத் திணைக்களத்தினுல் புலனுய்வு செய்யப்படுதல் வேண்டுமெனப் பணிப்பதற்குப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி உரித்துடையவராதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரம் II

காணிப் பயன்பாடு காணி அபிவிருத்தி என்பன பற்றிய கொள்கை

1. தேசியக் கொள்கை

1.1 இலங்கைத்தீவு முழுவதற்கும் காணிப் பயன்பாடு, காணி அபிவிருத்தி என்பன தொடர்பாகத் தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைத்தலும் செயற் படுத்தலும் மத்திய அரசாங்கத்தினுல் தனக்கென்று ஒதுக்கப்பட்ட விடயமும் பணியுமாகும்.

1.2 தேசியக் கொள்கையை வகுத்துமைப்பதற்கும் செயற்படுத்துவதற்கும், மாகாண/மாவட்ட அதிகாரிகளிடமிருந்து பெறப்படும் முறையீடுகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் காணிப் பயன்பாட்டு ஆணைக்குழுவொன்றைத் தாபிக்க உத்தேசிக்கப்படு கின்றது.

2. சிறு காணி அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

2.1 ஒரு மாகாணத்தினுள்/மாவட்டத்தினுள் சிறு கருத்திட்டங்கள் தொடர் பில் காணிப் பயன்பாடும் காணி அபிவிருத்தியும், தேசியக் கொள்கைக்கமைய, மாகாண/மாவட்ட சபைக்கு வந்துற்ற தத்துவங்களின் நோக்கினுள் இருத்தல் வேண்டும்.

2.2 அத்தகைய குடியிருப்புத் திட்டங்களில் காணிகளின் குறித்தொதுக்கல்க ளைப் பெறுவோரைத் தெரிவுசெய்வதில், குடியிருப்புத்திட்டம் எந்த இடப்பிரதேசத் தில் அமைந்துள்ளதோ அந்த இடப்பிரதேசத்தின் காணித் தேவைகளுக்கு முதன்மை கொடுக்கப்படும் என்பதுடன், அதன் பின்னர், குடியிருப்புத்திட்டம் எந்த மாகாணத்தில்/மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாகாணத்திலிருந்து/மாவட் டத்திலிருந்து பெறப்படும் காணிகளுக்கான விண்ணப்பகாரர்களின் உரிமைக் கோரிக்கை சீர்தூக்கிப்பார்க்கவும்படலாம்.

3. தேசியக் காணி அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

3.1 பாரிய தேசியக் குடியிருப்புத்திட்டங்கள் தேசிய இன விகிதங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். எவ்வாருயினும், அத்தகைய திட்டங்களைச் செயற்படுத்துவதில், எல்லாச் சமுதாயத்தினருக்கும் ஒப்புரவான ஒருமுறையிலும் பின்வரும் அளவுகோல்களையும் கவனத்திற்கொண்டும் குறித்தொதுக்கல்களைப் பெறுவோரின் தெரிவுகள் செய்யப்படும் :

(அ) சொல்லப்பட்ட திட்டத்தின்மூலம் தமது காணிகளிலிருந்து அல்லது குடியிருப்புக்களிலிருந்து இடம்பெயர்க்கப்பட்ட ஆட்களின் காணிக்கான உரிமைக்கோரிக்கைகளுக்கு முதன்மை கொடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) தேசிய அல்லது பாரிய குடியிருப்புத்திட்டமொன்றில் உள்ள காணி, ஏதேனும் குறிப்பிட்ட சமுதாயத்தின் தேசிய இனவிகிதத்தை மேவுவதற் குப் பகிர்ந்தளிக்கப்படாத பட்சத்தில், நிரப்பப்படாத அளவானது, வேறொரு சமகால, தேசிய அல்லது பாரிய குடியிருப்புத்திட்டத்திலிருந்து, அல்லது அத்தகைய சமகால தேசிய அல்லது பாரிய குடியிருப்புத் திட்டமெதுவும் இல்லாவிடின், உடன்பட்டுக்கொள்ளப்படவேண்டிய ஒரு காலஎல்லையினுள் அத்தகையவொரு திட்டத்தில், அச்சமுதாயத்தின ரான ஆட்களுக்குக் குறித்தொதுக்கப்படலாம்.

(இ) சொல்லப்பட்ட திட்டம் சம்பந்தப்பட்ட காணி எந்த மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் காணித் தேவைகள்.

4. மகாவலி அபிவிருத்தித்திட்டம் மகாவலி அதிகாரசபையுடன் பின்னர் ஆராயப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரம் III

கமத்தொழிற்றுறையில் அதிகாரப் பரவாக்கல்

1. தேசியக் கொள்கை

இலங்கைத்தீவு முழுவதற்குமான கமத்தொழில் அபிவிருத்தி தொடர்பான தேசியக் கொள்கையை வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் மத்திய அரசாங்கத்தினால் தனக்கென்று ஒதுக்கப்பட்ட ஒரு விடயமாகவும் பணியாகவும் இருக்கும்.

இது அடிப்படை விலைகள், மானியங்கள், காப்புறுதிக் கட்டுப்பணங்கள், நட்டோத்தரவாதங்கள் என்பனவற்றைக் தீர்மானித்தலையும், மாவட்டத்துக்கு/மாகாணத்துக்கு இடையே ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துதலையும் தேசிய இலக்குகளை எய்துதலையும், திணைக்களப் பண்ணைகளை நிருவகித்தலையும், கமத்தொழில் ஆராய்ச்சி, தாவரத் தொற்றுத் தடைகாப்பையும், நடுகைப் பொருட்களை இறக்குமதி செய்தலையும் ஏற்றுமதி செய்தலையும் உள்ளடக்கும்.

2. பின்வரும் தத்துவங்கள் மாகாண சபைகளினால் பொதுவாகப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் :—

(1) மகாணத்தில்/மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு முகவர் நிலையங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துகின்ற மாவட்டக் கமத்தொழில் வரவுத்திட்டமொன்றைத் தயாரித்தலும், நிறைவேற்றுதலும், வழங்கல்களையும், சேவைகளையும் ஒழுங்குபடுத்தலும், விளைபொருளைச் சந்தைப்படுத்துதலும்.

(2) போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம் உட்பட்ட விசாலிப்புச் செயற்பாடுகள்.

(3) கமநலச் சேவைகள் குழுக்களை மேற்பார்வை செய்தல், கமஞ்சார் ஆளடையான அட்டைகளை வழங்குதல், அத்துடன் கமத்தொழிற் காணிகள் இடாப்புகளைத் தயாரித்தல் என்பன உட்பட கமநலச் சேவைகள் சட்டத்தில் தரப்பட்டுள்ள தத்துவங்களுள் அதிகமானவற்றைப் பிரயோகித்தல்.

(4) சிறிய அளவினவான நீர்ப்பாசன வேலைகளை மறுசீரமைத்தலும் பேணுதலும்.

(5) சிறு பயிர்களுக்கான விசாலிப்பு நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தலும், தனிப்பட்ட நாற்றுமேடைகளை ஒழுங்குபடுத்தலும், கமத்தொழிலோடுறவு பட்ட கைத்தொழில்களைத் தாபித்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரம் IV

கைத்தொழில்

1. கைத்தொழில் அபிவிருத்திபற்றிய தேசியக் கொள்கையொன்றை வகுத் தமைத்தலும், செயற்படுத்தலும் மத்திய அரசாங்கத்துக்குரிய ஒரு கருமமாகும்.

2. இதற்கமைய, மாகாண சபைகள் அவற்றின் சொந்த அதிகார இடப்பரப்பு களினுள் கைத்தொழில்களைத் தாபித்து மேம்படுத்துவதற்குத் தத்துவமுடையன வாகும்.

3. ஒருசீர்மை திட்டமிடப்பட்ட அபிவிருத்தி, அத்துடன் தேசிய மூலவளன் களின் தகுந்த பயன்பாடு என்பனவற்றின் நலன்கருதி, மத்திய அரசாங்கம், கைத்தொழில்களைப் பதிவுசெய்தல், தகவலையும், தரவுகளையும் சமர்ப்பித்தல், சம்பள, விலைகுறித்தற்கொள்கைள், சூழல் நியமங்கள், தரம் முதலியன போன்ற தேவைப் பாடுகளைச் சுமத்துவதற்கு உரிமையுடையதாகும்.

4. புதிய கைத்தொழில் அபிவிருத்திக்கான உத்தேசங்களின் அமைச்சு மதிப்பீடு, முதலீடானது கடன்களை உட்படுத்துமிடத்து இப்போதுள்ளவாறு தொட ரும். ஏலவேயுள்ள அரசுக்குச் சொந்தமான கைத்தொழில்கள் மாகாண சபைகளுக் குக் கைமாற்றப்படுமென உட்கருதப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரம் V

கல்வி

1. கல்வியும் கலாச்சாரக் கருமங்களும்

(எதிர்பார்க்கப்பட்டுள்ள பரவலாக்கல் திட்டத்தில், கலாச்சாரக் கருமங்களும் இரண்டாவது மட்டம் வரையான கல்வியும் தொடர்பான பெருமளவினவான தத்துவங்கள், மாகாண சபைக்கு வந்துறும். அரச நிதிகள் இல்லாமல் தனிப்பட்ட பல்கலைக்கழகங்களைத் தாபித்து முகாமை செய்வதற்கு மாகாண அதிகாரிகளுக்குள்ள உரிமையையும் இத்தத்துவங்கள் உள்ளடக்கும்.)

கல்வி தொடர்பான அதிகாரப் பரவலாக்கலின் அளவுபற்றிய விரிவான உத்தேசங்கள் ஆராயப்பட்டுவருகின்றன ; அவை மேலும் ஆராயப்படலாம்.

தேசிய கல்விக் கொள்கை

இது ஓரங்காட்டுவதாக இருக்கமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரம் VI

கலாச்சாரம்

கலாச்சாரச் செயற்பாடுகளின் மேம்பாடும் நடாத்துகையும் மாகாண சபைகளுக்குக் குறித்தொதுக்கப்படும். மத்திய அரசாங்கத்தினால் எவையேனும் நிதிகள் அளிக்கப்படின் அவற்றின் மீது மத்திய அரசாங்கம் மேற்பார்வைக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும். மாகாண சபைகள் அவற்றின் அந்தந்த இடப்பரப்புகளினுள் கலாச்சாரச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதில் பிரதேச சபைகளுக்கு உதவியளிக்கும்.

மாகாண சபைகளின் தத்துவங்கள், கலைகள், நாடகம், சங்கீதம், நடனம், இலக்கியம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்தலையும் விழாக்களை நடாத்துவதில் உதவியளித்தலையும் உள்ளடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு - II

அரசாங்கத்தினால் பிரத்தியேகமாகத் தனக்கென்று ஒதுக்கப்பட வேண்டிய விடயங்களும் பணிகளும்

1.1 எல்லா விடயங்களும் பணிகளும் மீதான தேசியக் கொள்கை

1.2 பாதுகாப்பு

1.3 உள்நாட்டுப் பந்தோபஸ்து

1.4 இத்தத்துவங்களுட் சில மாகாண சபைகளுக்கும் மாவட்ட சபைகளுக்கும் வந்துறும் அளவுக்கமைய, சட்டமும் ஒழுங்கும் குற்றத் தடுப்பும் கண்டுபிடிப்பும்

1.5 வெளிநாட்டு அலுல்கள்

1.6 அஞ்சல், தொலைத் தொடர்புகள்

1.7 நீதித்துறையுடனும் நீதிமன்றக் கட்டமைப்புடனும் அது தொடர்பு பட்ட அளவுவரை நீதி

1.8 தேசிய அரசிறை, பணக்கொள்கை, அத்துடன் வெளிநாட்டு மூலவளங்கள் என்பன தொடர்பாக நீதி

1.9 வெளிநாட்டு வியாபாரம்

1.10 கப்பற்றுறைகளும் துறைமுகங்களும்

1.11 வான் சேவையும் வானூர்தி நிலையங்களும்

1.12 தேசியப் போக்குவரத்து

1.13 ஆறுகளும் நீர்வழிகளும்

1.14 கனிப்பொருட்களும் சுரங்கங்களும்

1.15 ஒலிபரப்பு

1.16 தொலைக்காட்சி

1.17 குடிவரவும் குடியகல்வும் பிரசாவுரிமையும்

1.18 சுங்கங்கள்

1.19 தேர்தல்கள் — சனதிபதி, பாராளுமன்ற, இடைநிலை அளமட்டக் கூறுகள்

1.20 கப்பற்றொழிலும் கடற்செலவும்

1.21 ஆள்புல நீர்ப்பரப்புகளும் பொருளாதார வலயங்களும்

1.22 சனத்தொகை மதிப்பும் புள்ளிவிபரங்களும்

1.23 உயர்தொழில்சார் தான்புரிதொழில்களும் பயிற்சியும்

1.24 குறிப்பாக வேறுவகையில் குறித்தொதுக்கப்படாத எல்லா விடயங் களும் பணிகளும்

1.25 மாகாணத்துக்கு/மாவட்டத்துக்கு இடையேயான வியாபாரமும் வர்த்தகமும்

1.26 இத்தத்துவங்களிற் குறித்த சில, மாகாணசபைகளுக்கு/மாவட்ட சபைகளுக்கு வந்துறும் அளவுக்கு அமைய, அரச காணிகளும் முற்கரையும்

1.27 தேசிய தேசிய சுவடிச்சாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்தற்கான நிபந்தனைகள்

இவ்வுடன்படிக்கையை முழுமையாகச் செயற்படுத்தலானது, பின்வருவனவற்றுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்ற நிபந்தனையின் மீதாதல் வேண்டும் :—

1. இலங்கை அரசாங்கத்துடன் தற்போதைய பிணக்கில் ஈடுபட்டுள்ள எல்லா ஆட்களும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினதும், குறிப்பாக அரசகருமமொழி, தேசிய மொழிகள், தேசியக்கொடி அத்துடன் தேசிய கீதம் என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளினதும் செல்லுபடியாந்தன்மையை ஏற்று அங்கீகரிப்பதுடன், ஈழம் என்ற தனி வேருன நாடொன்றை உருவாக்குவதற்கான கோரிக்கையையும் கைவிட்டுவிடுவர்.

2. எல்லாத் தீவிரவாதக் குழுக்களும், வன்செயல்களில் சட்டவிரோதமான அல்லது சட்டமுறையற்ற செயல்களில் ஈடுபட்டுள்ள ஆட்களும் அத்தகைய நடவடிக்கையைத் தவிர்த்து, எதிர்காலத்தில் வன்செயலைத் துறந்து, வன்செயல்களில் ஈடுபட்டுள்ள ஆளணியினரையும் குழுக்களையும் கலைத்து, இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள பயிற்சி முகாம்களை மூடிவிட்டு, சமாதானத்தையும் வழமையான நிலைமையையும் மீண்டும் நிலைநாட்டும் செய்முறையில் பொதுவாக உதவுவர்.

3. படைக்கலங்கள், வெடிமருந்துகள் மற்றும் வேறு இராணுவச்சாதனங்கள் என்பனவற்றை அதிகாரமளிக்கப்படாது உடைமையில் வைத்திருக்கும் எல்லா ஆட்களும், அத்தகைய பொருட்களை ஒரு மாத காலப்பகுதியினுள் இலங்கை அரசாங்கத்தினால் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைப்பர்.

4. வழமையாக நிலைமையை மீட்டும் செய்முறையில் பாகமாக பாதிக்கப்பட்ட இடப்பரப்புகளிலான பந்தோபஸ்து தொழிற்பாடுகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு அவசரகால நிலைமை நீக்கப்படும்.

5. இரண்டாம், மூன்றும் பந்திகளின் கீழான நடவடிக்கை பூர்த்தியாக்கப்பட்டவுடன், இலங்கை அரசாங்கம் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தும் :—

(அ) யூலை 1983 முதல் ஒகத்து 1985 வரையிலான காலப்பகுதியின்போது இனக்கலவரங்கள் சம்பந்தமான தவறுகளுக்காகப் புலனாய்வின் கீழுள்ள விடயங்களில் ஆட்களுக்கெதிரானவையும் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் முடிவுறாதுள்ளவையுமான குற்றவழக்குகள் மீளப்பெறப்படும் ;

(ஆ) அத்தகைய தவறுகளுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்கள், மன்னிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவர்,
அத்துடன்

(இ) அத்தகைய ஏதேனும் தவறுதொடர்பில் புதிய குற்றவழக்குகள் தொடங்கப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தற்போதைய பிணக்கில் ஈடுபட்டுள்ள எல்லா ஆட்களும் பாதிக்கப்பட்ட இடப்பரப்புகளில் குடியியல் நிருவாகத்தையும் சட்ட வலுவுக்கிடுகையையும் உரியமுறையிலும் ஒழுங்காகவும் நடாத்துவதற்குத் தேவையான நிலைமைகளை உருவாக்குவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கமாட்டார்கள்.

7. தற்போதைய பிணக்கில் ஈடுபட்டுள்ள எல்லா ஆட்களும், இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள எல்லா அகதிகளும் தமது மூல வசிப்பிடங்களுக்குத் திரும்பவும் அங்கு மீளக் குடியிருக்கவும், அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கவும் அவசியமான நிலைமைகளை உருவாக்குவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கமாட்டார்கள்.

8. இவ்வுடன்படிக்கை வலுவுக்கு வருவதன்மேல் இலங்கை அரசாங்கம், இலங்கையில் எல்லாவிதமான பயங்கரவாதத்தையும் தீவிரவாத நடவடிக்கைகளையும் பூண்டோடு ஒழிப்பதற்கு அவசியமானவாருன நடபடிகளை மேற்கொள்வதற்கு முற்படும்.

9. மேலே 2 ஆம், 3 ஆம் பந்திகளிற் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உரியமுறையில் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் தோதான அமைப்புகளைத் தாபிக்கும்.

" முதலெழுத்தொப்பமிடப்பட்டது.

ஆர். எம். 30/8
இ. எஃப் 30/8/85.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு பி. ப. 4.45 மணியளவில் தொலைபேசிமூலம் விடுத்த கூற்றின் விபரம்

இலங்கை தூதுக்குழுவில் இடம்பெற்ற மூன்று உறுப்பினர்களும், இலங்கை உயர் ஸ்தானிகரும், செப்தெம்பர் 10 ஆம் தேதியிலிருந்து 13 ஆம் தேதிவரை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேட்ட அலுவலர்களுடன் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். அவர்கள் வெளிநாட்டுச் செயலாளரையும் சென்று சந்திந்தனர்.

இலங்கைத் தூதுக் குழு, கலாநிதி எச். டபிள்யூ ஜயவர்தன அவர்களால் புதுடில்லி விஜயத்தின்போது வரையப்பட்ட பத்திரத்தில் எழுப்பப்பட்ட குறித்த சில பிரச்சினைகளுக்குரிய சில விளக்கங்களை அளித்தது. அன்றியும் செயலளவில், அதில் அடங்கியுள்ள பிரேரணைகளுள் சில எவ்வாறு செயற்படக்கூடும் என்பது பற்றிய உண்மைகளையும் விபரங்களையும் தெரிவித்தது. கலாநிதி. எச். டபிள்யூ. ஜயவர்தனவின் விஜயத்தின்போது வரையப்பட்ட பத்திரமானது, சம்பந்தப்பட்ட திறத்தவர் பரஸ்பரம் இணங்கிக்கொள்ளும் விதமாகப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு ஓர் அடிப்படையாக அமையும் எனக் குறிப்பிடுதல் பொருந்தும்.

13 செப்தெம்பர், 1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைவு உடன்பாட்டொழுங்கை உருவாக்குவதற்கு முன்னரும் பின்னரும் இடம் பெற்ற கலந்துரையாடல்களின்போது, குறித்த சில ஐயங்கள் தோன்றின. இலங்கை அரசாங்கம் தப்பபிப்பிராயத்தைத் தவிர்த்துக்கொள்ளுமுகமாக, குறிப் பாக வாசகம் 12 தொடர்பில், பின்வரும் விளக்கங்களை அளிக்க விரும்புகின்றது :

வாசகம் 12

(அ) தெரிவுசெய்யப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர் மானிக்கையில் பின்வரும் கோட்பாடுகள் பிரயோகிக்கப்படும் :

(1) ஒவ்வோர் ஆயிரம் சதுர கிலோ மீற்றருக்கும் உறுப்பினரொருவர் ; அத்துடன்

(2) ஒவ்வொரு 40,000 குடினர்களுக்கும் உறுப்பினரொருவர்.

(ஆ) தற்போது எந்த மாகாணங்களில் எல்லா அபிவிருத்திச் சபைகளும் செயற்படுகின்றனவோ அந்த மாகாணங்களில் 12 ஆம் வாசகத்தின் அடிப்படையில் தேர்தல்கள் நடாத்தப்படமாட்டா.

ஒரு மாகாணத்தில் நடைமுறையிலுள்ளவையானது அபிவிருத்திச் சபைகள், 15 ஆம் வாசகத்தின் நியதிகளுக்கிணங்க, அவையாகவே மாகாணசபையொன்றை அமைக்க வேண்டுமா என்பது பற்றி தீர்மானிக் கும். அப்படி அமைத்தால் மாகாண சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அபிவிருத்திச் சபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பி னர்களாவர். அவ்வாறு அமைக்காவிட்டால், நடைமுறையிலிருக்கும் அபிவிருத்திச் சபைகள் தொடர்ந்து இருக்கும். இவ்விரு விடயத்திலும் உடனடியாக தேர்தல் நடாத்தப்படமாட்டாது. நடப்புப் பதவிக்காலப்ப குதி முடிவுற்றதன்மேல் புதிய தேர்தலொன்று நடாத்தப்படும். மேற் குறித்த தீர்மானத்தின் பயனைக்கொண்டு அபிவிருத்திச் சபைகள் தொடர்ந்து இருக்கும் மாகாணங்களின் விடயத்தில், தேர்தலானது அபிவிருத்திச் சபைகளுக்கானதாகவிருக்கும். 15 ஆம் வாசகத்தின் நியதிகளின்படி எந்த அபிவிருத்திச் சபைகள் மாகாண சபையொன்றை அமைப்பதென முடிவு எடுக்கின்றனவோ அந்த மாகண சபைகளின் விடயத்தில் மாத்திரம் 12 ஆம் வாசகத்தின் அடிப்படையில் புதிய தேர்தலொன்று இடம்பெறும்.

(இ) ஆகவே எந்த மாகாணங்களில் எல்லா அபிவிருத்திச் சபைகளும் அல்லது அவற்றுள் ஒருசில தற்போது இயங்கவில்லையோ அந்த மாகாணங்களில் மாத்திரமே 12 ஆம் வாசகம் உடனடியாக நடைமுறைக்கு வரும். அச்சந்தருப்பங்களில், எல்லா அபிவிருத்திச் சபைகளினூலுமான முன் னைய முடிவொன்று சாத்தியப்படாது என்பதால், மாகாண சபைமூலம் விருப்புத் தெரிவை அடுத்துப் பின்னரான பெரும்பான்மைகொண்டு செய்துகொள்வதற்கு இடமளிக்கபபட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) 12 ஆம் வாசகத்தில், குறிப்பீடு செய்யப்பட்ட "நிருவாக மாவட்டங்கள்" தற்போது இருகின்றனவான மாவட்டங்களே என்பதையும் வலியுறுத்துதல் வேண்டும். தற்போது "நிருவாக மாவட்டங்கள்", 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சட்டத்தின்கீழ் உள்ளவவையான மாவட்டங்களும் கிளிநொச்சியுமே ஆகும். இம்மாவட்டங்களுக்கு மீள எல்லை வரையறுக்கும் உத்தேசமில்லை.

(உ) ஆகவே 12 ஆம் வாசகத்தின்கீழான தேர்தலொன்று ஒவ்வொரு தொகுதியையும் (அதாவது நிருவாக மாவட்டத்தையும்) பிரதிநிதித்துவம் வகிப்பதற்கான உறுப்பினர்களின் தேர்தலாக அமையுமென்பதுடன், உடன்பாட்டொழுங்கின் ஏனைய வாசகங்களின்கீழ் எடுக்கப்படும் முடிவுகளுக்கிணங்க மாகாணத்தில், இந்நிறுவனங்களுள் எது இயங்குகின்றது என்பதைப் பொறுத்து, இந்த உறுப்பினர்கள் :—

(i) மாகாண சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாகவோ,
(ii) மாவட்ட சபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாகவோ அமைவதோடு பணியுமாற்றுவர்.

வாசகம் 13

இந்த வாசகத்தின் கீழ் தமது விருப்புத் தெரிவைச் செய்த அந்தப் பாராளுமன்ற உறுப்பினரொருவருக்கு அத்தகைய விருப்புத் தெரிவைப் பின்னர் மாற்றிக் கொள்ளுவதற்கு வாய்ப்பளிக்கக் கருதப்படுகின்றது. ஆகவே பதவிவழி உறுப்பினரொருவராக இருக்க விரும்பும் பாராளுமன்ற உறுப்பினரொருவர், பின்னர் அத்தகைய உறுப்பினரொருவராக இல்லாதிருப்பதற்கு முடிவு செய்யலாம். இதேபோன்று பதவிவழி உறுப்பினரொருவராக இருக்க விரும்பாதவரான பாராளுமன்ற உறுப்பினரொருவர் உறுப்பினரொருவராக இருப்பதற்கு பின்னர் முடிவு செய்யலாம்.

CENTRE FOR POLICY ALTERNATIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைவு உடன்பாட்டொழுங்கின் குறித்த சில அமிசங்களைத் தெரிவு படுத்துவதற்கான பிற்சேர்க்கை

வாசகம் 15

1. " தாபிக்கப்பட்ட " என்பதற்குப் பதிலாக " அமைக்கப்பட்ட " என்பதனை இடுக.

2. பந்தி 15 (ஆ) என்பதில் " 33 " என்பதற்குப் பதிலாக " 35 " என்பதனை இடுக.

3. வாசகம் 15 இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு மாகாண சபையொன்று அமைக்கப்பட்டால், அத்தகைய மாகாணசபை அதன் தத்துவங்களையும் பணிகளையும் அத்தகைய அபிவிருத்திச் சபைகளிடம் கையளிப்பதற்குத் தீர்மானத்திலன்றி, அத்தகைய மாகாணத்தில் இருந்துவரும் அபிவிருத்திச் சபைகள் இல்லாதொழிதல் வேண்டும். ஒரு மாகாணசபை அத்தகைய அபிவிருத்திச் சபைகளுக்கு சட்டவாக்கற் தத்துவங்கள் எவற்றையும் கையளித்தலாகாது. கையளிப்பதன்மேல், குறித்த சில வேறு மட்டுப்பாடுகள், (உ-ம் உள்ளகச் சட்டமும் ஒழுங்கும் தொடர்பாக) அவசியமானவையாகலாம்.

4. மாகாணசபை அமைக்கப்பட்டது என்பது எவ்வாறிருப்பினும், (மாவட்ட மட்டத்தில் தத்துவங்கள், கடமைகள் பணிகள் என்பவற்றை அரசாங்கம் பிரயோகிக்கும், புரியும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக) நிருவாக மாவட்டம் ஒவ்வொன்றிலும் உள்ளதான நிருவாகக் கட்டுக்கோப்பைத் தொடர்ந்து பேணிக் கொள்வது அரசாங்கத்துக்கு அவசியமானதாகும். மாகாண சபைகளுக்கும், அதேபோன்ற மாவட்ட மட்டத்திலான நிருவாகக் கட்டுக்கோப்புக்கள் தேவைப்படலாம்.

வாசகம் 16

1. ஒரு மாகாணத்திலுள்ள பெரும்பாலான மாவட்டங்கள் மாகாண சபையின் பாகமொன்றுக இல்லாதிருக்க முடிவுசெய்யுமிடத்து, அத்தகைய மாகாணத்திற்கு மாகாண சபையெதுவும் அமைக்கப்படுதலாகாது. மாகாணத்திலுள்ள மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறன, 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ், அபிவிருத்திச் சபையொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதன்கீழ் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றை அவை கொண்டுள்ளளதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

2. ஒரு மாகாணத்திலுள்ள பெரும்பாலான மாவட்டங்கள் அவ்வாறு முடிவு செய்யாதவிடத்து, மாகாணசபையானது அத்தகைய அபிவிருத்திச் சபைகளுக்கு, அதன் தத்துவங்களையும், பணிகளையும் கையளிக்கத் தீர்மானித்தாலன்றி, அத்தகைய மாகாணத்தில் அபிவிருத்திச் சபைகள் இயங்குதலாகாது. மாகாண சபையொன்று அத்தகைய அபிவிருத்திச்சபைகட்கு எவையேனும் சட்டமாக்கல் தத்துவங்களைக் கையளித்தலாகாது. கையளிப்பின் மேல் வேறு குறித்தசில மட்டுப்பாடுகள் (உ-ம் உள்ளகச் சட்டமும் ஒழுங்கும் தொடர்பாக) அவசியமானவயாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மாகாண சபை அமைக்கப்பட்டது என்பது எவ்வாறிருப்பினும், (மாவட்ட மட்டத்தில் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றை அரசாங்கம் பிரயோகிக்கும், புரியும், நிறைவேற்றும் நோக்கத்துக்காக) நிருவாக மாவட்டம் ஒவ்வொன்றிலும் உள்ளதான நிருவாகக் கடடுக்கோப்பைத் தொடர்ந்து பேணிக் கொள்வது அரசாங்கத்திற்கு அவசியமானதாகும். மாகாண சபைகளுக்கும் அதேபோன்ற மாவட்ட மட்ட நிருவாகக் கடடுக்கோப்புகள் தேவைப்படலாம்.

4. பதினைரும் வாசகத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கு ஒரு மாற்று முறையாக (தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களினலான முடி பொன்றுக்குப் பதிலாக) மக்கள் தீர்ப்பு வாயிலாக மாவட்டமொன்றினது தேருநர்க ளின் முடிபொன்றை அறிவது பற்றி கலந்துரையாடப்படலாம்.

பின்வரும் அடிப்படையில் மாகாண சபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்க ளின் எண்ணிக்கை .

(அ) ஒவ்வொரு 1,000 சதுர கிலோ மீற்றருக்கு ஓர் உறுப்பினர் ; அத்துடன்

(ஆ) ஒவ்வொரு 40,000 குடிகளுக்கு ஓர் உறுப்பினர்.

	இடப் பரப்பு (ச.கி.மீ)	சனத் தொகை	தேர்ந்தெடுக் கப்பட்ட உறுப் பினர்கள்	பா. உ.	மொத்தம்
யாழ்ப்பாணம்	1140	7,38,788	1 18	10	29
கிளிநொச்சி	931	91,764	1 2	1	4
முல்லைத்தீவு	1966	77,189	2 2	1	5
மன்னர்	2002	1,06,235	2 3	1	6
வவுனியா	2645	95,428	3 2	1	6
			9 27	14	50
மட்டக்களப்பு	2464	3,50,333	2 8	4	14
அம்பாறை	4539	3,88,970	5 10	5	20
திருகோணமலை	2860	2,73,998	3 7	3	13
			10 25	12	47

தொகுதியொன்றில் (அதாவது மாவட்டம் ஒன்றில்) ஆக உளர்ந்த எண்ணிக்கையி னவான வாக்குகளைப் பெறும் கட்சிக்கு, நிரலிலுள்ள முதலாவது ஆள் எந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவாரோ அந்தப் பதவி (தவிசாளர் முதலியன) இல்லை என்பது காரணமாக " சலுகை " ஆசனங்கள் இருக்கமாட்டா என விதந்துரைக்கப் பட்டுள்ளது. மேலும், வெட்டுநிலைப்புள்ளி 5 % வீதத்திற்குக் குறைக்கப்பட வேண்டுமெனவும் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவலி அபிவிருத்தித் திட்டம்

1. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டமானது தொகுதிகள் அ, ஆ, இ, ஈ, எ, ஏ என்பவற்றின் அபிவிருத்தியை உள்ளடக்குகின்றது. தொகுதிகள் ஐ, ஒ, ஓ, ஔ, க என்பவற்றின் அபிவிருத்தி பற்றி இன்னமும் சிந்திக்கப்படவில்லையென்பதுடன் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னரே அது கவனத்திலெடுக்கப்படும்.

2. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் கிடைக்கத்தக்க நீர்ப்பாய்ச்சத்தகு புதிய காணியின் பரப்பளவுகள் தொடர்பிலான தற்போதைய நிலைமை, பின்னிணைப்பு I இல் தரப்பட்டுள்ளது. இப் பரப்பளவுகள் காணித்துண்டின் உண்மையான எல்லைக் குறிப்புச் செய்துமுடிந்ததும் 10% முதல் 15% வரை குறைக்கப்படும்.

3. தற்போது தொகுதி ஏ என்பதிலுள்ள குடியிருப்புக்கள் நிறைவேற்றப் பட்டுவிட்டனவென்பதுடன் தொகுதிகள் ஆ, இ, எ என்பவற்றிலான குடியிருப்புக் கள் இடம்பெற்றுக் கொண்டும் இருக்கின்றன. பின்னிணைப்பு II பார்க்க. ஏ, ஆ, இ, எ என்னும் தொகுதிகளிலுள்ள மொத்தம் 85,388 குடியிருப்புக்களிடையேயிருந்து இத்தொகுதிகளுக்குள்ளான 39,622 காணித் துண்டுகளின் குடியிருப்பு 1985, யூன் 30 வரையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏ, இ, ஆ, எ என்னும் தொகுதிகளில் இதுவரையிலுள்ள குடியிருப்பாளர்களின் இன ரீதியிலான அமைப்பு பின் வருமாறு :—

	சிங்களவர்கள்	தமிழர்கள்	முஸ்லீம்கள்
தொகுதி ஆ	5,790	323	137
தொகுதி இ	9,508	14	91
தொகுதி ஏ	22,156	27	822
தொகுதி எ	754	--	---

பின்னிணைப்பு II இலுள்ள III ஆம் நிரை, குடியிருப்புத் திட்டம் காரணமாக இடம்பெயர்ந்து அந்தந்தத் தொகுதிகளில் குடியிருந்தவர்களான ஆட்களின் எண்ணிக்கையைத் தருகின்றது. இப்புதிய குடியிருப்புக்கள் பின்னிணைப்பு II இன் IV ஆம் V ஆம் நிரைகளில் குறிப்பீடு செய்யப்பட்டிருப்பனவாகும். மீதியான 45,766 காணித் துண்டுகளின் குடியிருப்பு நிறைவேற்றப்படவுள்ளது.

4. தொகுதி ஆ 37,483 காணித் துண்டுகளைக் கொண்டது. இவற்றுள் 18,792 காணித்துண்டுகள் வட மத்திய மாகாணத்தின் பொலன்னறுவை மாவட்டத்திற்குள்ளும், 18,691 காணித்துண்டுகள் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்திற்குள்ளும் அடங்குகின்றன. இக்காணித்துண்டுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22,927 காணித்துண்டுகள் மாதுறு ஓயாவின் இடதுகரையிலமைந்து, மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் அடங்குவனவான காணித்துண்டுகளின் முழு அளவையும் உள்ளடக்கும். மீதியாகவுள்ள 14,506 காணித்துண்டுகளும், மட்டக்களப்பு மாவட்டத்திற்குள்ளான மாதுறு ஓயாவின் வலது கரைக்குள் அடங்குகின்றன — பின்னிணைப்பு III பார்க்க.

5. தொகுதி ஆ என்பதில் தேசிய இனவாரி விகிதத்தை அடிப்படையாகக் கொண்ட, தமிழ்பேசும் மக்களின் உரித்துரிமைகள் பிரதானமாக வலது கரையிலிருந்து கொடுக்கப்பட முடியும்.

6. தொகுதிகள் ஏ, இ, எ என்பவற்றிலிருந்தான தேசிய இனவாரி விகிதத்தை அடிப்படையாகக் கொண்ட தமிழ்பேசும் மக்களின் உரித்துரிமைகள், அ, ஆ என்னும் தொகுதிகளிலிருந்தும், தரப்பட்ட கால அளவொன்றுக்குள்ளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ள ஏனைய தொகுதிகளிலிருந்தும் பிரித்துவிட முடியும். தொகுதிகள் ஏ, இ, எ என்பனவற்றிலிருந்து அத்தொகுதிகளில் ஏலவே நிறைவேற்றப்பட்ட புதியகுடியிருப்புக்களிலிருந்து தமிழ்பேசும் மக்களுக்குச் சேர்மதியான, தேசிய இனவாரி விகிதத்தை அடிப்படையாகக் கொண்ட, காணித்துண்டுகளின் எண்ணிக்கையானது, ஏறக்குறைய 4,467 காணித்துண்டுகளாகவிருக்கும்.

7. காணித்துண்டொன்றுக்கு $2\frac{1}{2}$ ஏக்கர் என்ற அடிப்படையில் தொகுதி அ ஏறக்குறைய 14,300 காணித்துண்டுகளுக்கு ஏற்பாடு செய்யும். இவற்றுள் ஏறக்குறைய 3575 காணித்துண்டுகள் தேசிய இனவாரி விகித அடிப்படையில் தமிழ்பேசும் மக்களைச் சென்றடையும்.

எவ்வாருயினும், தொகுதி அ என்பதில் குறித்த சில இடப்பரப்புகளில் தெங்குப் பயிர்ச் செய்கை போன்ற பெருந்தோட்டச் செய்கையை அறிமுகப்படுத்துவதற்குத் தற்போது பிரேரணையொன்று செய்யப்பட்டுள்ளது. அவ்வாருயின் காணித் துண்டுகள் பரப்பளவில் பெரிதானவையாக இருக்கக்கூடும். இது காரணமாகத் தொகுதி அ என்பதிலுள்ள காணித்துண்டுகளின் எண்ணிக்கை குறையும். இவ்விடயம் குறித்து கொள்கை முடிபு எதுவும் இலங்கை அரசாங்கத்தால் இன்னமும் எடுக்கப்படவில்லை.

8. தொகுதிகள் ஈ, ஐ, ஒ, ஓ, ஔ, க என்பவற்றிலுள்ள குடியிருப்புக்கள், இக்கருத்திட்டங்கள் ஒவ்வொன்றும் அபிவிருத்தி செய்யப்படும்போது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படலாம். இக்கருத்திட்டங்களிலான அபிவிருத்தி தொடங்க இன்னமும் சில காலஞ் செல்லும்.

9. மகாவலி அதிகார சபைக்கு, மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் எவையேனும் கருத்திட்டங்களில், குடியிருத்துவதற்கான குறித்தொதுக்குநர்களைத் தெரிவுசெய்வதற்கு, விடயத்துக்கேற்றவாறு மாகாண சபைகளை அல்லது அபிவிருத்திச் சபைகளை அனுமதிப்பது சாத்தியமானதாகும். எவ்வாருயினும் மகாவலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார சபையால் தெரிவுசெய்யப்படுவதற்கென விதிக்கப்பட்ட அளவு கோல்களுக் கிணங்கவே இத்தெரிவு செய்யப்பட வேண்டும். அது மாகாண அல்லது அபிவிருத்திச் சபைகளால் செய்யப்படும். அத்தகைய எல்லாத் தெரிவுகள் தொடர்பிலும் தரவுகள் அளிக்கப்படவேண்டுமெனவும் தேவைப்படுத்தும்.

10. மேலும், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவு இடப்பரப்புக் குறித்து முடிபெடுக்கும் உரிமையையும் கொண்டிருக்கும். " தெரிவு இடப்பரப்பு " என்பது நாடெங்கணுமுள்ள எந்த இடப்பரப்புகளிலிருந்து குறித்தொதுக்குநர்கள் தெரிவு செய்யப்படுவரோ அந்த இடப்பரப்புகள் என்று பொருள்படும். இத்தெரிவு இடப்பரப்புகள் ஒவ்வொன்றிலுமிருந்து தெரிவு செய்யப்பட வேண்டிய குறித் தொதுக்குநர்களின் எண்ணிக்கையானது அந்த இடப்பரப்பிலுள்ள மக்களின் காணி யின்மை அல்லது காணித் தேவைப்பாடுகளுக்கிணங்க மகாவலி அதிகார சபையினுல் தீர்மானிக்கப்படும். ஆனுல் முற்போந்த பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டவாறு மாகாண சபைகளால் அல்லது அபிவிருத்திச் சபைகளாலேயே தெரிவு செய்யப்படமுடியும். எவ்வாருயினும், நாடெங்கிலுமிருந்து தெரிவு செய்யப்பட வேண்டிய குறித்தொதுக்குநர்களின் எண்ணிக்கை வெவ்வேறு சமூகங்களுக் கிடையிலான தேசிய இனவாரி விகிதத்துடன் இசைந்ததாகவிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவலி அபிவிருத்தித் திட்டம் — உருத்திட்டங்களின் கீழான புதிய நீர்ப்பாய்ச்சத்தகு காணிகளின் பரப்பளவு

நீர்ப்பாசனத் தொகுதி	புதிய நீர்ப்பாய்ச்சத்தகு பரப்பளவு (1969) யூஎன்டிபி/எவ்ஏஒ மூலமான திட்டம்	என்ஈடிஈசிஒ ஆய்வு மூலமான மீளாய்வுப்படி 1 செத்தெம்பர் '79		சாத்தியக்கூற்று அபிவிருத்தி ஆய்வுகளினதும் சூழல் கொள்கை மாற்றல்களினதும் விளைவாகச் செய்யப்பட்ட மீளாய்வுகளின் அடிப்படையிலான தற்போதைய நிலைமை — என்ஈடிஈசிஒ தொகைகளின் அடிப்படையில்	
	'000 ஏக்கர்	'000 ஏக்கர்	'000 ஹெக்	'000 ஏக்கர்	
அ	100.0	75.36	30.5	35.75	சாகித்திய ஆய்வு தொகுதி 1 யூன் 81
ஆ	118.1	118.11	47.8	92.48	அமுலாக்கல் திட்டமும் சாகித்திய ஆய்வும்
இ	73.6	52.88	21.4	47.02	அமுலாக்கல் திட்டமும் சாகித்திய ஆய்வும்
ஈ 1)	47.2	27.92	11.3	27.92	என்ஈடிஈசிஒ
ஈ 2)		9.14	3.7	9.14	என்ஈடிஈசிஒ
உ	10.0	-	-	-	கைவிடப்பட்டது (வஸ்கொமுவா)
ஊ	8.2	8.15	3.3	8.15	மீளாய்வு செய்யப்படலாம்
எ	6.4	6.42	2.6	6.43	அமுலாக்கல் திட்டம்
ஏ	56.9	-	-	56.9	(கருத்திட்டம் நிறைவுற்றது)
ஐ	87.8	87.7	35.5	87.72	என்ஈடிஈசிஒ
ஒ	24.8	49.17	19.9	49.17	என்ஈடிஈசிஒ
ஓ	19.4	19.52	7.9	19.52	என்ஈடிஈசிஒ
ஔ	76.5	76.35	30.9	76.35	என்ஈடிஈசிஒ
க	24.9	24.96	10.1	24.96	என்ஈடிஈசிஒ
	653.8			541.52	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள் இல. I
பின்னிணைப்பு II

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் தொடங்கியதிலிருந்து 1985 யூன் 30 வரையில் அமர்த்தப்பட்ட புதியகுடியிருப்புக்கள் — 21/2 ஏக்கர் நீர்ப்பாய்ச்சத்தகு காணித் துண்டுகளும் 1/2 ஏக்கர் வாழ்மனைகளும்

தொகுதி	காணித் துண்டுகளின் எண்ணிக்கை	கருத்திட்ட இடப் பரப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்யப்பட்ட குடியிருப்பாளர் —அதாவது மீளக் குடியிருப்போர்	கருத்திட்ட இடப் பரப்புக்கு வெளியி லுள்ள நிருமாண அமைவிடங்களி லிருந்தான இடம் பெயர்ந்த குடும்பங்கள்	(IV) தவிர்ந்ததான கருத்திட்ட இடப் பரப்புக்கு வெளியே யிருந்து கொணரப் பட்ட குடியிருப் பாளர்கள்	மகாவலித் திட் டத்திற்கு முன்னர் இருந்தவையும் தொகுதிகளுக்குள் அடங்குவதுமான குடியிருப்புத் திட்டங் களிலுள்ள காணித் துண்டுகள் தவிர்த்துக் குடியமர்ந்த மொத்தத் தொகை
(I)	(II)	(III)	(IV)	(V)	(VI)
ஏ	குடியிருப்பு நிறைவுற்றது	17,231 (75%)	1,709 (7.5%)	4,065 (17.5%)	23,005
ஆ	இக — 22,977 வக — 14,506	2,067 (33%)	1,389 (23%)	2,794 (44%)	6,250
இ	22,000	1,702 (18%)	5,586 (58%)	2,325 (24%)	9,613
ஈ	2,900	754 (100%)			754
					39,622

விளக்கக் குறிப்பு :

(1) நிரை III துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்படுவதற்கு முன்னரே, கருத்திட்ட இடப்பரப்புகளில் இத்தெரிவு செய்யப்பட்டோர் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் வதிந்துகொண்டும், தனியார்/அரச காணிகளைப் பயிரிட்டுக் கொண்டும் இருந்தனர். அவர்களுட் பெரும்பாலானவர்கள் புராதன கிராமவாசிகளாவர்.

(2) நிரை IV இவர்கள் நிருமாண அமைவிடங்களிலிருந்து விக்ரோறியா/கொத்மலை/தந்தெனிகலை நீர்த்தேக்கங்கள், வடிநில இடைக் கால்வாய் என்பனவற்றின் விளைவாக அமிழ்ந்திய காணிகளிலிருந்தும் அமர்ந்த இடம்பெயர்ந்த குடும்பங்களாகும்.

(3) நிரை V இவர்கள் கருத்திட்ட இடப்பரப்புகளுக்கு வெளியேயிருந்து சாதாரண நடவடிக்கை முறை மூலம், அரசாங்க அதிபரால் தெரிவு செய்யப்பட்ட குடியிருப்பாளர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு III

தொகுதி ஆ — மாவட்டங்களுக்கிணங்கக் காணித் துண்டுகளைப் பங்கீடு செய்தல் — 2 $\frac{1}{2}$ ஏக்கர் நீர்ப்பாய்ச்சத்தகு காணியும் $\frac{1}{2}$ ஏக்கர் வாழ்மனையும்

பொலனறுவை மாவட்டம்	மட்டக்களப்பு மாவட்டம்
18, 792	18, 691

விபரங்கள் கீழே

இடது கரை — காணித் துண்டுகளின் மொத்த எண்ணிக்கை — 22, 977

பொலனறுவை மாவட்டத்தில்	—	18, 792
மட்டக்களப்பு மாவட்டத்தில்	—	4, 185
மொத்தம்		22, 977

வலது கரை — காணித் துண்டுகளின் மொத்த எண்ணிக்கை — 14, 506

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14,506

—	மொத்த இடதுகரை	—	22, 977
—	மொத்த வலதுகரை	—	14, 506
			37, 483

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜாங்க அமைச்சர் கௌரவ பீ. சிதம்பரம் தலைமைதாங்கிய இந்தியப் பேராளர் குழுவினருடன் கலந்துரையாடியதன் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பிய பிரேரணைகள்

86.07.09

உள்ளடக்கம்

1. முன்னுரை
2. மாகாண சபைகள் பற்றிய குறிப்பு
3. சட்டமும் ஒழுங்கும் பற்றிய குறிப்பு (சட்டமும் ஒழுங்கும் தொடர்பான அதிகாரப் பரவலாக்கல் பற்றிய குறிப்பு — 1986 யூன் 25 ஆந் தேதி புதன்கிழமை நடைபெற்ற அரசியற் கட்சிகள் மாநாட்டில் மேன்மைதங்கிய சனாதிபதி விடுத்த அறிக்கை 86.06.25 இல் வெளியானது — மீளத்தரப்பட்டுள்ளது.)
4. காணி நிருணயம் பற்றிய குறிப்பு

அரசியற் கட்சிகள் மாநாட்டுச் செயலகம்,
ப. ஞா. ச. மா. ம.,
பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 7.
1986, யூலை மாதம் 09 ஆந் திகதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

இலங்கை அரசாங்கம் சில பிரேரணைகளை முன்வைத்து, அப்பிரேரணைகளை இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட தத்துவங்களின் கட்டமைப்புக்குள் பரிசீலனை செய்யப்படலாம் எனக் கூறுகிறது :

(i) இலங்கையின் ஐக்கியத்தையும் தன்னுதிபத்தியத்தையும் இறைமையையும் பேணல் ;

(ii) இலங்கை யாப்பின் ஒற்றையாட்சிப் பண்பைப் பேணல் ;

(iii) திருத்துவதற்குப் பிரேரிக்கப்பட்டுள்ள யாப்பின் கட்டமைப்புக்குள் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கும் தத்துவம்.

2. வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தமட்டில், எந்த ஒரு சமுதாயத்தினதும் அச்சங்களை நீக்கும் பொருட்டு இலங்கை அரசாங்கம் பின்வரும் மாற்று யோசனைகளைக் கவனத்திற்கொள்வதற்குத் தயாராகவிருக்கின்றது :—

(i) இந்த நாட்டிலுள்ள மாகாண சபைகள், குறிப்பாக வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் இருப்பவை ஒன்றையொன்று கலந்தாலோசித்தற்கும், பரஸ்பர அக்கறையும் கரிசனையும் உள்ள விடயங்களில் ஒருமுகப்பட்டுச் செயற்படுதற்கும் பொருத்தமான தாபனமுறையான ஏற்பாடுகளைச் செய்தல் ;

(ii) ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள இனப் பிரிவினர்கள் மாகாண அரசாங்கத்திற் பங்குபற்றுவதை உறுதிப்படுத்துமுகமாக பொருத்தமான சட்டமுறையானவையும் தாபனமுறையானவையுமான ஏற்பாடுகளைச் செய்தல் ;

(iii) மாகாண அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள இனப் பிரிவினர்களுக்குப் பெரிதளவில் உள்ளூர் தன்னாட்சியை வழங்குவதற்காகப் பின்வருவன போன்ற கூறுகளை நிறுவுதல் :

(அ) இனவடிப்படையில் அமைந்த ஏ ஐ ஏ பிரிவு ;

(ஆ) ஏ ஜீ ஏ பிரிவுகளில் பிரதேச சபைகள் ;

(இ) வேறு ஏதேனும் உள்ளூர் தன்னாட்சிக் கூறு.

3. கட்டமைப்பு பற்றிய இலங்கை அரசாங்கத்தின் பிரேரணைகள் தொடர்பான அவதானிப்புகளைக் கொண்ட விவரமான குறிப்பு (பின்னிணைப்பு I) என்று இணைக்கப்பட்டுள்ளது. இறுதியான உடன்பாடு காண்பதற்கு மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவது சாத்தியம் என இலங்கை அரசாங்கம் நம்புகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சட்டமும் ஒழுங்கும் பற்றியும் அவற்றின்கீழ் பரவலாக்கற் செய்யத்தக்க அதிகாரங்களின் செயலெல்லை பற்றியும் ஒரு தனியான குறிப்பு (பின்னிணைப்பு II) இணைக்கப்பட்டுள்ளது.

5. காணி நிருணயம் பற்றியும் அதன்கீழ் பரவலாக்கற் செய்யத்தக்க அதிகாரங்களின் செயலெல்லை பற்றியும் ஒரு தனியான குறிப்பு (பின்னிணைப்பு III) இணைக்கப்பட்டுள்ளது.

86. 05. 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண சபைகள் பற்றிய குறிப்பு

1. ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு மாகாண சபை நிறுவப்படும். சட்டமியற்றுதற்கும் நிறைவேற்றுக் கருமங்களைச் செயற்படுத்தற்குமான அதிகாரங்கள் பொருத்தமான யாப்புத் திருத்தங்களாலே, மக்கள் வாக்கெடுப்பு நடாத்தப் படாமல், மாகாண சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கஞ் செய்யப்படும். மேற் கொண்டு கலந்துரையாடல் செய்த பின்னர், 85.08.30 ஆந் தேதிக்குரிய இணக்கம் புரிந்துணர்வு நியதிகள் பற்றிய வரைவுக் கட்டமைப்புக்கான பின்னிணைப்பு I இலும், இந்திய யாப்பின் ஏழாவது அட்டவணையின் பட்டியல் II இலும் பட்டியல் III இலும் உள்ள பதிவுகளிலும் அடங்கியுள்ள பிரேரணைகளுக்குப் பெரும்படியாக இணையாகவுள்ள விடயங்கள் மாகாண சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கஞ் செய்யப்படும். எனினும், இது, (i) சட்டமும் ஒழுங்கும், (ii) காணி நிருணயம் என்பன தொடர்பாக இதனையடுத்துக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புக்களுக்கு உட்பட்டதாக இருக்கும்.

2. வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும், யாப்புச் சீர் திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தவுடன் மாகாண சபைகள் நிறுவப்படுவனவாகக் கொள்ளப்படும். அதனையடுத்து அம் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் விகிதசமப் பிரதிநிதித்துவ முறைமையின் அடிப்படையில் உடனடியாக நடைபெற வேண்டும்.

3. ஏனைய மாகாணங்களைப் பொறுத்தவரையில், ஒரு மாகாணத்தில் இப் போது இருக்கின்ற மாவட்ட சபைகள் எந்த நேரத்திலும் ஒரு மாகாண சபையாகத் தங்களை நிறுவிக்கொள்ள முன்வரலாம். வேறு எந்த மாகாணத்திலும் ஒரு மாகாண சபை அமைக்கப்படுமிடத்து, அந்த மாகாண சபையானது மாகாண சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கஞ் செய்யப்பட்ட எந்த விடயம் அல்லது எல்லா விடயங்களும் தொடர்பாகவும் சட்டமியற்றும் அதிகாரங்களைச் செயற்படுத்தலாம். மேலும், மாகாண சபையானது அதிகாரப் பரவலாக்கஞ் செய்யப்பட்ட எவ்விடயம் தொடர்பாகவும் தனது சார்பாக சட்டமியற்றும் அதிகாரங்களைச் செயற்படுத்துமாறு பாராளுமன்றத்தைக் கேட்டுக் கொள்வதற்குத் தீர்மானிக்கலாம்.

4. ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு மேல் நீதிமன்றம் இருக்கும். இலங்கை யின் உயர் நீதிமன்றம் மேன்முறையீடும் யாப்பும் சார்ந்த நியாயாதிக்கத்தைச் செயற்படுத்தும்.

5. மாகாண சபையில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சி யின் தலைவர் முதலமைச்சராக நியமிக்கப்படுவார். அமைச்சர்கள் சபையின் ஏனைய அமைச்சர்கள் முதலமைச்சரின் மதிவுரையின்பேரில் நியமிக்கப்படுவார்கள்.

6. ஒவ்வொரு மாகாணத்திலும் ஆளுநர் ஒருவரை நியமிப்பதற்கான பிரேரணைக்கு இலங்கை அரசாங்கம் மறுப்புத் தெரிவிக்கவில்லை. எனினும், இவ்விடயம் மேலும் பரிசீலனை செய்யப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சட்டவாக்க, நிறைவேற்று (நிதி உட்பட) அதிகாரங்களைப் பரவலாக்கஞ் செய்வதற்காக யாப்பின் ஏற்பாடுகளை அல்லது வேறு எந்தச் சட்டங்களையும் திருத்துவதற்கு, இப்போதுள்ள யாப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு 2/3 பங்கு பெரும்பான்மை வாக்குப்பலம் தேவைப்படும். மேற்கொண்ட பாதுகாப்புக்கள் எவையும் பற்றி, உதாரணமாக மக்கள் வாக்கெடுப்புக்கான மேற்கொண்ட தேவை பற்றி கலந்தாலோசிக்கப்படலாம்.

8. ஒரு மாகாண சபை நிறுவப்பட்டதன்பேரில், அந்த மாகாணத்திலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மாகாண சபைக் கூட்டங்களில் வாக்களிப்பதற்கான உரிமையின்றி, ஆனால் சமூகமளிப்பதற்கான உரிமையை அந்த மாகாண சபை ஒரு தீர்மானத்தின் மூலம் வழங்கலாம். அத்தகைய தீர்மானம் மாகாண சபையின் பதவிக் காலத்தின்போது நடைமுறை யில் இருக்கும்.

9. மாகாண சபையினால் நிறைவேற்றப்படும் ஒரு மசோதா சபையின் தலைவர் உறுதிப்படுத்தியதன் பேரில் சட்டமாக அமையும். அந்த மசோதாவின் யாப்பு சார்ந்த செல்லுபடியாகுந் தன்மை உயர் நீதிமன்றத்தினால் முடிவு செய்யப்பட வேண்டுமென சனாதிபதி அபிப்பிராயப்பட்டால், அம்மசோதா நடை முறைக்கு வருவதற்கு முன்னர், அதுபற்றி முடிவு செய்வதற்காக அதனை உயர் நீதிமன்றத்திற்கு அவர் குறித்தொதுக்கலாம். அத்தகைய குறித்தொதுக்கல் குறிப்பிட்ட காலவரைக்குள் செய்யப்படல் வேண்டும். இதுபற்றி மேற்கொண்டு கலந்தாலோசிக்கப்படலாம்.

10. சனாதிபதி ஒரு மாகாண சபையைக் கலைத்துவிடுதற்கான அன்றி மாகாண அரசாங்கத்தை நீக்கிவிடுதற்கான சந்தர்ப்பங்களையும், அவ்வாறான அதிகாரங்களை அவர் பிரயோகித்தற்கான நிபந்தனைகளையும் வரையறைகளையும் பற்றி மேற் கொண்டு கலந்தாலோசித்து, பொருத்தமான ஏற்பாடுகள் செய்யப்படலாம்.

11. மாகாண சபைக்கான தேர்தல்கள் விகிதசமப் பிரதிநிதித்துவ முறைமை யின் அடிப்படையில் நடைபெற வேண்டும். தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப் பினர்களின் எண்ணிக்கையானது மாகாண சபைக்குரிய ஒவ்வொரு மாவட்டத் தினதும் சனத்தொகையையும் பரப்பளவையும் கொண்டு நிருணயிக்கப்பட வேண்டும். விகிதசம பிரதிநிதித்துவ முறைமையானது 1985 ஆகஸ்டு மாத ஆவணத்துடன் இணைக்கப்பட்ட தெளிவாக்கல்களின் அடிப்படையில் கலந் தாலோசிக்கப்படலாம்.

12. மாகாண சபைக்கான தேர்தல்கள் தொடர்பான தகராறுகள், நீதிமன்றங் களில் தேர்தல் மனுக்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் தொடர்பான தகராறுகளை முடிவுசெய்தற்கு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதே விதத்தில் அந்நீதிமன்றங்களாலே முடிவுசெய்யப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஒரு மாகாண சபையின்கீழ் உள்ளூர் ஆட்சிக் கூறுகளாக அமையும் பிரதேச சபைகள் பற்றிய எண்ணிக்கை, அவற்றின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் ஆகியனபற்றி மேற்கொண்டு பரிசீலனை செய்யப்பட்டு, கலந்தாலோசிக்கப்படலாம் என்று இலங்கை அரசாங்கம் விரும்புகின்றது.

14. மேலும், உள்ளூர் ஆட்சியின் ஏனைய கூறுகளுடைய, அவை இப்பொழுது நடைமுறையில் இருப்பனவாயினும் அல்லது எதிர்காலத்தில் உருவாக்கப்பட இருப்பனவாயினும், அதிகாரங்களும் தொழிற்பாடுகளும் பற்றி மேற்கொண்டு பரிசீலனை செய்யப்பட்டு, கலந்தாலோசிக்கப்படலாம் என்று இலங்கை அரசாங்கம் விரும்புகின்றது.

15. மேற்கூறப்பட்டவை ஒவ்வொரு மாகாணத்திற்குமெனப் பிரேரிக்கப்பட்ட அரசாங்கக் கட்டமைப்பின் பிரதானமான அம்சங்களைக் குறிப்பனவாகும். இவற்றிலுள்ள குறைகளை நிரப்புமுகமாக, பொருத்தமான விளைவுகளைத் தருவனவும் இடைநேருகின்றவையுமான ஏற்பாடுகள் அமையும்.

86. 05. 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டமும் ஒழுங்கும் பற்றிய குறிப்பு

(சட்டமும் ஒழுங்கும் தொடர்பாக அதிகாரப் பரவலாக்கல் செய்வது பற்றிய குறிப்பு — 1986.06.25)

1. அதிகாரப் பரவலாக்கல் செய்தற்கான விடயம் பின்வருமாறு விவரிக்கப் படும் :—

பின்வருவன நீங்கலாக, மாகாணத்தினுள்ளே பொது ஒழுங்கு —

(அ) தேசிய பாதுகாப்பு,

(ஆ) தேசிய பந்தோபஸ்து,

(இ) குடியியல் அதிகாரத்துக்கு உதவியாக இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆயுதப் படைகளையோ வேறு படைகளையோ பயன்படுத்தல்.

2. ஐ. ஜீ. பீ. யின் முழுமையான நெறிப்படுத்தலிலும் கட்டுப்பாட்டிலும் தொழிற்பட வேண்டியுள்ள இலங்கை பொலிஸ் படை பின்வரும் பிரிவுகளைக் கொண்டமையும் :—

(i) தேசிய பிரிவு (விசேட கூறுகள் உட்பட),

(ii) ஒவ்வொரு மாகாணத்திற்குமான ஒரு மாகாணப் பிரிவு.

2.1 : தேசிய பிரிவினது ஐ. ஜீ. பீ., டீ. ஐ. ஜீ. க்கள், எஸ். எஸ். பீ. க்கள், ஏ. எஸ். பீ. க்கள் தேசிய மட்டத்தில் ஆட்சேர்க்கப்பட்ட ஏனைய தரத்தினர் ஆகியோரைக் கொண்டிருக்கும்.

2.2 : ஒரு மாகாணப் பிரிவினது தேசிய பிரிவிலிருந்து கடமைவழி அனுப்பப்பட்ட டீ. ஐ. ஜீ., எஸ். எஸ். பீ. க்கள், எஸ். பீ.க்கள், ஏ. எஸ். பீ.க்கள் ஆகியோரையும், மாகாணத்தில் ஆட்சேர்க்கப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்கள், சாஜெண்ட்ஸ், கொன்ஸ்டபிள்ஸ் ஆகியோரையும் கொண்டிருக்கும். மாகாணப் பிரிவைச் சேர்ந்த உறுப்பினர்கள் தேசிய பிரிவுக்குப் பதவியேற்றம் பெறுதற்குத் தகவுடையவராவர்.

3. தேசியப் பிரிவுக்கான ஆட்சேர்ப்புச் செய்வதும் மாகாணப் பிரிவு களிலுள்ள பொலிஸ் அதிகாரிகளை தேசிய பிரிவுக்குப் பதவியேற்றஞ் செய்வதும், பின்வரும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேசிய பொலீஸ் ஆணைக்குழு வினால் மேற்கொள்ளப்படும் :—

(அ) ஐ. ஜீ. பி.,

(ஆ) சனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவர்,

(இ) பிரதம நீதியரசரால் நியமிக்கப்படும் ஒருவர்.

3.1 : இந்த ஆணைக்குழு கீழேயுள்ள பந்தி 4.1 : இற்கு உட்பட்டு ஐ. ஜீ. பி. தவிர்ந்த தேசிய பிரிவிலுள்ள ஏனைய உறுப்பினர்களின் பதவியேற்றம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை ஆகியவற்றுக்கும் பொறுப்பாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.2 : மாகாணப் பிரிவுகளுக்குக் கடமைவழி அனுப்பப்பட்ட அதிகாரிகள் மீது மாகாண பொலீஸ் ஆணைக்குழுவினுல் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள் ளப்படுமிடத்து, அவ்வதிகாரிகள் செய்யும் மேன்முறையீடுகளை இந்தக் குழு விசாரணை செய்து முடிவுசெய்தல் வேண்டும்.

3.3 : எல்லாப் பிரிவுகளிலும் பொலீஸ் அதிகாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தற்கும் பதவியேற்றம் செய்தற்குமான நியமங்களை இந்தக் குழு நிறுவுவதுடன், அவ்வாருன நியமங்கள் எல்லா மாகாணப் பிரிவுகளிலும் ஒரு சீரானதாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு மாகாணப் பிரிவுக்கும் ஆட்சேர்த்தல் பின்வரும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மாகாண பொலீஸ் ஆணைக்குழுவினுல் செய்யப் படும் :—

(அ) மாகாணத்தின் டீ.ஐ.ஜீ.,
(ஆ) சனுதிபதியால் நியமிக்கப்படும் ஒருவர்,
(இ) மாகாணத்தின் முதலமைச்சரால் நியமிக்கப்படும் ஒருவர்.

4.1 : ஒரு மாகாண பொலீஸ் ஆணைக்குழுவானது மாகாணப் பிரிவி லுள்ள அதிகாரிகளின் இடமாற்றம், பதிவியேற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை ஆகியவற்றுக்கும், தேசிய பிரிவினுல் மாகாணப் பிரிவுக்கு கடமைவழி அனுப்பப் பட்ட அதிகாரிகளில் எஸ். எஸ். பி. தரம் வரையிலான அதிகாரிகளின் பதவியேற்றத்திற்கும், மாகாணப் பிரிவுக்கு கடமைவழி அனுப்பப்பட்ட டீ. ஐ. ஜீ. தவிர்ந்த அதிகாரிகளின் இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை ஆகியவற்றுக்கும் பொறுப்பாக இருக்கும்.

ஒரு மாகாண பொலீஸ் ஆணைக்குழுவினுல் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அவ்வாருன ஓர் அதிகாரி, தேசீய பொலீஸ் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடுசெய்யும் உரிமையுடையவராவர். அவ்வாருன முறையீட்டின் மீது இவ்வாணைக்குழு செய்யும் முடிவே இறுதியானதாகும்.

5. தேசிய பொலீஸ் ஆணைக்குழு அல்லது ஒரு மாகாண பொலீஸ் ஆணைக்குழு தனக்கு விதித்துரைக்கப்படும் அதிகாரங்களை அதற்காக விதித்துரைக் கப்படக்கூடிய வேறெருவருக்கு அல்லது அதிகாரிக்குக் கையளிப்பதற்கு உரித் துடையதாகும்.

6. மாகாண முதலமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஒவ்வொரு மாகாணத்திற்கு முரிய ஒரு டீ. ஐ. ஜீ. யை ஐ. ஜீ. பீ. நியமிப்பார். எனினும், பொலீஸ் மா அதிபருக்கும் முதலமைச்சருக்குமிடையே உடன்பாடு ஏற்படாதவிடத்து, அவ்விடயம் சனுதி பதிக்கு குறித்து அனுப்பப்படும். சனுதிபதியோ முதலமைச்சருடன் உரிய முறையில் கலந்தாலோசித்த பின்னர் அந்த நியமனத்தைச் செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.1 : தேசிய பிரிவின் எல்லாத் தரங்களிலுமுள்ள பொலீஸ் அதிகாரிகளின் ஊழியர் கோப்புக்கள் இலங்கை அரசாங்கத்தினுல் நிருணயிக்கப்படும். ஒவ்வொரு மாகாணப் பிரிவிலுமுள்ள அதிகாரிகளதும் ஏனைய தரத்தினர்களதும் ஊழியர் கோப்புக்கள், பின்வருவனவற்றைக் கவனத்திற்கொண்டு சனதிபதியின் அங்கீகாரத்துடன் மாகாண நிருவாகத்தினுல் நிருணயிக்கப்படும் :—

(i) மாகாணத்தின் பரப்பு ;
(ii) மாகாணத்தின் குடித்தொகை ;
(iii) உடன்படக்கூடிய அல்லது விதித்துரைக்கக்கூடிய ஏனைய அளவைகள்.

இத்தத்துவங்கள் எல்லா மாகாணப் பிரிவுகளுக்கும் ஒருசீராகப் பிரயோகிக்கப்படும்.

7.2 : மாகாணப் பிரிவுகளின் ஊழியர்கோப்புக்களானவை குடித்தொகை, பரப்பு, அவற்றிலுள்ள பொலீஸ் நிலையங்கள் என்பன போன்ற உறுதிப்படுத்திய தத்துவங்களையும் தொடர்புடைய ஏனைய பிரிவுகளுக்கும் வேறுபாடின்றிப் பிரயோகிக்கப்படும்.

7.3 : தேசிய பிரிவிலும் மாகாணப் பிரிவுகளிலும் இருக்கின்ற பல்வேறு தரத்தினருக்குரிய சம்பள அளவுத்திட்டங்களும் பதவிக்குரிய மேலதிக சலுகைகளும், மாகாணங்களின் முதலமைச்சர்களைக் கலந்தாலோசித்த பின்னர் இலங்கை அரசாங்கத்தினுல் நிருணயிக்கப்படும். மாகாணப் பிரிவிலுள்ள உறுப்பினர்களுக்குரிய சம்பள அளவுத் திட்டங்களும் பதவிக்குரிய மேலதிக சலுகைகளும் எல்லா மாகாணப் பிரிவுகளுக்கும் ஒருசீராகப் பிரயோகமாகும்.

8. தேசிய பிரிவுக்குரிய ஆயுதங்கள், வெடிமருந்துகள், ஏனைய சாதனங்கள் ஆகியவற்றின் தன்மை, வகை, அளவு என்பன தேசிய பொலீஸ் ஆணைக்குழுவினுல் நிருணயிக்கப்படும். எல்லா மாகாணப் பிரிவுகளுக்குமுரிய ஆயுதங்கள், வெடிமருந்துகள், ஏனைய சாதனங்கள் ஆகியவற்றின் தன்மை, வகை, அளவு என்பன மாகாண பொலீஸ் ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர் தேசிய பொலீஸ் ஆணைக்குழுவினுல் நிருணயிக்கப்படும். எல்லா மாகாணப் பிரிவுகளுக்கும் ஒரு சீரான நியமங்களும் தத்துவங்களும் பிரயோகிக்கப்படும்.

9. தேசிய பிரிவுக்கான ஆட்சேர்ப்பு பீ. சீ., எஸ். ஐ., ஏ. எஸ். பி. ஆகிய தரங்களில் செய்யப்படும். மாகாணப்பிரிவுக்கான ஆட்சேர்ப்பு பீ. சீ., எஸ். ஐ. (மேலுள்ள பந்தி 22 இல் குறிக்கப்பட்ட பீ. ஏ. எஸ். பீ. தரமும் இதிலடங்கும்) ஆகிய தரங்களில் செய்யப்படும்.

9.1 : தேசிய பிரிவுக்கான ஆட்சேர்ப்பு தேசிய பொலீஸ் ஆணைக்குழுவினுலும், மாகாணப் பிரிவுக்கான ஆட்சேர்ப்பு மாகாணப் பொலீஸ் ஆணைக்குழுவினுலும், இது சம்பந்தமாக விதித்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நியமங்கள், ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் செய்யப்படும். ஆட்சேர்ப்புச் செய்யப் பட்ட ஒருவர் நியமிக்கப்பட்டதன் பேரில் தாம் சேவைபுரிய விரும்பும் பிரிவு பற்றி தமது முன்னுரிமைகளைக் குறிப்பிடுமிடத்து, அவர் விரும்பித் தெரிவு செய்யும் பிரிவிலே சம்பந்தப்பட்ட பிரிவின் சம்மதத்துடன், சாத்தியமாயின் சேவையில் அமர்த்தப்படுவார்.

9.2 : இலங்கை பொலீஸ் படையின் எல்லாப் பிரிவுகளிலுமுள்ள உறுப்பினர்களுக்கும் அப்பிரிவுகளுக்கு ஆட்சேர்க்கப்படுவோர்களுக்கும் பயிற்சி யளிப்பது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும்.

மாகாண நிருவாகம் சனதிபதியின் சம்மதத்துடன் மாகாணப் பிரிவிலுள்ள உறுப்பினர்களுக்கு மேலதிக பயிற்சி அளிக்கலாம்.

10. தேசிய பிரிவையும் மாகாணப் பிரிவுகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் ஒரே மாதிரியான சீருடையையும் பதவிக்காலத்திற்குரிய சின்னத்தையும் அணிந் திருத்தல் வேண்டும். ஒவ்வொரு பிரிவையும் சேர்ந்த உறுப்பினர்களின் சீருடைகள் அவர்கள் சார்ந்துள்ள பிரிவைச் சுட்டிக்காட்டும் தனிவேருன தோள்பட்டையணி யைத் தாங்கியிருத்தல் வேண்டும்.

10.1 : மாகாணப் பிரிவைச் சேர்ந்த உறுப்பினர்களையும் அதற்குக் கடமைவழி அனுப்பப்பட்ட அதிகாரிகளையும் கொண்டு ஒவ்வொரு மாகாணத்திலும் சீருடை தரித்த பொலீஸ் படையொன்று இருத்தல் வேண்டும். தேசிய பிரிவைச் சேர்ந்த உறுப்பினர்கள் பொதுவாக சாதாரண உடையில் இருப்பர். ஆயின், 12.1, 12.2, 12.3, 12.4 ஆம் பந்திகளில் குறிக்கப்பட்டவாருன பொது ஒழுங்கைப் பேணுவது அல்லது மீளப் புதுப்பிப்பது தொடர்பான கடமைகளைச் செய்யும்பொழுது அவர்கள் சீருடைகளை அணிந்திருக்கலாம். மேலும், ஐ.ஜீ.பீ. யினல் விதித்துரைக்கப் படும் அவ்வாருன ஏனைய அதிகாரிகள் ஆகியோர் சாதாரணமாகச் சீருடைகளை அணிந்திருத்தல் வேண்டும்.

11. ஒரு மாகாணத்திலே தேசிய பிரிவின் கூறுகளிலும் மாகாணப் பிரிவிலும் கடமையாற்றும் எல்லா பொலீஸ் அதிகாரிகளும் அந்த மாகாணத்திலுள்ள டீ. ஐ. ஜீ. யின் நெறிப்படுத்தலின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் தொழிற்படுதல் வேண்டும்.

11.1 : ஒரு மாகாணத்தில் பொது ஒழுங்கைப் பேணுவது தொடர்பாக அம்மாகாண முதலமைச்சரின் கட்டுப்பாட்டின் கீழும் அவருக்குப் பொறுப்புக் கூறவேண்டியவராகவும் டீ. ஐ. ஜீ. இருத்தல் வேண்டும்.

11.2 : மேலுள்ள பந்தி 11.1 இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்வரும் கட்டுத் திட்டங்களுக்கு உட்படுவனவாகும் :—

(i) அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்படுமிடத்து, சனதிபதி தாம் விடுக்கும் பிரமாணங்களுக்கேற்ப, மாகாணத்தினுள்ளே பொது ஒழுங்கு தொடர் பாக பிரதான நிறைவேற்றுநரதும் மாகாண நிருவாகத்தினதும் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் மேற்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) ஒரு மாகாணத்தின் பந்தோபஸ்து அல்லது அம்மாகாணத்தின் பொது ஒழுங்கு கடுமையாய் உள்நாட்டுக் குழப்பத்தால் அச்சுறுத்தப்படுவதாக சனாதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அவசரகாலநிலையைப் பிரகடனஞ் செய்யாமலே அந்த மாகாண முதலமைச்சரைக் கலந்தாலோசித்து, குடியியல் அதிகாரத்திற்கு உதவும் வகையில் பொது ஒழுங்கை மீளப் புதுப்பிக்கும் நோக்கத்திற்காக, ஒரு கட்டளையின் மூலம் தேசிய பிரிவின் எந்த ஒரு கூறையும் அல்லது ஆயுதப் படைகளை அந்த மாகாணத்தில் பரவலாகச் சேவையில் அமர்த்தலாம்.

ஆயின், அவ்வாறான ஒவ்வொரு கட்டளையும், பொது ஒழுங்கு மீளப் புதுப்பிக்கப்பட்டது என்று சனாதிபதி திருப்தியடைந்தவுடன் அல்லது கட்டளை விடுக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவுற்றவுடன், இவற்றுள் எது முந்தியதோ அதற்கேற்ப, அமுலிலிருந்து நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும்.

12.1 : மாகாணப் பிரிவு மாகாணத்தினுள் பொது ஒழுங்கைப் பேணிக் காத்தலுக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும் ; மேலும், அம்மாகாணத்தினுள்ளே (பட்டோலையிற் குறிக்கப்பட்டுள்ள குற்றங்கள் நீங்கலாக) அனைத்துக் குற்றங்களையும் தடுத்தல், உளவறிதல், புலன்விசாரணை செய்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாகவும், குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை நியதிகளின்படி சட்டத்தரணி நாயகத்தின் அதிகாரங்களுக்கு உட்பட்டு, அவ்வாறான குற்றங்கள் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் வழக்குத் தொடருதலுக்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

இலங்கை பொலீஸ் படையின் தேசிய பிரிவு பட்டோலையிற் குறித்துரைக்கப் பட்டுள்ள அனைத்துக் குற்றங்களையும் தடுத்தல், உளவறிதல், புலன்விசாரணை செய்தல் என்பவற்றுக்கும், குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை நியதி களின்படி சட்டத்தரணி நாயகத்தின் அதிகாரங்களுக்கு உட்பட்டு, அவ்வாறான குற்றங்கள் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் வழக்குத் தொடரு வதற்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

12.2 : ஒரு மாகாணத்தினுள்ளே பொது ஒழுங்கைப் பேணிக்காப்பதற் காக மாகாண நிருவாகம் தேசிய பிரிவின் உதவியை நாடுமிடத்து, ஐ. ஜீ. பீ. அந்நோக்கத்திற்காக தேவையெனக் கருதும் ஆளணியினரைத் தேசிய பிரிவி லிருந்து பரவலாகக் கடமையிலமர்த்தி, அந்த மாகாணத்தின் டீ. ஐ. ஜீ. யின் கட்டுப்பாட்டின்கீழ் அவர்களை வைத்தல் வேண்டும்.

12.3 :அவசரகால நிலைமை பிரகடனஞ் செய்யப்படுமிடத்து, ஒரு மாகாணத்தில் பொது ஒழுங்கைப் பேணுதலை மீளப் புதுப்பிப்பதற்காக, ஐ. ஜீ. பீ. தாம் அவசியமெனக் கருதும் தேசிய பிரிவைச் சேர்ந்த கூறுகளை அம்மாகாணத்தில் பரவலாகக் கடமையில் அமர்த்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.4 :ஒரு மாகாணப் பிரிவினுல் சாதாரணமாகப் புலன்விசாரணை செய்யப்படும் ஒரு குற்றம் சீ. ஐ. டீ. யினுல் அல்லது தேசிய பிரிவின் ஏனைய கூறினுல் பின்வரும் சந்தர்ப்பங்களிலே புலன் விசாரணை செய்யப்படலாம் :—

(அ) இவ்வாருன புலன்விசாரணை சீ. ஐ. டீ. யினுல் அல்லது தேசிய பிரிவின் வேருெரு கூறினுல் மேற்கொள்ளப்பட வேண்டுமென முதலமைச்சர் கேட்டுக்கொள்ளுமிடத்து ;

(ஆ) இவ்வாருன குற்றத்தை சீ. ஐ. டீ. அல்லது தேசிய பிரிவின் வேருெரு கூறு புலன்விசாரணை செய்தல் நாட்டு நலனுக்கு அவசியமானதென்று சட்டத்தரணி நாயகம்/ஐ. ஜீ. பீ. அபிப்பிராயப்பட்டு, முதலமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர், அத்தகைய குற்றம், சீ. ஐ. டீ. யினுல் அல்லது தேசிய பிரிவின் வேருெரு கூறினுல் புலன்விசாரணை செய்யப்பட வேண்டுமென நெறிப்படுத்துமிடத்து.

12.5 : பந்தி 12.4 இல் (அ) அல்லது (ஆ) முன் கீழ்வரும் ஒரு வழக்கு தொடர்பாக, இந்தக் குற்றத்திற்காக வழக்குத் தொடருதல் இதன்பொருட்டு நியமிக்கப்படும் வழக்குத் தொடர் பணிப்பாளரின் மேற்பார்வையிலும் கட்டுப் பாட்டிலும் இடம்பெறுதல் வேண்டும்.

13. ஒரு மாகாணத்தில் ஒரு மாகாணப் பிரிவு நிறுவப்படும் வரையில், எந்த ஒரு மாகாணத்தினதும் மாகாணப் பிரிவுக்கு உரித்தாக்கப்படும் எல்லாத் தொழிற் பாடுகளையும் தேசிய பிரிவு நிறைவேற்றுதல் வேண்டும்.

14. தேசிய பிரிவையும் மாகாணப் பிரிவுகளையும் சேர்ந்த செய்திமடற்படுத்திய அதிகாரிகள் அனைவரும் சிங்களத்திலும் தமிழிலும் விதித்துரைக்கப்பட்ட தரத்தை அடையவேண்டியவராக இருத்தல் வேண்டும். மேலும், ஏ. எஸ், பீ. தரத்திலுள்ள அனைத்து அதிகாரிகளும் அத்தரத்திற்கு மேற்பட்ட அதிகாரிகளும் ஆங்கிலத்தில் விதித்துரைக்கப்பட்ட தரத்தை அடையவேண்டியவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை பொலீஸ் படைக்கு ஆட்சேர்க்கப்படும் ஒவ்வொருவரும் அவருடைய தாய்மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். முதலாவது பதவியேற்றம் பெறுவதற்காக, அவர் தமது தாய்மொழி தவிர்ந்த வேருெரு மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அடுத்த பதவியேற்றத்திற்காக, அவர் மூன்ருவது மொழியொன்றில் அறிவு பெற்றிருத்தல் வேண்டும். இந் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மூன்று மொழிகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு III

காணி நிருணயம் பற்றிய குறிப்பு

அதிகாரப் பரவலாக்கலுக்கான விடயம்

காணி, அதாவது காணியிலுள்ள அல்லது காணி மீதான உரிமை, காணி ஆட்சி, காணிமாற்றம், காணியைப் பாராதீனப்படுத்தல், காணி அபிவிருத்தி என்பன மாகாண சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கல் செய்யப்படும். எனினும், அவ்வாருன அதிகாரப் பரவலாக்கல் பின்வரும் விதிவிலக்குகளுக்கு உட்பட்டிருக்கும் :—

1.1 : அரசிடம் உரிமையளிக்கப்பெற்ற காணிகள் (அரச காணிகள்) பின்வரும் விதத்தில் பராதீனப்படுத்தப்படும், பயன்படுத்தப்படும், கையளிக்கப் படும் :—

1.2 : மாகாண சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கல் செய்யப்படாத விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப் படும் காணிகள் எவ்வித மட்டுப்படுத்தல்களுமின்றி இலங்கை அரசாங்கத்தினுல் பயன்படுத்தப்படும்.

1.3 : மாகாண சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கல் செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பான நோக்கங்களுக்காக அவைகளுக்குத் தேவைப்படும் காணிகள் சம்பந்தமாக, அவ்வாருன காணியின் பயன்பாட்டுக்கான திட்டங்களை, பொருத்தமான தேசிய பூட்கைகளுக்கு இணங்க உருவாக்க வேண்டியது அச்சபைகளுக்குரிய கடப்பாடாகவிருக்கும். இவ்வாருன திட்டங்களின் கீழ் எந்த ஒரு பிரசைக்கோ வேறு எந்த அமையத்திற்கோ காணியைப் பராதீனப்படுத்தல் அல்லது கையளித்தல், மாகாண சபைகளின் மதியுரையின்பேரில் சனதிபதியால் செய்யப்படும்.

1.4 : இலங்கை அரசாங்கத்தினுல் நிறுவப்படும் ஒரு தேசிய காணி ஆணைக்குழு, அரச காணியின் பயன்பாடு தொடர்பான பூட்கையை உருவாக்கு தற்கு அதிகாரம் கொண்டிருக்கும்.

2.1 : மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன, காணி அபிவிருத்தி கருத்திட்டங்கள் (உதாரணமாக, மகாவலி அபிவிருத்திக் கருத்திட்டம் போன் றவை) இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும்.

2.2 : இக்கருத்திட்டங்களின் அடிப்படையில் எழும் விவசாயக் காணி யுடைமைகள், மனையகக்காணியுடைமைகள் என்பவற்றின் பருமன் தொடர்பான தத்துவங்களும் அளவைகளும், மாகாண சபைகளுடன் கலந்தாலோசித்து இலங்கை அரசாங்கத்தினுல் நிருணயிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.3 : இவ்வாருன காணிகளுக்கான காணியுரிமை பெறவிருப்போரைத் தெரிவு செய்தல் தொடர்பான தத்துவங்களும் அளவைகளும் இலங்கை அரசாங்கத் தினூலே நிருணயிக்கப்படும். எனினும், இத்தத்துவங்களை நடைமுறையிற் பிர யோகித்தல், காணியுரிமை பெறவிருப்போரை தேரிவு செய்தல், ஏனைய இடை நேரான விடயங்கள் என்பன மாகாண சபைகளின் அதிகாரங்களுக்கு உட்பட்டிருக் கும்.

2.4 : மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழமைந்த காணிகளின் பயன்பாடு தொடர்பான ஒரு தேசிய பூட்கையை உருவாக்கும் பொறுப்பு தேசிய காணி ஆணைக்குழுவினதாக இருக்கும். இத்தகைய தேசிய பூட்கை அரசியல் அல்லது இனவாத அம்சங்களின் அடிப்படையிலன்றி, தொழினுட்ப அம்சங்களின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். தேசிய காணி ஆணைக்குழுவானது மண், சுவாத்தியம், மழை வீழ்ச்சி, மண் அரிப்பு, காடு மேவல், சூழல் காரணிகள், பொருளாதார நிலைப்பாடு, மற்றும் பொருத்தமான காரணிகளைக் கருத்திற்கொண்டு, காணிப் பயன்பாடு சம்பந்தமாக பொதுவான நியமங்களை விதிக்கும். மேலுள்ள (1) இன் கீழ் பெறப்பட்டவாறு, தங்களுக்குப் பரவலாக்கல் செய்யப்பட்ட அதிகாரங்களைச் செயற்படுத்துவது தொடர்பாக, மாகாண சபைகள் தேசிய காணி ஆணைக்குழுவினுல் காணிப் பயன்பாடு சம்பந்தமாக உருவாக்கப்படும் தேசிய பூட்கைக்கு உரிய மதிப்பளிக்க வேண்டிய கடப்பாடுடையனவாக இருக்கும்.

86. 05. 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவலி கருத்திட்டம்

துரித மகாவலித் திட்டத்தின் கீழ் " ஏ " தொடங்கி " எச் " வரையிலான தொகுதியில் கிடைக்குமென மதிப்பிடப்பட்டுள்ள புதிய காணித் துண்டுகளின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு :—

தொகுதி " ஏ "	..	14,300
தொகுதி " பி "	..	37,483
தொகுதி " சி "	..	22,000
தொகுதி " டீ "	..	14,800
தொகுதி " ஈ "	..	இல்லை
தொகுதி " எவ் "	..	இல்லை
தொகுதி " ஜீ "	..	2,900
தொகுதி " எச் "	..	10,000 (கருத்தியலானது)
		101,483

எனவே, இக்காணித் துண்டுகளிலே இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள், இந்தியத் தமிழர் ஆகியோருக்கு தேசிய இன விகிதாசாரங்களின் அடிப்படையில் உரித்துடையனவாக புதிதாக அமையவிருக்கும் காணித்துண்டுகள் பின்வருமாறு :—

இலங்கைத் தமிழர்	..	12,787
முஸ்லிம்கள்	..	7,509
இந்தியத் தமிழர்	..	5,683
மொத்தம்		25,979

குறிப்பு:— இவ்வழி, தேசிய இன விகிதாசாரங்களின் அடிப்படையில் சிங்களவருக்குள்ள உத்தேச காணியுரித்துடமை 75,504 காணித் துண்டுகளாகும்.

3. இக் காணித் துண்டுகள் தமிழ் மொழி பேசும் மக்களுக்கு திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலே கிடைப்பனவாக இருக்கும். இதுவரையில், 882 காணித்துண்டுகள் தமிழ் பேசும் குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ் வெண்ணிக்கை மேலுள்ள உரித்தளிக்கப்பெற்ற காணியிலிருந்து கழிக்கப்பட வேண்டியிருக்கும்.

தொகுதி	தமிழர்	முஸ்லிம்கள்	மொத்தம்
" ஏ "	47	822	869
" பி "	14	91	105
" சி "	821	568	1,389
மொத்தம்	882	1,481	2,363

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. துரித மகாவலித் திட்டத்திலே " தமிழ் பேசும் மக்களுக்கு " கருத்தியலான உரித்துடைய காணித் துண்டுகள் 25,979 என மதிப்பிடப்பட்டுள்ளது. இவை பின்வருமாறு அமையும் :—

இலங்கைத் தமிழர்	..	12,787	காணித் துண்டுகள்
முஸ்லிம்கள்	..	7,509	காணித் துண்டுகள்
இந்தியத் தமிழர்	..	5,683	காணித் துண்டுகள்

2. திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள இன அடிப்படையிலான சனத்தொகைக்கு இணங்க, அம்மாவட்டங்களிலே தமிழ் பேசும் மக்களுக்கு உரித்துடையனவாய காணித்துண்டுகள் அண்ணளவாகப் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படும் : — (காணி கிடைக்கத்தக்கதாக இருப்பதற்கும், கிடைக்கத்தக்க காணியில் மாற்றங்கள் ஏற்படுமிடத்து மேற்கொண்டு கலந்துரையாடல் செய்வதற்கும் உட்பட்டு இவ்வாறு அமையும்).

	திருகோணமலை	மட்டக்களப்பு	மொத்தம்
காணித் துண்டுகள்	12,700	18,690	31,390
	(அண்ணளவாக)	(அண்ணளவாக)	(அண்ணளவாக)
இலங்கைத் தமிழர்	6,960+19	10,440+30	17,400+49
முஸ்லிம்கள்	3,220+10	4,830+15	8,050+25
இந்தியத் தமிழர்	180+2	270+3	450+5
	10,391	15,588	25,979

3. இவ்வாறான பங்கீட்டினால் இலங்கைத் தமிழர் தங்களுக்கு உரித்துடையவற்றினும் கூடுதலாக ஏறக்குறைய 4700 காணித்துண்டுகளையும், முஸ்லிம்கள் மேலதிகமாக ஏறக்குறைய 500 காணித் துண்டுகளையும் பெறக்கூடியவராக இருப்பர். இந்தியத் தமிழர் தங்களுக்கு உரித்துடையவற்றினும் குறைவாக ஏறத்தாழ 5000 காணித்துண்டுகளைப் பெறுவர். இதனால் இந்தியத் தமிழர் சமுதாயத்திற்கு உரிய பங்கினைக் கொடுக்கும் வகையில் பங்கீட்டைத் திருத்தியமைக்க வேண்டியுள்ளது. இதன் விளைவாக, இவ்விரண்டு மாவட்டங்களிலும் அவர்களுடைய இன விகிதாசாரத்தில் மிகக் கணிசமான அதிகரிப்பு ஏற்படும்.

4. ஏஞ்சியிருக்கும் காணித்துண்டுகள், அதாவது திருகோணமலை மாவட்டத்தில் அண்ணளவாக 2308 காணித்துண்டுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்ணளவாக 3103 காணித்துண்டுகளும் சிங்களவருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

5. திருகோணமலை, மட்டக்களபபு மாவட்டங்களிலுள்ள ஏ. பி. டீ. தொகுதிகளிலே தொகுதிகளிலே குடியேற்றங்களை நிறுவுவதில், அம்மாவட்டங்களிலுள்ள இன விகிதாசாரங்களைப் பாதிக்காத வகையில் மேலுள்ள 3 ஆம் பந்திக்கு உட்பட்டு) அரசாங்கம் செயற்படும் என்பதனைக் குறித்துரைப்பது அவசியமாகும்.

86.05.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலமைப்புக்கான திருத்தங்கள்

138 ஆம் உறுப்புரை, அதன் (1) ஆம் பந்தியில் பின்வருமாறு திருத்தப்பட வேண்டும் :—

(அ) "ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மேல் நீதிமன்றத்தின் மேன் முறையீட்டு அல்லது தொடக்க நியாயாதிக்கப் பிரயோகத்தின்போது மேல் நீதிமன்றத்தால் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) "அத்தகைய முதனிலை நீதிமன்றம்", என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய மேல் நீதிமன்றம், முதனிலை நீதிமன்றம்", என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகள் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம், 11 ஆம், 30 (2) ஆம், 62 (2) ஆம், 83 ஆம் உறுப்புரைகளுக்கு அமையவிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் உறுப்புரையைப் பாதிப்பனவாதலோ மதிப்புக் குறைப்பனவாதலோ அல்லது பாதிப்பனவாக அல்லது மதிப்புக் குறைவனவாக வாசிக்கப்படுதலோ பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது; ஆனல் மேற்கூறப்பட்டவாறு தவிர, இந்த அத்தியாயத்தில் அடங்கியுள்ள எதுவும் அல்லது இந்த அத்தியாயம் வலுவுக்கு வருகின்ற தேதியன்று வலுவிலுள்ள சட்டம் எதுவும் இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளை மதிப்புக் குறைப்பதாக பொருள்கோடப்படுதல் ஆகாது.

154அ (1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய, இந்த அத்தியாயம் வலுவுக்கு வருகின்ற தேதியிலிருந்து, எட்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மாகாணத்திற்கும் மாகாண சபையொன்று இத்தால் அமைக்கப்படும்.

(2) ஓராம் பந்தியின் கீழ்த் தாபிக்கப்படும் மாகாண சபை ஒவ்வொன்றும், மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பிலான சட்டத்திற்கிணங்க அத்தகைய சபையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுகப்பட்டதன் மேல் அமைக்கப்படுதல் வேண்டும்.

திருத்தப்பட்ட 154ஆ என்னும் உறுப்புரை

154ஆ (1) எந்த மாகாணத்திற்கு 154அ என்னும் உறுப்புரைக்கு இணங்க மாகாண சபை ஒன்று தாபிக்கப்பட்டிருக்கின்றதோ அந்த ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஆளுநர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஆளுநர், சனாதிபதியினால் அவரது கைப்பட்ட ஆணைமூலம் நியமிக்கப் படுதல் வேண்டும் என்பதுடன், அவரது நியமன ஆணையில் தரப்பட்டுள்ள நியதிகளுக்கும் 4(ஆ) என்னும் உறுப்புரைக்கும் இணங்க சனாதிபதி விரும்பி யாங்கு பதவி வகித்தலும் வேண்டும்.

(3) ஆளுநர், சனாதிபதிக்கு முகவரியிட்ட எழுத்துமூலம் அவரது பதவியி லிருந்து விலகலாம்.

(4) (அ) மாகாண சபையானது, (ஆ) என்னும் உட்பந்திக்கு அமைய, ஆணையாளர்—

(i) அரசியலமைப்பின் ஏற்பாடுகளை வேண்டுமென்றே மீறியுள்ளார் என்றும் ;

(ii) அவரது பதவிக்குரிய தத்துவங்களின் பிறழ் பிரயோகத்தை உட்படுத்தும் துர்நடத்தைக்கு அல்லது ஊழற் பழக்கத்துக்கு குற்றவாளியாகவுள்ளார் என்றும் ; அல்லது

(iii) இலஞ்சத் தவறுக்கு அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்தும் தவறுக்கு குற்றவாளியாகவுள்ளார் என்றும்,

ஏதுவின் மீது ஆளுநரை அகற்றும்படி ஆலோசனையளிக்கும் உரையொன்றை, அத்தகைய உரையை, சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் (சமூகமளிக்காதவர் உள் ளிட்ட) சபையின் முழு எண்ணிக்கையினரான உறுப்பினர்களுள் மூன்றிலிரண்டுக் குக் குறையாதோரால் நிறைவேற்றப்படின், சனாதிபதிக்குச் சமர்ப்பிக்கலாம்.

(ஆ) உட்பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதுக்களின் மீது ஆளுநரை அகற்ற ஆலோசனையளித்து சனாதிபதிக்கு உரையொன்றைச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் எதுவும், அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தலானது பேரவையின் முழு எண்ணிக்கையினரான உறுப்பினர்களுள் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோ ரால் ஒப்பமிடப்பட்டாலேயொழிய மாகாண சபையின் தவிசாளரால் ஏற்றுக் கவனிக்கப்படுதலோ அல்லது சபையில் கலந்தாராயப்படுதலோ ஆகாது.

(5) இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஆளுநர், அவர் பதவி ஏற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(6) ஆளுநராக நியமிக்கப்பட்ட ஒவ்வோர் ஆளும், சனாதிபதியின் முன்னிலை யில், நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு சத்தியத்தைச் செய்து கீழொப்பமிடுவதன் மேல் அல்லது உறுதியுரையை மொழிந்து கீழொப்பமிடுவதன் மேல் பதவியேற்றல் வேண்டும்.

(7) ஆளுநர் ஒருவர் அவ்வாறு பதவியேற்றதன் மேல், அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்ட அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் பதவியை வகிக்காதொழிதல் வேண்டும் என்பதுடன், அவர் பாராளுமன்ற உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவராகவிருப்பின், பாராளுமன்றத்தில் அவரது பதவியை வறிதாக்குதல் வேண்டும். ஆளுநர் வேறேதேனும் பதவியையோ, இலாபமீட்டும் பதவியிடத்தை யோ வகித்தல் ஆகாது.

(8) (அ) ஆளுநர், காலத்திற்குக் காலம், அவர் பொருத்தமானதென எண்ணு கின்றவாருன அத்தகைய நேரத்திலும் இடத்திலும் மாகாண சபையைக் கூடுமாறு அழைக்கலாம். ஆனல் ஓர் அமர்வுத்தொடரில் கடைசி அமர்வுக்கும் அடுத்த அமர்வுத் தொடரின் முதலாவது அமர்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கும் இடையில் இரு மாதங்கள் இடைவருதல் ஆகாது.

(ஆ) ஆளுநர் காலத்துக்குக் காலம் மாகாண சபையை நிறுத்தலாம்.

(இ) ஆளுநர், மாகாண சபையிலுள்ள அபிப்பிராயத்தைக் கலந்தாலோசித்த பின்னர், பிரதம அமைச்சரின் ஆலோசனைக்கிணங்க செயலாற்றுவது மாகாணத் தின் நலன் கருதுவதாக இருக்காது எனத் திருப்திப்பட்டாலேயொழிய, சாதாரண மாக, இப்பந்தியின் கீழான அவரது தத்துவங்களை பிரதம அமைச்சரின் ஆலோசனைக்கிணங்கப் பிரயோகித்தல் வேண்டும்.

(9) முப்பத்துநான்காம் உறுப்புரையின் கீழ் சனதிபதியின் தத்துவங்களுக்குப் பங்கமின்றி, மாகாணமொன்றின் ஆளுநர், அம் மாகாணத்திற்கெனத் தாபிக்கப் பட்ட மாகாண சபையொன்றினல் ஆக்கப்பட்ட நியதிச் சட்டமொன்றுக்கு எதிரான தவருென்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு மன்னிப்பு வழங்குவதற்கு அல்லது அத்தகைய எவரேனும் ஆள் நீதிமன்றத்தினல் விதிக்கப்பட்ட தண்டனையை காலந்தாழ்த்துவதற்கு அல்லது தளர்த்துவதற்குத் தத்துவம் கொண்டவராதல் வேண்டும்.

(10) (அ) ஆளுநர், மாகாண சபைக்கு உரையாற்றலாம் என்பதுடன் ; அந்நோக்கத்துக்கென உறுப்பினர்களின் வருகையைத் தேவைப்படுத்தவும் செய்ய லாம்.

(ஆ) ஆளுநர், சபையிடம் அப்போது முடிவுருதிருக்கும் நியதிச்சட்டம் தொடர்பாகவோ, வேறுவகையாகவோ சபைக்கு செய்திகளை அனுப்பலாம், என்பதுடன், செய்தியொன்று அவ்வாறு அனுப்பப்பட்டபோது, சபையானது, சீர்தூக்கிப்பார்க்கப்பட வேண்டுமென செய்தியினல் தேவைப்படுத்தப்பட்ட ஏதே னும் கருமத்தை வசதியாகக் கூடியளவு விரைவாக சீர்தூக்கிப்பார்த்தலும் வேண்டும்.

(11) ஒவ்வொரு மாகாணத்திற்குமான பிரதம அமைச்சர் —

(அ) மாகாணத்தின் அலுவல்களது நிருவாகம் தொடர்பிலான அமைச்சர்கள் சபையின் எல்லா முடிவுகளையும், சட்டவாக்கத்துக்கான உத்தேசங்களை யும் மாகாணத்தின் ஆளுநருக்குத் தெரிவித்தலும் ;

(ஆ) மாகாணத்தின் அலுவல்களது நிருவாகம் அத்துடன் சட்ட வாக்கத்துக் கான உத்தேசங்கள் ஆகியன தொடர்பில் ஆளுநர் கோரக்கூடியவாருன அத்தகைய தகவலைக் கொடுத்துதவுதலும் ; அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) எக்கருமம் பற்றி அமைச்சர் ஒருவரால் முடிவு எடுக்கப்பட்டிருந்து ஆனல் சபையினுல் அது சீர்தூக்கிப்பார்க்கப்படாதிருக்கின்றதோ அந்த ஏதேனும் கருமம் அமைச்சர் சபைக்கு சீர்தூக்கிப்பார்த்தலுக்கெனச் சமர்ப்பிக்கப்படவேண்டுமென ஆளுநர் தேவைப்படுத்தினுல், அதனை அவ்வாறு சமர்ப்பித்தலும்,

அத்தகைய அமைச்சரது கடமையாதல் வேண்டும்.

(12) பாராளுமன்றமானது, ஆளுநர் பதவிவகிக்கின்றவர்களின் சம்பளம், படிகள், ஓய்வுபெறும் வயது, ஓய்வூதிய உரித்துக்கள் ஆகியவற்றிற்கு சட்டம் மூலம் ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

திருத்தப்பட்ட 154 இ என்னும் உறுப்புரை

154 இ. எக்கருமங்கள் தொடர்பில் நியதிச்சட்டங்கள் ஆக்குவதற்கு மாகாண சபை தத்துவமுடையதாகவுள்ளதோ அக் கருமங்களையும் உள்ளடக்குவதான நிறைவேற்றுத் தத்துவமானது, அம் மாகாண சபை எம் மாகாணத்திற்குத் தாபிக்கப்பட்டதோ அம் மாகாணத்திற்கான ஆளுநரினுல், ஒன்றில் நேரடியாகவோ அல்லது அமைச்சர் சபையைச் சேர்ந்த அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது அவருக்குக் கீழமைந்த அலுவலர்கள் மூலமாகவோ, 154 ஊ என்னும் உறுப்புரைக்கு இணங்க, பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

திருத்தப்பட்ட 154 ஈ என்னும் உறுப்புரை

154 ஈ. (1) ஒரு மாகாண சபையானது, அம் மாகாண சபை எம் மாகாணத்திற்குத் தாபிக்கப்பட்டதோ அம் மாகாணத்தின் பரப்பளவையும், சனத்தொகையையும் கவனத்திற்கொண்டு சட்ட மூலம் தீர்மானிக்கப்படக்கூடிய வாருன அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (அ) மாகாண சபையொன்று அதன் உறுப்பினர்களின் பதவிக் காலம் தொடங்கும்போது, எம் மாகாணத்திற்கு அம் மாகாண சபை தாபிக்கப்படுகின்றதோ அம் மாகாணத்தினுள் எத்தேர்தல் மாவட்டங்களின் எல்லைகள் அடங்குகின்றனவோ அத்தேர்தல் மாவட்டங்களுக்குத் தேர்ந்தேடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, அச்சபையின் நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கான உரிமையை வழங்குவதற்கு தீர்மானத்தின் மூலம், தீர்மானிக்கலாம்.

(ஆ) உட்பந்தி (அ) என்பதன் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்று வலுவிலிருக்கின்றவரையில், எம் மாகாணத்திற்கு அம் மாகாண சபை தாபிக்கப்பட்டதோ அம் மாகாணத்தினுள் எத்தேர்தல் மாவட்டங்களின் எல்லைகள் அடங்குகின்றனவோ அத்தேர்தல் மாவட்டங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், அச்சபையின் பதவிக் காலத்தின்போது, அம் மாகாண சபையின் நடவடிக்கைகளில் பேசுவதற்கும், வாக்களிப்பதற்கும், வேறுவகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கெடுப்பதற்கும் அத்துடன் அவர் உறுப்பினராக பெயர்குறிப்பிடப்படும் அம் மாகாண சபையின் ஏதேனும் குழுவில் பேசுவதற்கும், வாக்களிப்பதற்கும், வேறுவகையில் பங்கெடுப்பதற்கும் உரிமையுடையவராதல் வேண்டும்.

(இ) இப்பந்தியின் ஏற்பாடுகள், முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்படும் தேதியன்று நடைமுறைப்படுத்தப்படாதொழிதல் வேண்டும்.

உறுப்புரை 154 உ

154 உ. மாகாண சபையொன்று முன்னரே கலைக்கப்பட்டாலேயொழிய, அதன் முதலாவது கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுக் காலப்பகுதிக்குத் தொடர்ந்திருத்தல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட ஐந்து ஆண்டுக்காலப்பகுதி முடிவடைதல், சபையின் கலைப்பொன்றுகச் செயற்படுதலும் வேண்டும்.

154 ஊ. (1) ஒரு மாகாணத்தின் ஆளுநருக்கு, அவரது பணிகளைப் பிரயோகிப்பதில் உதவிசெய்து, ஆலோசனையளிப்பதற்கென பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சர் சபையொன்று இருத்தல் வேண்டும். ஆளுநர், அவரது பணிகளை அல்லது அவற்றுள் எதனையும் அவரது தற்றுணிபில் பிரயோகிக்கும்படி இந்த அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின் கீழ் அவர் தேவைப்படுத்தப்படுகின்றளவுக்குத் தவிர, அவரது பணிகளைப் பிரயோகிக் கையில் அத்தகைய ஆலோசனைக்கிணங்கச் செயலாற்றுதல் வேண்டும்.

(2) ஏதேனும் கருமமானது, இந்த அரசியலமைப்பினால் அல்லது அரசிய லமைப்பின் கீழ், ஆளுநர் அவரது தற்றுணிபின்படி செயலாற்றத் தேவைப்படுத்தப் பட்டவொரு கருமமா அல்லவா எனப் பிரச்சினை எதுவும் எழுமாயின், அவ்ரது தற்றுணிபின்படி ஆளுநரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும் என்பதுடன், ஆளுநரினால் செய்யப்பட்ட முடிவு எதனதும் செல்லுபடியாந்தன்மை, அவர் தனது தற்றுணிபின்படி செயலாற்றியிருக்கவேண்டுமோ அல்லவா என்னும் ஏதுவின் மீது கேள்விக்குட்படுத்தப்படுதல் ஆகாது.

(3) அமைச்சர்களினால் ஆளுநருக்கு ஆலோசனை எதுவும் வழங்கப்பட்டதா, அப்படியாயின் என்ன ஆலோசனை வழங்கப்பட்டது என்னும் பிரச்சினை நீதிமன்றம் எதிலும் விசாரணைசெய்யப்படுதல் ஆகாது.

(4) ஆளுநர், அவரது அபிப்பிராயப்படி, அம் மாகாணத்திற்கு அமைக்கப்பட்ட மாகாண சபையின் உறுப்பினர்களுள் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற நன்கு இயலுமானவரான அச்சபையின் உறுப்பினரை பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும் :

ஆயின், மாகாண சபையொன்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுள் அரைவாசிக்கும் மேற்பட்டோர் ஓர் அரசியல் கட்சியின் உறுப்பினர்களாக இருக்குமிடத்து, ஆளுநர், சபையிலுள்ள அந்த அரசியல் கட்சியின் தலைவரை பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) ஆளுநர், பிரதம அமைச்சரின் ஆலோசனையின்மீது, அம் மாகாணத்திற்கு அமைக்கப்பட்ட மாகாணசபையின் உறுப்பினர்களுளிருந்து ஏனைய அமைச்சர் களை நியமித்தல் வேண்டும்.

(6) அமைச்சர்கள் சபை மாகாணசபைகளுக்குக் கூட்டாகப் பொறுப்புடைய தாதலும், வகைசொல்லவேண்டியதாதலும் வேண்டும்.

(7) பிரதம அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்ட அல்லது அமைச்சர் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட ஆள் இருவர், நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழே ஒப்பமிடுகின்றவரையில் அல்லது உறுதியுரையை மொழிந்து கீழே ஒப்பமிடுகின்றவரையில், அவரது பதவிக்குரிய கடமைகளை ஏற்றல் ஆகாது.

154எ என்னும் உறுப்புரைக்கு உத்தேசிக்கப்பட்ட திருத்தம்

154எ (1) ஒவ்வொரு மாகாண சபையும், அரசியலமைப்பின் ஏற்பாடு களுக்கு அமைவாக. (இதனகத்துப்பின்னர் "மாகாண சபைகள் நிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) ஒன்பதாம் அட்டவணையின் 1 ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில், எம் மாகாணத்திற்கு அச்சபை தாபிக்கப்பட்டதோ அம் மாகாணத்திற்கு ஏற்புடையனவாக நியதிச்சட்டங்களை ஆக்கலாம்.

(2) இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளை அல்லது ஒன்பதாம் அட்டவணையைத் திருத்துவதற்கான அல்லது நீக்குவதற்கான சட்டமூலம் எதுவும், அத்தகைய சட்டமூலமானது, கசெற்றில் வெளியிடப்பட்டபின்னரும் பாராளுமன்ற நிகழ்ச்சித் தாளில் இடப்படுமுன்னரும், ஆற்றுப்படுத்துகையில் குறித்துரைக்கப்படக்கூடிய வாருன, அத்தகைய காலப்பகுதிக்குள் அச்சட்டமூலம் மீதான மாகாணசபைகளின் கருத்துரைகளைத் தெரிவிப்பதற்கென ஒவ்வொரு மாகாணசபைக்கும் சனதிபதி யினுல் ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தாலேயொழிய, சட்டமாக வருதல் ஆகாது. அத்துடன் —

(அ) அத்தகைய ஒவ்வொரு சபையும் திருத்தத்திற்கு அல்லது நீக்கத்திற்கு உடன்படுகின்றவிடத்து, அத்தகைய சட்டமூலமானது, சமூகமளித்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மைகொண்டு நிறைவேற்றப்படும் ; அல்லது

(ஆ) ஒன்றே பலவோவாய சபைகள் திருத்தத்திற்கு அல்லது நீக்கத்திற்கு உடன்படாதவிடத்து, அத்தகைய சட்டமூலமானது, 82 ஆம் உறுப்புரை யினுல் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மை கொண்டும், மக்கள் தீர்ப்பொன்றில் மக்களினுல் அங்கீகரிக்கப்பட்டும் நிறைவேற்றப் படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) மாகாண சபை நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பிலான சட்டமூலம் எதுவும், அத்தகைய சட்டமூலமானது, கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னரும், பாராளுமன்ற நிகழ்ச்சித்தாளில் இடப்படுமுன்னரும், ஆற்றுப்படுத்துகையில் குறித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய காலப்பகுதிக்குள் அச்சட்ட மூலம் மீதான மாகாண சபைகளின் கருத்துரைகளைத் தெரிவிப்பதற்கென, ஒவ்வொரு மாகாணசபைக்கும் சனுதிபதியினுல் ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தாலே யொழிய, சட்டமாக வருதல் ஆகாது. அத்துடன் —

(அ) அத்தகைய ஒவ்வொரு சபையும் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு உடன்படுகின்றவிடத்து, அத்தகைய சட்டமூலமானது, சமூகமளித்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையைக் கொண்டு நிறைவேற்றப்படும் : அல்லது

(ஆ) ஒன்றே பலவோவாய சபைகள் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு உடன்படாதவிடத்து, அத்தகைய சட்டமூலமானது, 82 ஆம் உறுப்புரையினுல் தேவைப்படுத்தப்பட்ட விசேட பெரும்பான்மையைக்கொண்டும், மக்கள் தீர்ப்பொன்றில் மக்களினுல் அங்கீகரிக்கப்பட்டும் நிறைவேற்றப்படும்:

ஆயின், அத்தகைய ஆற்றுப்படுத்துகையின் மீது, எல்லா மாகாண சபைகளுமல்லாது ஒருசில மாகாண சபைகள் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு உடன்படுகின்றவிடத்து, அத்தகைய சட்டமூலமானது சமூகமளித்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மைகொண்டு அது நிறைவேற்றப்படுவதன்மேல், சட்டமூலத்திற்கு உடன்படும் மாகாண சபைகள் எம் மாகாணத்திற்கென தாபிக்கப்பட்டிருக்கின்றனவோ அம் மாகாணத்திற்கு மட்டும் ஏற்புடையதான சட்டமாக வருதல் வேண்டும்.

(4) மாகாண சபைகள் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம்மீது சட்டம் ஆக்கும்படி ஒன்றே பலவோவாய மாகாண சபைகள் தீர்மானத்தின் மூலம் பாராளுமன்றத்தை வேண்டுமிடத்து, பாராளுமன்றமானது, அமர்ந்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை கொண்டு, அந்த மாகாண சபைகள் எந்த மாகாணங்களுக்குத் தாபிக்கப்பட்டனவோ அம் மாகாணங்களுக்கு மட்டுமே ஏற்புடைத்தாவதான சட்டத்தை அக்கருமம்மீது ஆக்கலாம்.

(5) (அ) ஒவ்வொரு விடயத்தின் சூழ்நிலைகளிலும் பாராளுமன்றம் தோதானதெனக் கருதுகின்றவாருக எல்லா மாகாண சபைகளுடனுமான அத்தகைய கலந்தாலோசனையின் பின்னர் (இதனகத்துப் பின்னர் "ஒருங்கியை நிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமத்திற்கு பாராளுமன்றம் சட்டங்களை ஆக்கலாம்.

(ஆ) ஒவ்வொரு மாகாண சபையும், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஒவ்வொரு விடயத்தின் சூழ்நிலைகளிலும் அது தோதானதெனக் கருதுகின்றவாருக பாராளுமன்றத்துடனுன அத்தகைய கலந்தாலோசனையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், ஒருங்கியை நிரலில் உள்ள ஏதேனும் கருமம் தொடர்பில், அம் மாகாண சபை எம் மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்டதோ அம் மாகாணத்திற்கு ஏற்புடையனவாகும் நியதிச்சட்டங்களை ஆக்கலாம்.

(6) மாகாண சபையொன்றினால் ஆக்கப்படும் ஏதேனும் நியதிச்சட்டத்தின் ஏற்பாடு எதுவும், இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாகவிருப்பின், அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் அவ்வாறு ஒவ்வாதிருக்கின்ற அளவுக்கு, வறிதானவையாதலும் வேண்டும்.

(7) ஒரு மாகாண சபையானது (இதனகத்துப் பின்னர் "ஒதுக்கு நிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்பதாம் அட்டவணையின் II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் மீது நியதிச்சட்டங்களை ஆக்குவதற்குத் தத்துவம் கொண்டதாதல் ஆகாது.

(8) மாகாண சபை நிரலிலுள்ள ஏதேனும் கருமம் தொடர்பிலான சட்ட மொன்று இந்த அத்தியாயம் வலுவுக்கு வருகின்ற தேதியன்று வலுவிலிருந்து ஒரு மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்று அதன்பின்னர் அதே கருமம் மீது நியதிச்சட்டமொன்றை ஆக்கி அல்லது ஆக்கியிருப்பதாகக் கருதி, அந்நியதிச்சட்டத்தின் விரிவுப்பெயரில் அது சட்டத்துடன் ஒவ்வாததாகவிருக் கின்றதென விவரிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அப்போது சட்டத்தின் ஏற்பாடுகள், அந்நியதிச்சட்டம் சம்மதம் பெற்ற தேதியிலிருந்து அந்நியதிச்சட்டம் வலுவிலிருக் கின்றவரையில் மட்டுமே இடைநிறுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்ப துடன் அம் மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தப்படாதொழிதலும் வேண்டும்.

(9) ஒருங்கியை நிரலிலுள்ள ஒரு கருமம் தொடர்பிலான சட்டமொன்று இந்த அத்தியாயம் வலுவுக்கு வருகின்ற தேதியன்று வலுவிலிருந்த ஒரு மாகாணத்திற் கெனத் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்று அதன்பின்னர் அதே கருமம் மீது அச்சட்டத்துடன் ஒவ்வாததான நியதிச்சட்டமொன்றை ஆக்குமிடத்து, அப்போது, அச்சட்டத்தின் ஏற்பாடுகள், பாராளுமன்றம் தீர்மானத்தின் மூலம் முரணுகத் தீர்மானித்தாலேயொழிய, நியதிச்சட்டம் சம்மதம் பெற்ற தேதியிலிருந்து அந் நியதிச்சட்டம் வலுவிலிருக்கின்றவரையில் மட்டுமே இடைநிறுத்தப்பட்டதாக விருத்தல் வேண்டும் என்பதுடன், அம் மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தப்படா தொழிதலும் வேண்டும்.

(10) இலங்கை முழுவதற்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கு, ஏதேனும் கருமம் தொடர்பில், (இந்த அத்தியாயம் உள்ளிட்ட) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க, சட்டங்களை ஆக்குவதற்கு இந்த அரசியலமைப்பின் மூலம் பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை, இந்த உறுப்புரையில் உள்ள எதுவும் மதிப்புக்குறைப்பதாக வாசிக்கப்படுதலோ, பொருள்கொள்ளப் படுதலோ ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11) இந்த உறுப்புரையின் (3) ஆம் பந்தியில் எது எப்படியிருப்பினும், பாராளுமன்றமானது, வேறு ஏதேனும் நாட்டுடனை அல்லது நாடுகளுடனை ஏதேனும் பொருத்தனையை, உடன்படிக்கையை அல்லது சமவாயத்தை அல்லது சருவதேச மாநாடு ஒன்றில், கழகத்தில் அல்லது வேறு குழுவில் எடுக்கப்பட்ட எவையேனும் முடிபுகளைச் செயற்படுத்துவதற்கென மாகாண சபை நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில், அப்பந்தியில் தரப்பட்டுள்ள நடவடிக்கைமுறைக்கிணங்கவல்லாது வேறுவகையில் சட்டங்களை ஆக்கலாம்.

உத்தேசிக்கப்பட்ட 154ஏ என்னும் உறுப்புரை

154ஏ. (1) மாகாண சபையொன்றினுல் ஆக்கப்படும் ஒவ்வொரு நியதிச் சட்டமும், இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய நியதிச் சட்டத்திற்கு சம்மதம் கிடைக்கப்பெற்றதன் மேல், வலுவுக்கு வருதல் வேண்டும்.

(2) மாகாண சபையொன்றினுல் ஆக்கப்படும் ஒவ்வொரு நியதிச்சட்டமும், அது ஆக்கப்பட்டதன்மேல் உடனடியாக ஆளுநரின் சம்மதத்துக்கென அவருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், ஆளுநர், ஒன்றில் நியதிச்சட்டத்திற்குச் சம்மதமளித்தல் வேண்டும்; அல்லது நியதிச்சட்டம் சம்மதத்திற்கென அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் இயலுமான விரைவில், நியதிச் சட்டத்தை அல்லது அதன் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏற்பாட்டை மீளச் சீர்தூக்கிப் பார்க்கும்படி சபையை வேண்டுவதான, குறிப்பாக செய்தியில் விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திருத்தங்களை உட்புகுத்தும் சாத்தியத்தை சீர்தூக்கிப் பார்க்கும்படி சபையை வேண்டுவதான ஒரு செய்தியுடன் சேர்த்து அந்நியதிச்சட்டத்தை மாகாண சபைக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

(3) இரண்டாம் பந்தியின் கீழ் ஆளுநரினுல் நியதிச்சட்டம் ஒன்று மாகாண சபையொன்றுக்கு திருப்பியனுப்பப்படுகின்றவிடத்து, மாகாண சபையானது ஆளுநரின் செய்தியைக் கவனத்திற் கொண்டு நியதிச்சட்டத்தை மீளச் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும்: அத்துடன், திருத்தத்துடன் அல்லது திருத்தம் இன்றி அத்தகைய நியதிச்சட்டத்தைத் திருத்தலாம் என்பதுடன், அதனை ஆளுநரின் சம்மதத்திற்கென அவருக்குச் சமர்ப்பிக்கவும் செய்யலாம்.

(4) சட்டமூலம் ஒன்று (3) ஆம் பந்தியின் கீழ் ஆளுநருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன்மேல், ஆளுநர் சட்டமூலத்திற்குச் சம்மதமளிக்கலாம் அல்லது அது அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாக இல்லை எனத் தீர்மானிக்கப்படுவதற்காக, இரண்டாவது தடவையாக சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதில் இருந்து ஒரு மாதத்தினுள், சனுதிபதியினுல் உயர்நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுவதற்கென அதனை ஒதுக்கிவைக்கலாம். அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டதன் மீது, சட்டமூலம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகின்றதென உயர்நீதிமன்றம் தீர்மானிக்கின்றவிடத்து, ஆளுநர் நீதிமன்றத்தின் தீர்மானம் அவருக்குக் கிடைக்கப்பெற்றதன் மீது, சட்டமூலத்திற்கு சம்மதமளித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டதன் மீது, சட்டமூலம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாகவிருக்கின்றதென உயர்நீதிமன்றம் தீர்மானிக்கின்ற விடத்து, ஆளுநர் சட்டமூலத்திற்கான சம்மதத்தை நிறுத்திவைத்தல் வேண்டும்.

உத்ததேசிக்கப்பட்ட 154ஐ என்னும் திருத்தப்பட்ட உறுப்புரை

154ஐ. (1) அத்தியாவசிய வழங்கல்களினதும் சேவைகளினதும் பேணல் அச்சுறுத்தப்படுகின்றது என்னும் அல்லது போர் அல்லது வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதப்புரட்சி மூலம் இலங்கையின் பாதுகாப்பு அச்சுறுத்தப்படுகின்றது என்னும் ஏதுவின் மீது, பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தின் கீழ், அத்தகைய கட்டளைச்சட்டத்தின் அல்லது சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொணருவதான பிரகடனம் ஒன்று செய்யப்படுவதன்மேல், சனாதிபதி எவரேனும் ஆளுநருக்கு, அந்த ஆளுநரால் பிரயோகிக்கப்படற்பாலதான நிறைவேற்றுத் தத்துவம் பிரயோகிக்கப்படவேண்டிய முறை பற்றிய பணிப்புக்களை வழங்கலாம். அவ்வாறு வழங்கப்படும் பணிப்புக்கள் அது ஆக்கப்படுவதற்கான அத்தகைய பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதுக்களுடன் தொடர்பு பட்டனவாகவிருத்தல் வேண்டும்.

விளக்கம்

(அத்தியாவசிய வழங்கல்களினதும் சேவைகளினதும் பேணல் அச்சுறுத்தப் பட்டுள்ளதென அல்லது இலங்கையின் அல்லது அதன் ஆள்புலத்தினது ஏதேனும் பகுதியின் பாதுகாப்பு, போர் அல்லது வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதப்புரட்சி மூலம் அச்சுறுத்தப்பட்டுள்ளதென வெளிப்படுத்துவதான பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டதின் கீழான பிரகடனம் ஒன்று, வழங்கல்களும் சேவைகளும் உள்ளபடியாகப் பாதிக்கப்படு முன்னர் அல்லது போரோ, அத்தகைய ஆக்கிரமிப்போ, புரட்சியோ உள்ளபடியாக ஏற்படுமுன்னர், அது உடனடியாக நிகழும் அபாயம் உள்ளதென சனாதிபதி திருப்திப்பட்டால் செய்யப்படலாம்.)

ஆயின், அத்தகைய பிரகடனம் இலங்கையின் ஏதேனும் பகுதியில் மட்டுமே நடைமுறையிலிருக்குமிடத்து, இந்த உறுப்புரையின் கீழ் பணிப்புக்களை வழங்குவதற்கு சனாதிபதிக்குள்ள தத்துவம், பிரகடனம் நடைமுறையிலிருக்கும் மாகாணம் தவிர்ந்த ஏதேனும் மாகாணத்திற்கும், அத்தியாவசிய வழங்கல்களினதும் சேவைகளினதும் பேணலை அல்லது இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் உறுதிப்படுத்த உசிதமான அளவுக்கும் விரிவுபடுத்தப்படலாம்.

(2) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழான அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பில் அப்போதைக்குள்ள சட்டத்தின் கீழான பிரகடனம் ஒன்று எல்லா நோக்கங்களுக்கும் முடிவானதாதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலும் ஆகாது. அத்துடன் அத்தகைய பிரகடனத்தை, அது ஆக்கப்படுவதற்கான ஏதுக்களை, அல்லது இந்த ஏதுக்களின் உளதாந்தன்மையை அல்லது இவ்வுறுப்புரையின் கீழ் வழங்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் பணிப்பை நீதிமன்றம் அல்லது நியாயசபை எதுவும், விசாரணை செய்தலோ, அவை பற்றி எடுத்துமொழிதலோ, ஏதேனும் முறையில் கேள்விக்குட் படுத்துதலோ ஆகாது.

உறுப்புரை 154 ஒ

154 ஒ. ஏதேனும் மாகாண சபையின் ஆளுநர், அரசியலமைப்பின் இந்த அத்தியாயத்தின் கீழ் அத்தகைய ஆளுநருக்கு அல்லது அத்தகைய சபைக்கு வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுக அல்லது அவற்றைப் பயனுறுத்தத் தவறியுள்ளவிடத்து, மாகாணத்தின் நிருவாகத்தை இந்த அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க கொண்டு நடாத்த முடியாத நிலைமையொன்று எழுந்துள்ளது என சனதிபதி அபிப்பிராயம் கொள்ளுதல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

154 ஒ. (1) ஒரு மாகாணத்தின் ஆளுநரிடமிருந்து அறிக்கையொன்று கிடைக்கப்பெற்றதன் மீது அல்லது வேறுவகையாக மாகாணத்தின் நிருவாகத்தை இந்த அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க கொண்டு நடாத்த முடியாத நிலைமையொன்று எழுந்துள்ளது என சனதிபதி திருப்தியடைவாராயின், சனதிபதி பிரகடனம் மூலம் —

(அ) மாகாணத்தின் நிருவாகத்தினது எல்லாப் பணிகளையும் அல்லது அவற்றுள் எதனையும் அத்துடன் ஆளுநருக்கு, மாகாண சபை தவிர்ந்த மாகாணத்திலுள்ள ஏதேனும் குழுவுக்கு அல்லது அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது ஆளுநரினுல், குழுவினுல் அல்லது அதிகார சபையினுல் பிரயோகிக்கப்படற்பாலதான எல்லாத் தத்துவங்களையும் அல்லது அவற்றுள் எதனையும் தாமே ஏற்றுக்கொள்ளலாம்.

(ஆ) மாகாண சபையின் தத்துவங்கள் பாராளுமன்றத்தின் அதிகாரத்தினுல் அல்லது அதிகாரத்தின் கீழ் பிரயோகிக்கப்படற்பாலதாதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம்.

(இ) பிரகடனத்தின் குறிக்கோள்களைப் பயனுறுத்துவதற்கு அவசியமான வையென அல்லது விரும்பத்தக்கவையென சனதிபதிக்குத் தோன்றுகின்றவாருன அத்தகைய இடைநேர்வினைவான, வினைவாந்தன்மைய ஏற்பாடுகளைச் செய்யலாம் :

ஆயின், ஏதேனும் நீதிமன்றத்திற்குரித்தாக்கப்பட்ட அல்லது நீதிமன்றத்தினுல் பிரயோகிக்கப்படற்பாலனவான தத்துவங்களுள் எதனையும் சனதிபதி தாமே ஏற்றுக் கொள்வதற்கு இப்பந்தியில் உள்ள எதுவும் அதிகாரமளித்தல் ஆகாது.

(2) அத்தகைய பிரகடனம் எதுவும் பின்னையவொரு பிரகடனத்தின் மூலம் ஒழிக்கப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

(3) இந்த உறுப்புரையின் கீழான பிரகடனம் ஒவ்வொன்றும், பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும் என்பதுடன், அது முன்னைய பிரகடனம் ஒன்றை ஒழிக்கும் பிரகடனம் ஒன்றுக இருக்குமிடத்துத் தவிர, பதினைந்து நாட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவடைந்தவுடன், அக்காலப்பகுதி முடிவடையுமுன்னர் அது பாராளுமன்றத் தீர்மானம் ஒன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலேயொழிய, நடைமுறைப்படுத் தப்படாதொழிதல் வேண்டும் :

ஆயின், (முன்னைய பிரகடனம் ஒன்றை ஒழிக்கும் பிரகடனம் ஒன்றல்லாத) அத்தகைய பிரகடனம் எதுவும் பாராளுமன்றம் கலைக்கப்படும் நேரத்தில் விடுக்கப்பட்டு அல்லது இப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பதினைந்து நாட்காலப் பகுதியின்போது, பாராளுமன்றக் கலைப்பு இடம்பெற்று, ஆனால் அத்தகைய பிரகடனம் தொடர்பிலான தீர்மானம் எதுவும் அக்காலப் பகுதி முடிவுடையு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டில்லாவிடின், பாராளுமன்றம் மீளமைக்கப்பட்ட பின்னர் அதின் முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து பதினைந்து நாட்கள் முடிவுடையுமுன்னர் பிரகடனத்தை அங்கீகரிக்கும் தீர்மானம் ஒன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, சொல்லப்பட்ட பதினைந்து நாட்காலப்பகுதி முடிவடைந்தவுடன், பிரகடனம் நடைமுறைப்படுத்தப்படாதொழி தல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட பிரகடனம் ஒன்று, முன்னரே ஒழிக்கப்பட்டா லேயொழிய, பிரகடனம் விடுக்கப்பட்ட தேதியிலிருந்து இரு மாத காலப் பகுதி யொன்று முடிவடைவதன் மீது நடைமுறைப்படுத்தப்படாதொழிதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய பிரகடனம் ஒன்று தொடர்ந்து வலுவிலிருப்பதை அங்கீகரிக்கும் தீர்மானமொன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும்போதும், நிறைவேற்றப்படும் அடிக்கடியாகவும், பிரகடனமானது ஒழிக்கப்பட்டாலேயொழிய, அது வேறுவகையில் இப்பந்தியின் கீழ் எத்தேதியன்று நடைமுறைப்படுத்தப்படா தொழிந்திருக்கக்கூடுமோ அத்தேதியிலிருந்து மேலும் இரு மாத காலப்பகுதியொன் றுக்குத் தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும். ஆனால் அத்தகைய பிரகடனம் எதுவும், எவ் விடயத்திலும் ஓர் ஆண்டுக்கு மேல் வலுவிலிருத்தல் ஆகாது :

ஆயின், மேலும் அத்தகைய ஏதேனும் இரு மாத காலப் பகுதியின் போது பாராளுமன்றக் கலைப்பு இடம்பெற்று, ஆனால் அத்தகைய பிரகடனம் தொடர்ந்து வலுவிலிருப்பது தொடர்பிலான தீர்மானம் எதுவும் சொல்லப்பட்ட காலப்பகுதியின் போது பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டில்லாதிருப்பின், பாராளுமன்றம் மீளமைக்கப்பட்ட பின்னர் அதன் முதலாவது அமர்வுத்தேதியிலிருந்து பதினைந்து நாட்கள் முடிவடையும் முன்னர் பிரகடனத்தை அங்கீகரிக்கும் தீர்மானம் ஒன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, சொல்லப்பட்ட பதினைந்து நாட்காலப் பகுதி முடிவடைந்தவுடன், பிரகடனம் நடைமுறைப்படுத்தப்படாதொழி தல் வேண்டும்.

(5) இந்த உறுப்புரையில் எது எப்படியிருப்பினும், சனாதிபதி, (1) ஆம் பந்தியின் கீழான பிரகடனம் ஒன்றை அவர் ஆக்கியதிலிருந்து பதினைந்து நாட்களினுள்ளும், அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களுள் எது தொடர்பிலும் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளும் நோக்கத்துக்காகவும், ஒய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியொருவரை, அறுபது நாட் காலப் பகுதிக்குள் அத்தகைய கருமங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கையிடுவதற்கென, நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட நீதிபதியொருவர், அத்தகைய விசாரணை தொடர்பில், விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையாளர் ஒருவருக்குள்ள தத்துவங்களைக் கொண்டவராதல் வேண்டும். அத்தகைய நீதிபதியின் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் மீது, சனாதிபதி (1) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட பிரகடனத்தை ஒழிக்கலாம்.

(6) இந்த உறுப்புரையின் கீழான பிரகடனம் ஒன்று எல்லா நோக்கங்களுக்கும் முடிவானதாதல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலும் ஆகாது. அத்துடன் நீதிமன்றம் அல்லது நியாய சபை எதுவும் அத்தகைய பிரகடனத்தை அல்லது அது ஆக்கப்படுவதற்கான ஏதுக்களை விசாரணை செய்தலோ, அவைபற்றி எடுத்துமொழிதலோ அல்லது ஏதேனும் முறையில் கேள்விக்குட்படுத்துதலோ ஆகாது.

உத்தேசிக்கப்பட்ட 154 க என்னும் திருத்தப்பட்ட உறுப்புரை

154க. (1) நூற்றைம்பத்துநான்கு (ஒ) என்னும் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் விடுக்கப்பட்ட பிரகடனம் ஒன்றின் மூலம் மாகாண சபையொன்றின் தத்துவங்கள் பாராளுமன்ற அதிகாரத்தினுல் அல்லது அதிகாரத்தின் கீழ் பிரயோகிக்கப்படற்பாலனவென வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றவிடத்து —

(அ) நியதிச்சட்டங்களை ஆக்குவதற்கு மாகாண சபைக்குள்ள தத்துவத்தை சனாதிபதிக்கு அளிப்பதற்கும், அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவத்தை, சனாதிபதி விதிக்கப் பொருத்தமானதென எண்ணுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக, அதற்கென அவரால் குறித்துரைக்கப்படும் வேறு ஏதேனும் அதிகாரிக்கு கையளிப்பதற்கு சனாதிபதிக்கு அதிகாரமளிப்பதற்கும், பாராளுமன்றம் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும் ;

(ஆ) பாராளுமன்றம் அமர்வுத் தொடரில் இல்லாதிருக்கும்போது, மாகாணத்தின் மாகாண சபையிலிருந்தான செலவினத்திற்கு பாராளுமன்ற அனுமதி கிடைக்காதிருக்கையில், அத்தகைய செலவினத்திற்கு அதிகாரமளிப்பதற்கு சனாதிபதி தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்தினுல் அல்லது சனாதிபதியினுல் அல்லது (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு அதிகாரியினுல் ஆக்கப்படும் நியதிச்சட்டம் ஒன்று, 154ஒ என்னும் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் விடுக்கப்பட்ட பிரகடனம் ஒன்று தொடர்ந்து வலுவிலிருக்கும் காலத்தின்போது, மாகாண சபையினுல் திருத்தப்படுகின்ற வரையில் அல்லது நீக்கப்படுகின்றவரையில் தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிசார் அவசரநிலை பற்றிய ஏற்பாடுகள்.

154ங. (1) இலங்கையின் அல்லது அதன் ஆள்புலத்தினது ஏதேனும் பகுதியின் நிதிசார் உறுதிச்சமநிலையை அல்லது நாணயத்தை அச்சுறுத்துவதான நிலைமையொன்று எழுந் துள்ளது என சனாதிபதி திருப்தியடைவராயின், அவர் பிரகடனம் ஒன்றின் மூலம் அப்பயன்பட அமைந்த வெளிப் படுத்துகையொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் பந்தியின் கீழ் விடுக்கப்படும் பிரகடனம் ஒன்று—

(அ) பின்னைய பிரகடனம் ஒன்றின்மூலம் ஒழிக்கப்பட லாம் அல்லது வேறுபடுத்தலாம் ;

(ஆ) பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண் டும் ;

(இ) இரு மாத காலம் முடிவடையுமுன்னர் பாராளுமன் றத் தீர்மானமொன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட்டி ருந்தாலன்றி, அக்காலப் பகுதி முடிவடைந்தவுடன் இல்லாதொழிதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய பிரகடனம் எதுவும், பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கும் நேரத்தில் விடுக்கப்பட்டு அல்லது பாரா ளுமன்றக் கலைப்பு (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இரு மாதகாலப் பகுதியின்போது இடம்பெற்று, ஆனால் அத்தகைய பிரகடனம் தொடர்பிலான தீர்மானம் எதுவும் அக்காலப்பகுதி முடிவடையுமுன்னர் பாராளுமன்றம் மீளமைக்கப்பட்ட பின்னர் அதன் முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைந்தவுடன், சொல் லப்பட்ட முப்பது நாட்காலப் பகுதி முடிவடையுமுன்னர் பிரகடனத்தை அங்கீகரிக்கும் தீர்மானமொன்று பாராளுமன் றத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, நடைமுறைப் படுத்தப்படாதொழிதல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய பிரகடனம் எதுவும் நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியின் போது சனாதிபதி, பணிப்புக்களில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நிதிசார் தகுதியுடைமைக்கான அடிப்ப டைத் தத்துவங்களைக் கடைப்பிடிக்கும்படி மாகாணமொன்றின் ஆளுநர் எவருக்கும் பணிப்புக்களை வழங்கலாம். அத்துடன் சனாதிபதி அந்நோக்கத்துக்கு அவசியமானவையும் போது மானவையும் எனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு பணிப்புக்களையும் வழங்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) இந்த அரசியலமைப்பில் எது எப்படியிருப்பினும், அத்தகைய எதுவும்—

(i) மாகாணமொன்றின் அலுவல்கள் தொடர்பில் சேவையாற்றும் எல்லா ஆட்களினதும் அல்லது ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த ஆட்களினது சம்பளங்களையும் படிகளையும் குறைப்பதற்குத் தேவைப்படுத்தும் ஏற்பாடொன்றினையும் உள்ளடக்கலாம் ;

(ii) மாகாண நிதியமொன்றுக்கான அல்லது மாகாண நிதியத்திலிருந்தான கொடுப்பனவுகளுக்கு ஏற்பாடு செய்யும் எல்லா நியதியச்சட்டங்களும், அவை மாகாணசபையினால் நிறைவேற்றப்பட்டபின்னர் சனாதிபதியினால் சீர்தூக்கிப் பார்க்கப்படுவதற்கென ஒதுக்கிவைக்கப்பட வேண்டும், எனத் தேவைப்படுத்தும் ஏற்பாடொன்றினையும் உள்ளடக்கலாம் ; லாம் ;

மேல் நீதிமன்றங்கள் தொடர்பிலான புதிய ஏற்பாடு

154ச. (1) இந்த அத்தியாயம் வலுவுக்கு வருகின்ற தேதியிலிருந்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு மேல் நீதிமன்றம் இருத்தல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு மேல்நீதிமன்றமும் இயைபான மாகாணத்தின் மேல்நீதிமன்றம் எனப் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(2) அத்தகைய ஒவ்வொரு மேல்நீதிமன்றத்திற்கும் அவசியமாக்கக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான நீதிபதிகளை பிரதம நீதிரசர் இலங்கை மேல் நீதிமன்றத்தின் நீதிபதிகளிடையேயிருந்து பெயர் குறித்து நியமித்தல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு நீதிபதியும் பிரதம நீதியரசரால் இடமாற்றப்படற்பாலராதல் வேண்டும்.

(3) அத்தகைய ஒவ்வொரு மேல் நீதிமன்றமும் —

(அ) மாகாணத்தினுள் புரியப்படும் தவறுகள் தொடர்பில் இலங்கை மேல்நீதிமன்றத்தின் தொடக்கக் குற்றவியல் நியாயாதிக்கத்தை சட்டத்திற்கிணங்க பிரயோகித்தல் வேண்டும் ;

(ஆ) 138 ஆம் உறுப்புரையில் எது எப்படியிருப்பினும், ஏதேனும் சட்டத்திற்கு அமைய, அம் மாகாணத்தினுள் நீதிவான் நீதிமன்றங்களினாலும், ஆரம்ப நீதிமன்றங்களினாலும் பதியப்பட்ட அல்லது விதிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட குற்றத்தீர்ப்புக்கள், தண்டனைத் தீர்ப்புக்கள், கட்டளைகள் தொடர்பில், மேன்முறையீட்டு, மீளாய்வு நியாயாதிக்கத்தைப் பிரயோகித்தில் வேண்டும்.

(இ) பாராளுமன்றம், சட்டமூலம் ஏற்பாடுசெய்யக்கூடிய வாருன அத்தகைய வேறு நியாயாதிக்கதையும் தத்துவங்களையும் பிரயோகித்தல் வேண்டும்.

(4) அத்தகைய ஒவ்வொரு மேல் நீதிமன்றமும் சட்டத் திற்கிணங்க, பின்வரும் கட்டளைகளை வழங்க நியாயாதிக்கம் கொண்டதாதல் வேண்டும் —

(அ) மாகாணத்தினுள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக் கப்பட்டிருக்கும் ஆட்கள் தொடர்பில் ஆட்கொணர் எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளைகள் ; அத்துடன்

(ஆ) ஒன்பதாம் அட்டவணையின் 1 ஆம் நிரையில் தரப் பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில் —

(i) ஏதேனும் சட்டத்தின் கீழ், அல்லது

(ii) மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்ட மாகாண சபையினுல் ஆக்கப்படும் ஏதேனும் நியதிச் சட்டத்தின் கீழ்,

ஏதேனும் தத்துவத்தை அம்மாகாணத்தினுள் பிரயோகிக்கும் எவரேனும் ஆளுக்கு எதிராக உறுதி கேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, மேற் செலெனும் எழுத்தாணை, ஆணையீட்டெழுத்தாணை, யாதுரிமை எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளைகள்.

(5) நீதிச் சேவை ஆணைக்குழு அத்தகைய ஏதேனும் மேல்நீதிமன்றத்திற்கு, மாகாணத்தினுள் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் நிருவாகம் பற்றி பார்வையிட்டு அறிக்கை செய்வதற்கான தத்துவத்தைக் கையளிக்கலாம்.

(6) அரசியலமைப்பினதும், ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாட்டிற்கு அமைவாக, (3) (ஆ) அல்லது (இ) அல்லது (4) ஆகிய பந்திகளின் கீழ் அத்தகைய ஏதேனும் நீதிமன்றம் நியாயாதிக்கம் பிரயோகிக்கையில் அதனுல் ஆக்கப்படும் இறுதிக் கட்டளையினுல், தீர்ப்பினுல் அல்லது தண்டனைத் தீர்ப்பினுல் இன்னலுறுகின்ற ஆள் எவரும், அதற்கெதிராக மேன்முறையிட்டு நீதிமன்றத்திற்கு 138 ஆம் உறுப்புரைக்கு இணங்க, மேன்முறையீடு செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தப்பட்ட 154 ஒ என்னும் உறுப்புரை

மாகாண சபைகளின் பணிகள், தத்துவங்கள், தேர்தல், முதலியன.

154 ஒ. பாராளுமன்றம் சட்டம் மூலம் பின்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்யலாம் —

(அ) மாகாண சபைகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும், அத்தகைய சபைகளின் உறுப்பாண்மைக்கான தகைமைகளும் ;

(ஆ) அத்தகைய ஒவ்வொரு சபையினாலும் அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை ;

(இ) மாகாண சபை உறுப்பினர்களின் சம்பளங்களும், படிகளும், அத்துடன்

(ஈ) இந்த அத்தியாயத்தின் நெறிகளை அல்லது ஏற்பாடுகளை பயனுறுத்தும் நோக்கத்துக்கு அவசியமான வேறு ஏதேனும் கருமம்.

உத்தேசிக்கப்பட்ட 154 ட என்னும் திருத்தப்பட்ட உறுப்புரை

154 ட (1) பின்வருவோரைக் கொண்ட நிதி ஆணைக் குழுவொன்று இருத்தல் வேண்டும் —

(அ) மத்தியவங்கியின் ஆளுநர் ;

(ஆ) திறைசேரிக்கான செயலாளர் ; அத்துடன்

(இ) மூன்று பெரும்பான்மைச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களான ஏனைய மூன்று உறுப்பினர்கள். அவர்களுள் ஒவ்வொருவரும் நிதி, சட்ட, நிருவாக, தொழில் அல்லது கல்விசார் துறைகளில் பிரசித்தி பெற்றவர்களாயும் அல்லது அவற்றில் உயர் பதவி வகிப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், முன்னமே இறந்தாலேயொழிய, பதவியிலிருந்து விலகினாலொழிய அல்லது அகற்றப்பட்டாலேயொழிய, ஐந்து ஆண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) பின்வருவனபற்றி சனதிபதிக்கு முறையீடுகளைச் செய்தல் ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டும்:—

(அ) மாகாண நிதியங்களின் பயன்பாட்டிற்கென அரசாங்கத்தினுல் ஆண்டுதோறும் வழங்கப்படுவனவான அத்தகைய நிதிகள் எந்நெறிகளின் மீது பல்வேறு மாகாணங்களுக்கிடையில் பங்கிடப்படுதல் வேண்டுமோ அந்நெறிகள் பற்றியும் ; அத்துடன்

(ஆ) மாகாண நிதிநிலைமை தொடர்பாக சனதிபதியினுல் ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் வேறு ஏதேனும் கருமம் பற்றியும்.

(4) ஆணைக்குழு அதன் சொந்த நடவடிக்கை முறையைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், அதன் கடமைகளை நிறைவேற்றுகையில், பாராளுமன்றம் சட்டம் மூலம் அதற்கு அளிக்கப்படக்கூடியவாருன அத்தகைய தத்துவங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) சனதிபதி, இந்த உறுப்புரையின் கீழ் நிதி ஆணைக்குழுவினுல் செய்யப்படும் விதந்துரை ஒவ்வொன்றையும் பாராளுமன்றத்தின் முன்னர் இடச்செய்வித்தல் வேண்டும்.

155. (3) (அ) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தின் கீழ், ஒன்பதாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில், அல்லது மாகாண சபையொன்றினுல் ஆக்கப்பட்ட நியதிச்சட்டமொன்றில் நடைமுறையைப் புறக்கணிப்பதான, திருத்துவதான அல்லது இடைநிறுத்துவதான பயன்கொண்ட அவசரகால ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதை இந்த அரசியலமைப்பில் உள்ள எதுவும் தடைசெய்வதாகக் கருதப்படுதல் ஆகாது.

அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரை " எழுத்திலான சட்டம் " என்னும் வரைவிலக்கணத்தில் " கட்டளைகள், பிரகடனங்கள் " என்னும் சொற்களுக்குப் பதிலாக " மாகாண சபையொன்றினுல் ஆக்கப்படும் நியதிச்சட்டங்கள், கட்டளைகள், பிரகடனங்கள் " என்னும் சொற்களை இடுவதன்மூலம் திருத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தேசிக்கப்பட்ட ஏற்பாடு

(1) மாகாண சபையொன்று தீர்மானம் மூலம், ஒன்பதாம் அட்டவணையின் 1 ஆம் நிரலில் அல்லது iii ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது அதன் பாகம் தொடர்பில் 154 எ என்னும் உறுப்புரையின் கீழான அதன் தத்துவங்களையும் பிரயோகிக்காதிருக்கத் தீர்மானிக்கலாம்.

(2) ஓராம் பந்தியின் கீழ் மாகாண சபையொன்றினால் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்து, அத்தகைய தீர்மானத்தின் நியதிகள் பாராளுமன்றத்தினால் தீர்மானம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றவிடத்து, 154 எ என்னும் பிரிவின் கீழான அத்தகைய மாகாண சபையின் தத்துவங்கள் அத்தகைய தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்ட கருமத்திற்கும் விசாலிப்பனவாகக் கருதப்படுதல் ஆகாது என்பதுடன், பாராளுமன்றம் அக்கருமம் தொடர்பில், 154 எ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்கவல்லாத வேறுவகையில், அம் மாகாண சபை எம் மாகாணத்திற்கென தாபிக்கப்பட்டதோ அம் மாகாணத்திற்கு ஏற்புடைத்தானதாக சட்டம் ஆக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

பாகம் I

மாகாண சபையின் பெயரும் உறுப்பாண்மையும்.

2. அரசியலமைப்பின் 154அ என்னும் உறுப்புரையின் பயனைக் கொண்டு மாகாணமொன்றுக்கு ஒரு மாகாண சபை தாபிக்கப்படுமிடத்து, சனாதிபதி, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய சபைக்குப் பெயரொன்றைக் குறித் தொதுக்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மாகாண சபை கொண்டிருக்கவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக் கையைக் குறித்துரைத்தலும் வேண்டும். அத்தகைய எண் ணிக்கையைக் குறித்துரைக்கையில், சனாதிபதி, அம் மாகாண சபை எந்த மாகாணத்துக்கென அமைக்கப்படுகின்றதோ அந்த மாகாணத்தின் பரப்பளவையும் சனத்தொகையையும் கவனத் துட்கொள்ளுதல் வேண்டும்.

மாகாண சபையின் உறுப்பாண்மைக் கான தகைமைகள்.

3. ஆளெவரும்—

(அ) அத்தகைய ஆள் அரசியலமைப்பின் 91(1) ஆம் உறுப்புரையின் (அ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ) ஆகிய பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட தகைமை யீனங்களுள் எவற்றுக்கும் அமைந்தவராகவிருப் பின் ;

(ஆ) அத்தகைய ஆள் ஏதேனும் சட்டத்தின் கீழ் உள்ளூ ராதிகார சபையொன்றுக்கான உறுப்பினர்களின் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தகைமையற்றவராக விருப்பின் ;

(இ) அவர் பாராளுமன்ற உறுப்பினரொருவராகவிருப் பின் ;

(ஈ) அவர் வேறேதேனும் மாகாண சபையின் உறுப்பின ராகவிருப்பின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மா காண சபைகளுக்குத் தேர்தலுக்கான ஒரு வேட் பாளராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக விருப்பின் ;

(உ) அவர் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினுல் அல்லது சுயேச்சைக்குழுவி னுல் மாகாண சபையொன்றுக்குத் தேர்தலுக்கான ஒரு வேட்பாளராகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வராகவிருப்பின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண சபையொன்றின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் படவோ அல்லது அத்தகைய சபையின் உறுப்பினராக அமரவோ வாக்களிக்கவோ தகைமையுடையவராதலாகாது.

உறுப்பினர்களினால் செய்யப்படும் சத்தியம் அல்லது உறுதியுரை.

4. ஆளெவரும், அவர் அரசியலமைப்பின் நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்யும்வரை அல்லது கீழொப்பமிடும் வரை அல்லது உறுதியுரையை மொழியும் வரை அல்லது கீழொப்பமிடும் வரை அத்தகைய உறுப்பினராக அமர்தலோ அல்லது வாக்களித்தலோ ஆகாது.

ஆசனங்களை வறிதாக்கல்.

5. (1) மாகாண சபையின் உறுப்பினரொருவர்—

(அ) 3 ஆம் பிரிவிற் கூறப்பட்ட ஏதேனும் தகைமையினத்துக்கு அமைந்தவராகவரின் ; அல்லது

(ஆ) தவிசாளருக்கு முகவரியிட்டனுப்பப்படும் அவரது கைப்பட்ட எழுத்தின்மூலம் தமது ஆசனத்திலிருந்து விலகின்,

மாகாண சபையில் அவரது ஆசனம் அதன் மேல் வறிதாதல் வேண்டும்.

(2) தொண்ணூறு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு மாகாண சபையின் உறுப்பினரொருவர் சபையின் அனுமதியின்றி அதன் எல்லாக் கூட்டங்களுக்கும் வருகை தராதிருப்பின் சபையானது அவரது ஆசனத்தை வறிதான தென வெளிப்படுத்தலாம்.

ஆயின், சொல்லப்பட்ட தொண்ணூறு நாட்களைக் கொண்ட காலப்பகுதியைக் கணிக்கையில், அடுத்தடுத்துவரும் நான்கு நாட்களுக்கதிகமாக சபையானது அமர்வுநிறுத்தப்பட்டுள்ள ஏதேனும் காலப்பகுதி பற்றிக் கணக்கெதுவும் எடுக்கப்படுதலாகாது.

சத்தியம் செய்யும் முன்னர் அல்லது தகைமையற்றவராகவிருக்கும்போது அமர்வதற்கும் வாக்களிப்பதற்குமான தண்டம்.

6. ஆளொருவர் மாகாண சபையொன்றின் உறுப்பாண்மைக்காக 4 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுமுன்னர் அல்லது தாம் தகைமையுடையவரல்லர் என அல்லது தாம் தகைமையற்றவர் என அறிந்துகொண்டு அச்சபையின் உறுப்பினரொருவராக அமர்ந்தால் அல்லது வாக்களித்தால் அவர் அவ்வாறு அமரும் அல்லது வாக்களிக்கும் ஒவ்வொரு நாள் தொடர்பிலும் நூறு ரூபாவான தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும் ; இத்தொகை அரசுக்கு வருமதியான கடனென்றாக அறவிடப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 11

தவிசாளரும் பிரதித் தவிசாளரும்.

7. (1) மாகாண சபை ஒவ்வொன்றும், இயன்றளவு விரைவாக முறையே சபையின் தவிசாளராகவும் பிரதித் தவிசாளராகவும் இருப்பதற்கென சபையின் உறுப்பினர்கள் இருவரைத் தெரிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், தவிசாளரின் அல்லது பிரதித் தவிசாளரின் பதவி வறிதாக வருகின்றவாறு அடிக்கடியாக விடயத்துக்கேற்ப தவிசாளராக அல்லது பிரதித் தவிசாளராக இருப்பதற்கென சபையானது இன்னோர் உறுப்பினரைத் தெரிவுசெய்தலும் வேண்டும்.

(2) மாகாண சபையொன்றின் தவிசாளராக அல்லது பிரதித் தவிசாளராகப் பதவிவகிக்கும் உறுப்பினர் —

(அ) சபையின் உறுப்பினராக இல்லாதொழிந்தால் தமது பதவியை வறிதாக்குதல் வேண்டும் ;

(ஆ) அத்தகையை உறுப்பினர் தவிசாளராக விருப்பின் பிரதித் தவிசாளருக்கும், அத்துடன் அத்தகைய உறுப்பினர் பிரதித் தவிசாளராக விருப்பின் தவிசாளருக்கும் முகவரியிட்டனுப்பப் படும் தமது கைப்பட்ட எழுத்தின்மூலம் எந் நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம் ;

(இ) (சமுகமளிக்காதோர் உட்பட) சபையின் முழு எண்ணிக்கையினரான உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்ட சபையின் தீர்மானமொன்றினால் தமது பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

ஆயின், மேலும் சபையானது கலைக்கப்படும் போதெல்லாம் கலைத்தலின்பின்னர் சபையின் முதலாவது கூட்டத்துக்கு நேர் முன்னர்வரை தவிசாளர் தமது பதவியை வறிதாக்குதலாகாது.

(3) தவிசாளரின் பதவி வறிதாகவிருக்கும்போது, பதவிக்கான கடமைகள் பிரதித் தவிசாளரினால், அல்லது பிரதித் தவிசாளரின் பதவியும் வறிதாகவிருப்பின் சபையின் நடவடிக்கைமுறை பற்றிய விதிகளினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாருன சபையின் அத்தகைய உறுப்பினரினால் புரியப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) சபையின் ஏதேனும் அமர்வில் தவிசாளர் வருகை தராதபோது, பிரதித் தவிசாளர், அல்லது அவரும் வருகை தராதிருப்பின் சபையின் நடவடிக்கைமுறை பற்றிய விதிகளினுல் தீர்மானிக்கப்படக்கூடியவாருன அத்தகைய ஆள், அல்லது அத்தகைய ஆளெவரும் சமூகமளித்திருக்காவிடின், சபையினுல் தீர்மானிக்கக்கூடியவாருன அத்தகைய வேறு ஆள் தவிசாளராகச் செயலாற்றுதல் வேண்டும்.

(5) மாகாண சபையின் தவிசாளருக்கும் பிரதித் தவிசாளருக்கும் நியதிச் சட்டத்தின் மூலம் மாகாண சபையினுல் முறையே நிர்ணயிக்கப்படக்கூடியவாருன அத்தகைய சம்பளங்களும் அத்துடன் படிகளும் அத்துடன் அதற்கான ஏற்பாடு அவ்வாறு செய்யப்படும்வரை, சனுதிபதியின் அங்கீகாரத்துடன் ஆளுநர், கட்டளைமூலம் தீர்மானிக்கக்கூடியவாருன அத்தகைய சம்பளங்களும் படிகளும் செலுத்தப்படுதல் வேண்டும்.

தவிசாளரும் பிரதித் தவிசாளரும் அவரது அகற்றுகைக்கான தீர்மானம் ஆராயப்படும் போது தலைமை வகித்தலாகாது.

8. (1) மாகாண சபையின் ஏதேனும் அமர்வில் தவிசாளரைத் தமது பதவியிலிருந்து அகற்றுவதற்கான ஏதேனும் தீர்மானம் சீர்தூக்கிப் பார்க்கப்படுகையில், தவிசாளர், அல்லது பிரதித் தவிசாளரைத் தமது பதவியிலிருந்து அகற்றுவதற்கான ஏதேனும் தீர்மானம் சீர்தூக்கிப்பார்க்கப்படுகையில் பிரதித் தவிசாளர், அவர் சமூகமளித்திருக்கும் போதிலும் தலைமை வகித்தலாகாது என்பதுடன், 7 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் விடயத்துக்கேற்ப தவிசாளர் அல்லது பிரதித் தவிசாளர் வருகை தராதுள்ள அமர்வொன்று தொடர்பாக அவை ஏற்புடையனவாகின்றவாறு அத்தகைய ஒவ்வோர் அமர்வு தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) தவிசாளரானவர் பதவியிலிருந்து தமது அகற்றுகைக்கான ஏதேனும் தீர்மானம் சீர்தூக்கிப் பார்க்கப்படும்போது மாகாண சபையில் உரையாற்றுவதற்கும், அத்துடன் அதன் நடவடிக்கைகளில் வேறுவகையாகப் பங்குபற்றுவதற்கும் உரிமையுடையவராதல் வேண்டுமென்பதுடன், 10 ஆம் பிரிவில் எது எப்படியிருப்பினும், அத்தகைய நடவடிக்கைகளின்போது அத்தகைய தீர்மானத்தின்மீது அல்லது வேறேதேனும் கருமத்தின்மீது முதல் தடவையில் மட்டுமே வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்; ஆனுல் வாக்குகள் சமமாகவுள்ள ஒரு விடயத்தில் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணசபை உறுப் பினர்களின் தத்துவங் களும் சிறப்புரிமை களும்.

9. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மாகாண சபையொன்றின் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துகின்ற விதிகளுக்கும் நியமயியற் கட்டளைகளுக்கும் அமைய மாகாண சபை ஒவ்வொன்றிலும் பேச்சுச் சுதந்திரம் இருத்தல் வேண்டும்.

(2) மாகாண சபையின் உறுப்பினரெவரும், சபையில் அல்லது அதன் ஏதேனும் குழுவில் அவரால் கூறப்படும் எது தொடர்பிலும் அல்லது அவரால் கொடுக்கப்படும் ஏதேனும் வாக்குத் தொடர்பிலும் ஏதேனும் நீதிமன்றத்தில் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதலாகாது என்பதுடன், அத்தகைய சபையின் அதிகாரத்தினுல் அல்லது அதிகாரத்தின் கீழ் ஏதேனும் அறிக்கை பத்திரம் எவையேனும் வாக்குகள் அல்லது நடவடிக்கைகள் வெளியிடப்பட்டமை தொடர்பில் ஆளெவரும் ஆளாதலுமாகாது.

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் பயனைக்கொண்டு மாகாண சபையொன்றில் அல்லது அதன் ஏதெனும் குழுவில் உரையாற்றுவதற்கும் அதன் நடவடிக்கைகளில் வேறுவகையாகப் பங்குபற்றுவதற்கும் உரிமையுள்ள ஆட்கள் தொடர்பாக அச்சபையின் உறுப்பினர்கள் தொடர்பாக அவை ஏற்புடையனவாகின்ற வாறு ஏற்புடையனவாதல் வேண்டும்.

சபையில் வாக்களித்தல்.

10. (1) இச்சட்டத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டதனைத் தவிர மாகாண சபையின் ஏதேனும் அமர்விலான எல்லா விடயங்களும் தவிசாளர், அல்லது அத்தகையவராகச் செயலாற்றுகின்ற ஆள் தவிர சமூகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மையினுல் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) தவிசாளர் அல்லது அத்தகையவராகச் செயலாற்றுகின்ற ஆள், முதல் தடவையில் வாக்களித்தலாகாது. ஆனுல் வாக்குகள் சமமாகவுள்ள விடயத்தில் அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதலும் பிரயோகித்தலும் வேண்டும்.

(3) மாகாண சபையொன்று அதன் உறுப்பாண்மையிலான வெற்றிடத்தைப் பொருட்படுத்தாது செயலாற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையிலான எவையேனும் நடவடிக்கைகள், அமர்வதற்கு அல்லது வாக்களிப்பதற்கு அல்லது நடவடிக்கைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுவகையாகப் பங்குபற்றுவதற்கு உரித்தில்லாத எவரேனும் ஆள் அவ்வாறு செய்துள்ளாரென அடுத்துப் பின்னர் கண்டுபிடிக்கப்படினும் செல்லுபடியானவையாதலும் வேண்டும்.

(4) மாகாண சபையொன்றின் கூட்டத்தை அமைப்பதற்கான கூட்டநடப்பெண் சபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொன்றுதல் வேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலொன்று முழு எண்ணாகவும் பின்னமாகவும் உள்ளவிடத்து, அந்த முழு எண்ணுக்கும் பின்னத்துக்கும் நேர் முன்னருமுள்ள கூடிய முழு எண்ணே இப்பிரிவின் நோக்கத்துக்காக உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலொன்றெனக் கருதப்படுதல் வேண்டும்.

(5) மாகாண சபையொன்றின் கூட்டத்தின்போது எந்நேரத்திலும் கூட்டநடப்பெண் எதுவும் இல்லாதிருப்பின், ஒன்றில் கூட்டநடப்பெண் ஒன்று இருக்கும்வரை சபையை ஒத்திவைத்தல் அல்லது கூட்டத்தை இடைநிறுத்திவைத்தல் தவிசாளரின் அல்லது அத்தகையவராகச் செயலாற்றும் ஆளின் கடமையாதல் வேண்டும்.

நடவடிக்கை முறை பற்றிய விதிகள்.

11. மாகாண சபையொன்று, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அதன் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்துவதற்கும் அதன் அலுவல்களை நடாத்துவதற்கும் விதிகளை ஆக்கலாம்.

ஆயின், மாகாண சபையானது, அத்தகைய சபையின் தவிசாளருடனை கலந்தாலோசனையின் பின்னரும் சனாதிபதியின் அங்கீகாரத்துடனும் பின்வருவனவற்றுக்காக விதிகளை ஆக்குதல் வேண்டும் :—

(அ) நிதிசார் அலுவல்களை நேரகாலத்தோடு பூர்த்திசெய்வதனை உறுதிப்படுத்துதல் ;

(ஆ) ஏதேனும் நிதிசார் கருமம் தொடர்பாக அல்லது மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணங்களை ஒதுக்கீடு செய்வதற்கான ஏதேனும் நியதிச்சட்டம் தொடர்பாக மாகாண சபையின் நடவடிக்கை முறையையும் அதில் அலுவல்கள் நடாத்துவதையும் ஒழுங்கு படுத்துதல் ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) ஆளுனர் தமது தற்றுணிபில் செயலாற்றுவதற்கு இச்சட்டத்தினுல் தேவைப்படுத்தப்படும் அளவுக்கு அவரின் பணிகளை நிறைவேற்றுதலைப் பாதிக்கும் ஏதேனும் கருமத்தைப் பற்றி ஆராய்வதை அல்லது அதுபற்றி கேள்விகள் கேட்பதை தடை செய்தல்.

மாகாண சபையின் நடவடிக்கைகள் பற்றி நீதிமன்றம் விசாரணை செய்தலாகாது.

12. (1) மாகாண சபையொன்றிலான எவையேனும் நடவடிக்கைகளின் செல்லுபடியாந்தன்மை, சார்த்தப்படும் நடவடிக்கைமுறையிலான ஒழுங்கீனம் என்ற ஏதுவின்மீது கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

(2) மாகாண சபையொன்றின் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது அலுவல்களை நடாத்துவதற்கு அல்லது ஒழுங்கைப் பேணுவதற்கு இச்சட்டத்தினுல் அல்லது இச்சட்டத்தின்கீழ் தத்துவங்கள் உரித்தாக்கப்பட்டுள்ள அத்தகைய சபையின் அலுவலர் அல்லது உறுப்பினரெவரும், அத்தத்துவங்களை அவர் பிரயோகித்தல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு அமைந்தவராதலாகாது.

அரச ஆதனத்தை வரிவிதித்தலிருந்து விலக்களித்தல்.

13. அரசின் ஆதனமானது, பாராளுமன்றம் சட்டத்தினுல் வேறுவகையாக ஏற்பாடுசெய்யக்கூடிய அளவுக்குத் தவிர மாகாண சபையொன்றினுல் ஆக்கப்படும் ஏதேனும் நியதிச்சட்டத்தினுல் அல்லது நியதிச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் எல்லா வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

சட்டமூலங்கள் காலம் கழிந்து போதல்.

14. (1) மாகாண சபையொன்றில் முடிவுறுதிருக்கும் நியதிச் சட்டமொன்று அத்தகைய சபை அமர்வு நிறுத்தப்பட்டமை காரணமாக காலம் கழிந்து போதலாகாது.

(2) மாகாணசபையொன்றில் முடிவுறுதிருக்கும் நியதிச் சட்டமொன்று சபை கலைக்கப்படுவதன் மீது காலம் கழிந்துபோதல் வேண்டும்.

அலுவல்களை நடாத்துதல்.

15. (1) மாகாணத்தின் நிருவாகத்தைக் கூடியளவு வசதியாகக் கொண்டுநடாத்துவதற்கும், சொல்லப்பட்ட அலுவல்கள் அவை தொடர்பில் ஆளுநர் அரசியலமைப்பினுலோ அல்லது அரசியலமைப்பின்கீழ் தமது தற்றுணிபில் செயலாற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படும் அலுவல்களாகவிராத அளவுக்கு அந்த அலுவல்களை அமைச்சர்களுக்கிடையே குறித்தொதுக்குவதற்கும் ஆளுநர் விதிகளை ஆக்குதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இச்சட்டத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்ட தனைத் தவிர ஆளுநரின் எல்லா நிறைவேற்று நடவடிக்கைகளும், அவை அவரது அமைச்சர்களின் ஆலோசனையின்மீது எடுக்கப்படினுஞ்சரி வேறுவகையாகவாயினுஞ்சரி, சனுதிபதியின் பெயரில் எடுக்கப்படுவதென எடுத்துக்கூறப்படுதல் வேண்டும்.

(3) சனுதிபதியின் பெயரில் செய்து நிறைவேற்றப்படும் கட்டளைகளும் ஏனைய சாதனங்களும், ஆளுநரினுல் ஆக்கப்பட வேண்டிய விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய முறையில் மெய்யென்று உறுதிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்ட கட்டளை அல்லது சாதனம் ஒன்றின் செல்லுபடியாந்தன்மை அது சனுதிபதியினுல் செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஒரு கட்டளை அல்லது சாதனம் அல்லவென்ற ஏதுவின்மீது கேள்விகளுக்குட்படுத்தலுமாகாது.

ஒப்பந்தங்களும் துடர்ச்சிகளும்.

16. (1) மாகாண ஆளுநரின் நிறைவேற்றுத் தத்துவத்தைப் பிரயோகிக்கையில் செய்துகொள்ளப்படும் எல்லா ஒப்பந்தங்களும், அம் மாகாணத்துக்கென அமைக்கப்பட்ட மாகாண சபையின் பெயரில் அத்தகைய மாகாண சபை கூட்டிணைக்கப்பட்டவொரு குழு என்ருற்போன்று செய்துகொள்ளப்படுதலும் புரியப்படுதலும் வேண்டும்.

(2) அத்தகைய நிறைவேற்றுத் தத்துவத்தின் பிரயோகம் தொடர்பான எல்லாத் துடர்ச்சிகளும், அத்தகைய மாகாண சபை கூட்டிணைக்கப்பட்டவொரு குழு என்ருற் போன்று அத்தகைய மாகாண சபையினுல் அல்லது அதற்கெதிராகக் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

செயலகம்.

17. (1) மாகண சபையொன்று அதன் சொந்த செயலகப் பணியாட்டொகுதியினரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மாகாண சபையொன்று, நியதிச் சட்டத்தின் மூலம் அதன் செயலகப் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படும் ஆட்களின் ஆட்சேர்ப்பையும், சேவை நிபந்தனைகளையும் ஒழுங்குபடுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையில் பயன்படுத் தப்பட வேண்டிய மொழி.

18. (1) மாகாண சபையின் உறுப்பினரொருவர், தேசிய மொழிகளுள் ஒன்றில் தமது கடமைகளைப் புரியவும் தமது பணிகளை நிறைவேற்றவும் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) இரு தேசிய மொழிகளிலும் ஆங்கில மொழியிலான மொழிபெயர்ப்பொன்றுடன், மாகாண சபையினால் நியதிச் சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டும்.

மாகாண சபையில் ஆராய்தலின் மீதான மட்டுப்பாடு.

19. அரசியலமைப்பின் 154 ஆ என்னும் உறுப்புரையின் (4) ஆம் பந்திக்கமைய, சனாதிபதியின் அல்லது ஆளுநரின் அல்லது நீதித்துரை அலுவலரொருவரின் அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவரின் நடத்தை தொடர்பில் ஒரு மாகாண சபையில் ஆராய்வெதுவும் நடைபெறுதலாகாது.

இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கு சனாதிபதிக்குள்ள தத்துவம்.

20. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதில், அத்துடன் குறிப்பாக மாகாணமொன்றுக்கு மாகாண சபையொன்றை அமைத்தல் தொடர்பாக ஏதேனும் இடர்ப்பாடு எழுமாயின் சனாதிபதி, கட்டளைமூலம், அத்தகைய இடர்ப்பாட்டை அகற்றும் நோக்கத்துக்காக அவசியமானதென அல்லது உசிதமானதென அவருக்குத் தோன்றுகின்றவாறுனதும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராததுமான அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

ஒதுக்கு நிரல் (நிரல் II), மாகாண நிரல் (நிரல் I), ஒருங்கியை நிரல் (நிரல் III) என்பன இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இராஜாங்க அமைச்சர் மாண்புமிக்க பி. சிதம்பரம் அவர்கள் தலைமை தாங்கிய இந்திய தூதுக்குழுவினருடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட மாகாண சபைகள் பற்றிய குறிப்பில் பின்வருமாறு சுட்டிக் காட்டப்பட்டது :—

> " மேலும் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னர், 30.08.85 ஆந் திகதிய ஒருமைப்பாட்டு, இணக்க வரைவுத் திட்டத்துக்கான பின்னிணைப்பு I ல் அடங்கியுள்ள முன்மொழிவுகளுக்கு பரந்தளவில் நேரொத்த விடயங்களும் இந்திய அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையின் II ஆம் நிரலிலும் III ஆம் நிரலிலும் உள்ள பதிவீடுகளும் மாகாண சபைகளுக்கு உரித்தாக வந்துறுதல் வேண்டும். "

30.08.85 ல் ஆரம்பிக்கப்பட்ட ஒருமைப்பாட்டு, இணக்க வரைவுத் திட்டத்துக்கான பின்னிணைப்பு I ல், மாகாண சபைகளினுல் பிரயோகிக்கப்பட வேண்டிய சில முக்கிய தத்துவங்களையும் பணிகளையும் குறித்துரைக்கும்போது, பின்வருமாறு தெளிவாகக் கூறப்பட்டது :—

> " சந்தேகங்களை நீக்கிவைப்பதற்காக, பாராளுமன்றத்துக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டும் விடயங்களும் பணிகளும் பின்னிணைப்பு II ல் குறித்துரைக்கப்பட்டுள்ளன. "

இப்பொழுது சமர்ப்பிக்கப்படும் ஒதுக்கு நிரலில் (நிரல் II) குறித்துரைக்கப் பட்டுள்ள விடயங்களும் பணிகளும, ஒருசில சிறு மாற்றங்களைத் தவிர, ஒருமைப்பாட்டு, இணக்க வரைவுத் திட்டத்தின் பின்னிணைப்பு II ல் உள்ளதைப் போன்றனவாகும். (பார்க்க : பாதுகாப்பும் தேசிய பந்தோபஸ்தும் ; வரலாற்று நீர்ப்பரப்புகள், ஆள்புல நீர்ப்பரப்புகள் பிரத்தியேக பொருளாதார வலயமும் கண்டமேடும், உள்ளக நீர்ப்பரப்புகளும் உட்பட கரையோர வலயங்கள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்தனவென பாராளுமன்றத்தினுல் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட, தொல்பொருளியிற் செயற்பாடுகளும், அமைவிடங்களும், புராதன சின்னங்களும்), சட்ட வரைவு நோக்கங்களுக்காக குறித்தசில பதப்பிரயோக மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன (பார்க்க : நிரல் I விடயம் 1 ல் குறித்துரைக்கப்பட்ட அளவுக்குத் தவிர, சட்டமும் ஒழுங்கும் குற்றத்தடுப்பும் கண்டுபிடிப்பும் ; சனுதிபதித் தேர்தல்கள், பாராளுமன்ற, மாகாண சபை, உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் உட்பட தேர்தல்கள் ; மாகாணங்களுக்கிடையிலான வியாபாரமும் வர்த்தகமும் ; அரச காணிகள் அத்துடன் கடற்கரை முற் பிரதேசம், நிரல் I விடயம் 26 ல் குறித்துரைக்கப்பட்டுள்ள அளவுக்குத் தவிர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண நிரலும் (நிரல் I) ஒருங்கியை நிரலும் (நிரல் III) தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியுடனான பேச்சுவார்த்தையின் பின்னர் இலங்கை அரசாங்கத்தின் முன்மொழிவுகளைக் கொண்டுள்ளன. மாகாண நிரலிலும் (நிரல் I) ஒருங்கியை நிரலிலும் (நிரல் III) காணப்படும் விடயங்கள் பின்னிணைப்பு I ஐக் காட்டிலும் மிக விரிவானவையாகும் என்பதுடன் இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையிலுள்ள நிரல் II ஐயும் நிரல் III ஐயும் பெருமளவில் ஒத்தனவுமாகும்.

அதிகாரப் பரவலாக்கலைத் தொடர்ந்து காணப்படவேண்டிய நிருவாக அமைப்பு முறை பற்றிய அறிக்கையொன்றும் எம்மிடமுள்ளது ; அதனையும் அனுப்பிவைக்க முடியும். எவ்வாருயினும், நிரல்கள் தீர்மானிக்கப்பட்ட பின்னரே இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடப்பட வேண்டுமென நாம் நம்புகின்றோம்.

நிரல்கள் இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டதன் பின்னரே நிதி தொடர்பான ஏற்பாட்டை முடிவுசெய்ய இயலும்.

செப்டெம்பர் 23, 1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரல் II

(ஒதுக்கிய நிரல்)

(உறுப்புரை 154 எ (1))

எல்லா விடயங்களினதும் பணிகளினதும் மீதான தேசிய கொள்கை பாதுகாப்பும் தேசிய பந்தோபஸ்தும் ; உள்நாட்டுப்பாதுகாப்பு ; I ஆம் நிரலின் 1 ஆம் விடயத்தில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்குத் தவிர, சட்டமும் ஒழுங்கும், குற்றங்களைத் தடுத்தலும் கண்டுபிடித்தலும்.

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் —

(அ) பாதுகாப்புக்குத் தயார்ப்படுத்துதல், போர் நிலைமைகளின் போது பாதுகாப்பை நிலைநாட்டுவதற்கும் அந்நிலைமை முடிவடைந்ததன் பின்னர் பயனுறுவகையில் சேர்க்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கும் உகந்தனவான அத்தகைய எல்லாச் செயல்களும் உட்பட இலங்கையினதும் அதன் ஒவ்வொரு பாகத்தினதும் பாதுகாப்பு ;

(ஆ) கடற்படை இராணுவப்படை மற்றும் விமானப்படைகள் ; இலங்கை அரசாங்கத்தின் வேறு எவையேனும் படைகள் ;

(இ) குடியியல் தத்துவத்துக்கு உதவியாக ஏதேனும் மாகாணத்தில் இலங்கை அரசாங்கத்தின் ஆயுதந் தாங்கிய ஏதேனும் படையை அல்லது இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அமைவான வேறு ஏதேனும் படையை அல்லது அதன் ஏதேனும் படையணியை அல்லது படைப்பிரிவை சேவையிலீடுபடுத்துதல் ; அவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் போது அத்தகைய படைகளைச் சார்ந்த உறுப்பினர்களின் தத்துவங்களும், நியாயாதிக்கமும், சிறப்புரிமைகளும், பொறுப்புக்களும் ;

(ஈ) படைமுகாம் இடப்பரப்புகளின் எல்லையை வரையறுத்தல், அத்தகைய இடப்பரப்புகளில் உள்ளூர் சுயாட்சி, அத்தகைய படைமுகாம் இடப்பரப்புகளில் அதிகாரசபைகளை அமைத்தலும் அவற்றின் தத்துவங்களும், (வாடகைகள் மீதான கட்டுப்பாடு உட்பட) அத்தகைய இடப்பரப்புகளில் வீடமைப்பு இடவசதியை ஒழுங்குபடுத்துதல் ;

(உ) கடற்படை, இராணுவ மற்றும் வான்படை வேலைகள் ;

(ஊ) படைக்கலங்கள், சுடுபடைக்கலங்கள், ஆயுதங்கள், வெடிப்பொருள்கள் ;

(எ) அணுசக்தியும் அதன் உற்பத்திக்கு அவசியமான கனிய மூலவளங்கள் ;

(ஏ) பாதுகாப்பு நோக்கத்துக்காக அல்லது போரை மேற்கொள்ளுவதற்காக அவசியமானவையென சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்ட கைத்தொழில்கள் ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஐ) குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ;

(ஒ) இலங்கையின் பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அல்லது பந்தோபஸ்து என்பவற்றுடன் தொடர்புபட்ட காரணங்களுக்காகத் தடுத்து வைத்தல் ; அவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட ஆட்கள் ;

(ஓ) ஏதேனும் மாகாணத்துக்கு வெளியேயுள்ள ஏதேனும் இடப்பரப்புக்கு அம்மாகாணத்தைச் சேர்ந்த பொலிசுப் படை உறுப்பினர்களின் தத்துவங்களையும் நியாயாதிக்கத்தையும் விசாரித்தல், ஆனால் ஒரு மாகாணத்தைச் சேர்ந்த ஏதேனும் பொலிசுப் படையினரை அம்மாகாணத்துக்கு வெலியேயுள்ள ஏதேனும் இடப்பரப்பில், அவ்விடப் பரப்பு அமைந்துள்ள மாகாண சபையின் சம்மதமில்லாது தத்துவங்களையும் நியாயாதிக்கத்தையும் பிரயோகிக்க இயலச் செய்ய முடியாது. ஏதேனும் மாகாணத்துக்கு வெளியேயுள்ள புகையிரத இடப்பரப்புகளுக்கு அம்மாகாணத்தைச்சேர்ந்த பொலிசுப் படையினரின் தத்துவங்களையும் நியாயாதிக்கத்தையும் விசாலித்தல்.)

வெளிநாட்டு அலுவல்கள் :

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்—

(அ) வெளிநாட்டு அலுவல்கள் ; இலங்கை அரசாங்கத்தை வேறு ஏதேனும் வெளிநாட்டுடன், உறவுகொள்ளவைக்கும் எல்லாக் கருமங்களும் ;

(ஆ) இராஜதந்திர, காவற்றூது மற்றும் வியாபாரப் பிரதிநிதித்துவம் ;

(இ) ஐக்கிய நாடுகள் ஒழுங்கமைப்பு ;

(ஈ) சர்வதேச மாநாடுகள், கழகங்கள், மற்றும் வேறு குழுக்கள் ஆகியவற்றில் பங்குபற்றுதலும் அங்கு எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப் படுத்தலும் ;

(உ) வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளுதலும் ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் சமவாயங்களையும் வெளிநாடுகளுடன் நடைமுறைப்படுத்துதல் ;

(ஊ) போரும் சமாதானமும் ; அத்துடன்

(எ) வெளிநாட்டு நியாயாதிக்கம்.)

அஞ்சல், தொலைச்செய்திப் போக்குவரத்து, ஒலிபரப்பு, தொலைக்காட்சி

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்—

(அ) அஞ்சல் மற்றும் தந்திச்சேவை, தொலைபேசிகள், கம்பியிலி, ஒலிபரப்பு மற்றும் அதையொத்த செய்திப் பரிமாற்ற வழிகள் ; அத்துடன்

(ஆ) திரையிடப்படுவதற்காக சினிமாப் பாடல்களை அனுமதித்தல்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதித்துறையையும், நீதிமன்ற அமைப்பையும் பொறுத்தவரை நீதி.

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்—

(அ) உயர்நீதிமன்றத்தின் அமைப்பும், ஒழுங்கமைப்பும், நியாயாதிக்கமும், தத்துவங்களும் (இது அத்தகைய நீதிமன்ற அவமதிப்பையும் உள்ளடக்கும்) அங்கு பெறப்படும் கட்டணங்கள், உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதிமன்றங்கள் ஆகியவற்றில் தொழில்புரிவதற்கு உரித்துடைய ஆட்கள் ;

(ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அமைப்பும், ஒழுங்கமைப்பும், நியாயாதிக்கமும், தத்துவங்களும், அங்கு பெறப்படும் கட்டணங்களும் ; அத்துடன்

(இ) உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பன தவிர்ந்த மற்றெல்லா நீதிமன்றங்களினதும் நியாயாதிக்கமும் தத்துவங்களும்.)

தேசிய வருவாய், பணக்கொள்கை, வெளிநாட்டு மூலவளங்கள் என்பன தொடர்பில் நிதி, சுங்கப்பகுதி

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்—

(அ) இலங்கை அரசாங்கத்தின் பகிரங்கக்கடன் ;

(ஆ) தாள்நாணயம் ; குற்றிநாணயம், சட்டபூர்வப்பணம், வெளிநாட்டு நாணய மாற்று ;

(இ) வெளிநாட்டுக் கடன்கள் ;

(ஈ) மத்திய வங்கி ;

(உ) தேசிய சேமிப்பு வங்கி ;

(ஊ) இலங்கை அரசாங்கத்தினுல் அல்லது மாகாணசபையொன்றினுல் நடாத்தப்படும் அதிர்ஷ்டலாபச்சீட்டுக்கள் ;

(எ) வங்கித்தொழில்;

(ஏ) நாணயமாற்று, உண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள், இவைபோன்ற வேறு சாதனங்கள்;

(ஐ) காப்புறுதி;

(ஒ) பங்குத்தொகுதி மாற்றுக்களும், எதிர்காலஞ்சார் சந்தைகளும்;

(ஓ) இலங்கை அரசாங்கத்தினதும் மாகாணங்களினதும் கணக்குகளின் கணக்காய்வு;

(ஔ) கமத்தொழில் வருவாய் தவிர்ந்த ஏனைய வருவாய் மீதான வரிகள்;

(க) ஏற்றுமதித் தீர்வை உட்பட சுங்கத்தீர்வை;

(ங) இலங்கையில் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் புகையிலை மற்றும் ஏனைய பண்டங்கள் மீதான கலால் தீர்வை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ச) தனியாட்களினதும், கம்பனிகளினதும், கமத்தொழிற் காணி நீங்களான, சொத்துக்களின் மூலதனப் பெறுமதியின் மீதான வரிகள்; கம்பனிகளின் மூலதன மீதான வரிகள்;

(ஞ) கமத்தொழிற் காணி தவிர்ந்த ஏனைய ஆதனத்துக்கு வழியுரிமையாளராக வருதல் தொடர்பிலான தீர்வைகள்;

(ட) புகையிரத, கடல், அல்லது வான் மார்க்கமாகக் காணப்படும் பண்டங்கள் அல்லது பயணிகள் மீதான முடிவிடவரிகள்; புகையிரத கட்டணங்கள் மற்றும் ஏற்றுபொருள்கள் மீதான வரிகள்;

(ண) பங்குத்தொகுதி மாற்றுகள் மற்றும் எதிர்காலஞ்சார் சந்தைகள் என்ப வற்றிலான கொடுக்கல்வாங்கல்கள் மீதான முத்திரைவரி தவிர்ந்த வரிகள்;

(த) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள், ஏற்றுபொருள் பட்டியல்கள், நாணயக் கடிதங்கள், காப்புறுதிப் பத்திரங் கள், பங்குக்கைமாற்றல்கள், தொகுதிக் கடன்முறிகள், பதிலிப் பத்திரங் கள், பற்றுச்சீட்டுக்கள் என்பன தொடர்பிலான முத்திரைவரி வீதங்கள்;

(ந) செய்தித்தாள்கள் விற்பனை அல்லது கொள்வனை மீதான மற்றும் அவற்றில் வெளியிடப்படும் விளம்பரங்கள் மீதான வரிகள்;

(ப) செய்தித்தாள்கள் தவிர்ந்த ஏனைய பண்டங்களின் விற்பனை அல்லது கொள்வனை மீதான வரிகள் (அத்தகைய விற்பனை அல்லது கொள்வனை மாகாணங்களுக்கிடையிலான வியாபாரத்தின்போது அல்லது வர்த்தகத் தின்போது இடம்பெறுமிடத்து);

(ம) அனுப்பு பண்டப்பொதிகளின் மீதான வரிகள் (அத்தகைய அனுப்பு பண்டப்பொதி அதனை ஆக்கியவருக்காயினுஞ்சரி வேறு எவரேனும் ஆளுக்காயினுஞ்சரி) அத்தகைய அனுப்புகை மாகாணங்களுக்கிடை யிலான வியாபாரத்தின்போது அல்லது வர்த்தகத்தின்போது இடம்பெறு கின்றவிடத்து;

(ய) கூட்டுத்தாபன வரி;

(ர) கமத்தொழிற் காணி தவிர்ந்த ஏனைய ஆதனந்தொடர்பிலான மரணச் சொத்து வரி).

வெளிநாட்டு வியாபாரம் ; மாகாணங்களுக்கிடையிலான வியாபாரமும் வர்த்தகமும்

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் —

(அ) வெளிநாடுகளுடன் வியாபாரமும் வர்த்தகமும்; சுங்க முகவிடங்களுக் கூடாக இறக்குமதி, ஏற்றுமதி; சுங்க முகவிடங்களை வரையறுத்தல்; அத்துடன்

(ஆ) மாகாணங்களுக்கிடையிலான வியாபாரமும் வர்த்தகமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகங்களும் இறங்குதுறைகளும்

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் —

(அ) துறைமுகங்களின் எல்லைவரையறை, அங்குள்ள துறைமுக அதிகார சபைகளின் அமைப்பு, தத்துவங்கள் என்பன உட்பட, பாரிய துறைமுகங்களென பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தின் கீழ் அல்லது இப்போதுள்ள சட்டத்தின்கீழ் அல்லது சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட துறைமுகங்கள்; அத்துடன்

(ஆ) துறைமுகத் தொற்றுத்தடைத் தனிப்படுத்தல், அதனோடு தொடர்புபட்ட வைத்தியசாலைகள் உட்பட, கடலோடி மட்டும் கடல்சார்ந்த வைத்திய சாலைகள்.)

விமானப் போக்குவரத்தும் விமானத்துறைகளும்

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் —

விமானவழிகள், வானூர்தி மற்றும் வான் கலமோட்டு, விமானத்தளங்களை ஏற்பாடுசெய்தல், விமானப் போக்குவரத்தையும் விமானத் தளங்களையும் ஒழுங்குபடுத்தலும் ஒழுங்கமைத்தலும், வானூர்திக் கலைக்கல்விக்கும் பயிற்சிக்கும் ஏற்பாடுசெய்தலும், மாகாணத்தினாலும் ஏனைய முகவர் நிலையங்களினாலும் ஏற்பாடு செய்யப்படும். அத்தகைய கல்வி மற்றும் பயிற்சி முதலியவற்றை ஒழுங்குபடுத்துதலும்.)

தேசிய போக்குவரத்து

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் —

(அ) புகையிரதச் சேவைகள்;

(ஆ) தேசிய பெருந்தெருக்கள் என பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட பெருந் தெருக்கள்;

(இ) புகையிரத, கடல், வான் மார்க்கமாக அல்லது இயந்திரப் பொறிமுறையால் உந்தப்படும் கலன்கள் மூலம் தேசிய நீர்வழிகள் மார்க்கமாக பயணிகளையும் பண்டங்களையும் காவுதல்.)

ஆறுகளும், நீர்வழிகளும், கப்பற்றொழில் மற்றும் கப்பற்போக்குவரத்து, பொருளாதார வலயம், கண்ட மேடு; உள்நாட்டு நீர்நிலைகள் என்பன நீங்கலாக, வரலாற்று நீர்ப்பரப்புகள், ஆள்புல நீர்ப்பரப்புகள் என்பன உட்பட கரையோர வலயங்கள்; I ஆம் நிரலின் 26 ஆம் விடயத்தில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்குத் தவிர அரச காணிகளும் கரைமுகமும்.

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் —

(அ) கடற்கொள்ளைகள், வானில் அல்லது ஆழ்கடலில் புரியப்படும் குற்றங்கள், நிலத்தில், ஆழ்கடலில் அல்லது வானில் தேசங்களின் சட்டத்துக்கெதிராக புரியப்படும் தவறுகள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) பொறிமுறையால் உந்தப்படும் கலன்களைப் பொறுத்தவரை, தேசிய நீர்நிலைகள் என சட்டத்தின்மூலம் பாராளுமன்றத்தினுல் வெளிப்படுத்தப் பட்ட உள்ளூர் நீர்வழிகள் மீதான கப்பற்ருெழிலும் கப்பற்போக்குவரத் தும்; அத்தகைய நீர்வழிகளில் வீதியின் விதிப்பயன்பாடு;

(இ) அலைபாய் நீர்ப்பரப்பு மீதான கப்பற்ருெழிலும் கப்பற் போக்குவரத்தும் உட்பட கரையோர கப்பற்ருெழிலும் கப்பற்போக்குவரத்தும் ; வணிகக் கடற்றுறைக் கல்விக்கும் பயிற்சிக்குமான ஏற்பாடும் மாகாணங்களினுலும் முகவர் நிலையங்களினுலும் ஏற்பாடு செய்யப்படும் அத்தகைய கல்வியை யும் பயிற்சியையும் ஒழுங்குபடுத்துதல் ;

(ஈ) வெளிச்சவீடுகள், ஒளிக்கப்பல்கள், கலங்கரை விளக்கங்கள் மற்றும் பாதுகாப்பான கப்பற்ருெழில் மற்றும் வானூர்திப் போக்குவரத்துக்கான வேறு ஏற்பாடு என்பன உட்பட ;

(உ) இலங்கை அரசாங்கத்தினது கட்டுப்பாட்டின் கீழுள்ள அத்தகைய ஒழுங்குபடுத்தலும் அபிவிருத்தியும் பொதுமக்கள் நலனுக்கு உசிதமான தென சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினுல் வெளிப்படுத்தப்பட்டதாக இருக்குமளவுக்கு மாகாணங்களுக்கிடையிலான ஆறுகளையும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளையும் ஒழுங்குபடுத்தலும் அபிவிருத்தி செய்தலும் ;

(ஊ) ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கு அப்பால் மீன் பிடித்தலும் மீன் பிடிதொழி லும் ; அத்துடன்

(எ) இலங்கை அரசாங்கத்தின் ஆதனமும் அதிலிருந்து கிடைக்கும் வருமான மும் ஆனல் மாகாணத்தில் அமைந்துள்ள ஆதனத்தைப் பொறுத்தவரை பாராளுமன்றம் சட்டத்தினுல் வேறு விதமாக ஏற்பாடு செய்யும் அளவுக்குத் தவிர, மாகாணத்தினுல் ஆக்கப்படும் நியதிச்சட்டங்களுக்கு அமைவாக இருக்கும்.)

கனிப்பொருள்களும் சுரங்கங்களும்

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்—

(அ) எண்ணெய்படுமிடங்களையும் கனிஎண்ணெய் மூலவளங்களையும் ஒழுங்கு படுத்தலும் அபிவிருத்திசெய்தலும் ; பெற்ருேலியமும் பெற்ருேலியப் பொருட்களும் ; அபாயகரமாகத் தீப்பற்றுயியல்பினவெனச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினுல் வெளிப்படுத்தப்படும் ஏனைய திரவங்களும் பதார்த்தங்களும் ; அத்துடன்

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் கீழுள்ள அத்தகைய ஒழுங்குபடுத்தலும் அபிவிருத்தியும் பொதுமக்கள் நலனுக்கு உசிதமானதென சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினுல் வெளிப்படுத்தப்பட்டதாக இருக்குமளவுக்கு, சுரங்கங்களையும் கனிப்பொருள் அபிவிருத்தியையும் ஒழுங்குபடுத்துதல்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிவரவு குடியகல்வும் குடியுரிமையும்

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்—

(அ) குடியுரிமை, நாட்டுரிமைப்பேறு அத்துடன் அந்நியர் ;

(ஆ) புறத்தொப்படைத்தல் ; அத்துடன்

(இ) இலங்கைக்குள், சேர்த்துக்கொள்ளல், இலங்கையை விட்டு வெளியேறுதல் அத்துடன் வெளியேற்றப்படுதல் கடவுச் சீட்டுக்களும் விசாக்களும்.)

சனாதிபதி, பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராதிகாரசபைத் தேர்தல்கள் உட்பட, தேர்தல்கள்

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்—
பாராளுமன்ற, மாகாணசபை, உள்ளூராதிகாரசபை, மற்றும் சனாதிபதித் தேர்தல்கள் ; தேர்தல்கள் திணைக்களம்.)

குடிசன மதிப்பும் புள்ளிவிவரமும்

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் —

(அ) குடிசன மதிப்பு; அத்துடன்

(ஆ) இந்த நிரலிலுள்ள கருமங்கள் எதனதும் நோக்கத்துக்காக விசாரணைகள், அறவீடுகள் மற்றும் புள்ளி விவரங்கள்.)

தான்புரி தொழில் உத்தியோகங்களும் பயிற்சியும்

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் —

(அ) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களென சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்கள் ;

(ஆ) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களென சட்டத்தின்மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்டனவும், முழுமையாகவோ பகுதியளவிலோ இலங்கை அரசாங்கத்தினால் நடாத்தப்படும் அறிவியல் அல்லது தொழினுட்பக் கல்விக்கான நிறுவனங்கள் ;

(இ) (i) பொலிசு உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல் உட்பட உயர்தொழில், வாழ்க்கைத்தொழில் அல்லது தொழினுட்ப பயிற்சி; அல்லது

(ii) விசேட கற்கைகளை அல்லது ஆராய்ச்சியை ஊக்குவித்தல் ; அல்லது

(iii) குற்றப்புலனாய்வில் அல்லது துப்புத்துலக்குவதில் விஞ்ஞான ரீதியான அல்லது தொழினுட்ப ரீதியான உதவி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றுக்கான மாகாண முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் ;

(ஈ) உயர்கல்விக்கான அல்லது ஆராய்ச்சிக்கான நிறுவனங்களிலும் விஞ்ஞான மற்றும் தொழினுட்ப நிறுவனங்களிலும் தராதரங்களை ஒன்றிணைத்தலும் தீர்மானித்தலும்.)

தேசிய சுவடிக்கூடம்; தொல் பொருளியற் செயற்பாடுகள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்தனவென பாராளுமன்றத்தினால் ஏதேனும் சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்படும் அமைவிடங்களும் தொல்பொருள்களும்.

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் —

புராதன மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களும் பதிவேடுகளும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்தனவென பாராளுமன்றத்தினால் சட்டத்தின்மூலம் அல்லது சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட தொல்பொருளியல் அமைவிடங்களும் புராதன சின்னங்களும்.)

I ஆம் நிரலில் அல்லது III ஆம் நிரலில் குறித்துரைக்கப்படாதனவான எல்லா விடயங்களும் பணிகளும்

(இது பின்வருவனவற்றை உள்ளடக்கும் —

(அ) இலங்கைக்கு வெளியே உள்ள இடங்களுக்கு யாத்திரை செல்லல்;

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாக வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் நிதிக் கூட்டுத்தாபனங்கள் உட்பட, வியாபாரக் கூட்டுத்தாபனங்களை கூட்டிணைத்தல், ஒழுங்குபடுத்துதல் அத்துடன் ஒடுக்குதல் ;

(இ) பல்கலைக்கழகங்கள் நீங்கலாக, ஒரு மாகாணத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டிராத வியாபார அல்லது அதுவின்றிய கூட்டுத்தாபனங்களை கூட்டிணைத்தல், ஒழுங்குபடுத்துதல் அத்துடன் ஒடுக்குதல் ;

(ஈ) ஆக்கவுரிமைகள், புத்தாக்கங்கள், வடிவமைப்புக்கள் ; பதிப்புரிமை ; வியாபாரக் குறிகள், வணிகக் குறிகள் ;

(உ) நிறை மற்றும் அளவு நியமங்களைத் தாபித்தல் ;

(ஊ) இலங்கைக்கு வெளியே ஏற்றுமதிசெய்யப்படவுள்ள அல்லது ஒரு மாகாணத்திலிருந்து வேறொரு மாகாணத்துக்கு கடத்தப்படவுள்ள பண்டங்களின் தராதர நியமங்களைத் தாபித்தல் ;

(எ) எக்கைத்தொழில்களின் இலங்கை அரசாங்கத்திலான கட்டுப்பாடு பொது மக்களின் நலனுக்கு உசிதமானதென சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்டதோ அக் கைத்தொழில்கள் ;

(ஏ) சுரங்கங்களின் தொழிலாளர்களையும் பாதுகாப்பையும் ஒழுங்குபடுத்தல் ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஐ) இலங்கை அரசாங்கத்தின் முகவர்நிலையங்களினூல் உப்பு உற்பத்தி செய்யப்படுதல், வழங்கப்படுதல், விநியோகிக்கப்படுதல் ; ஏனைய முகவர் நிலையங்களினூல் உப்பு உற்பத்தி செய்யப்படுதலையும் வழங்கப்படுதலையும், விநியோகிக்கப்படுவதையும் கட்டுப்படுத்துதல் ;

(ஒ) ஏற்றுமதிக்காக அபினை பயிரிடல், உற்பத்திசெய்தல் மற்றும் விற்பனை செய்தல் ;

(ஓ) இலங்கை அரசாங்கத்தின் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட கைத்தொழிற் பிணக்குகள் ;

(ஔ) இலங்கை அரசாங்கத்தினூல் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்டனவும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் என சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினூல் வெளிப்படுத்தப்பட்டனவுமான அரும் பொருட்காட்சிச்சாலைகள், போர் நினைவிடங்கள் போன்ற நிறுவனங்கள் ;

(க) இலங்கையின் பரப்பு அளவீடு, இலங்கையின் புவிச்சரிதவியல், தாவரவினவியல், விலங்கினவியல் மற்றும் மனிதவியல் அளவீடுகள், வளிமண்டல நிறுவனங்கள் ;

(ங) தேசிய பகிரங்க சேவைகள், தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு ;

(ச) ஓய்வூதியங்கள் அதாவது இலங்கை அரசாங்கத்தினூல் அல்லது திரட்டு நிதியத்திலிருந்து கொடுபடற்பாலதான ஓய்வூதியங்கள் ;

(ஞ) பாராளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகர், பிரதிச்சபாநாயகர் என்போரின் சம்பளங்களும் படிகளும் ;

(ட) பாராளுமன்றத்தினதும் உறுப்பினர்களினதும் பாராளுமன்றக்குழுக்களினதும் தத்துவங்களும், சிறப்புரிமைகளும், பாதிப்பின்மைகளும், பாராளுமன்றக் குழுக்கள் அல்லது பாராளுமன்றத்தினூல் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் முன்னிலையில் சான்று கொடுப்பதற்காக அல்லது ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்காக சமூகந்தரும் ஆட்களின் வரவை வலியுறுத்துதல் ;

(ண) சனதிபதி மற்றும் ஆளுநர்கள் என்பவரின் வேதனுதிகள் படிகள், சிறப்புரிமைகள், வராமைக்கான லீவு தொடர்பான உரிமைகள் ; இலங்கை அரசாங்க அமைச்சர்களின் சம்பளங்களும் படிகளும், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளங்களும், படிகளும், வராமைக்கான லீவு தொடர்பான உரிமைகளும், சேவை நிபந்தனைகளும் ;

(த) மாகாணங்களுக்கிடையிலான பெயர்ச்சி, மாகாணங்களுக்கிடையிலான தொற்றுத்தடைத் தனிப்படுத்தல் ;

(ந) இந்த நிரலில் உள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான சட்டங்களுக்கெதிரான தவறுகள் ; அத்துடன்

(ப) ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக, இந்த நிரலில் உள்ள கருமங்களுள் எது தொடர்பிலான கட்டணங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. 9. 86

ஒன்பதாம் அட்டவணை

நிரல் 1

மாகாண சபை நிரல்

(உறுப்புரை 154எ(1))

1. பொலிசும் பொது ஒழுங்கும்—

பின்னிணைப்பு (1) இல் தரப்பட்டுள்ள அளவுக்கு, மாகாணத்தினுள் பொது ஒழுங்கும் பொலிசுத் தத்துவங்களின் பிரயோகமும், ஆனல் தேசிய பாதுகாப்பையும், தேசிய பந்தோபஸ்தையும் ஆயுதந்தாங்கிய எவையேனும் படைகளின் அல்லது குடியியல் தத்துவத்துக்கு உதவியாக இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழான வேறெவையேனும் படைகளின் பயன்பாட்டையும் இது உள்ளடக்காது.

2. திட்டமிடல்—

மாகாணப் பொருளாதாரத் திட்டங்களைச் செயற்படுத்தல்.

3., (4) கல்வியும் கல்விச் சேவைகளும்—

பின்னிணைப்பு III இல் தரப்பட்டுள்ள அளவுக்கு, கல்வி.

6. உள்ளூராட்சி—

6 : 1 உள்ளூராட்சி, கிராம நிருவாகம் என்ற நோக்கங்களுக்காக, மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் போன்ற உள்ளூரதிகார சபைகள் ; ஆயின், உள்ளூரதிகார சபைகளின் அமைப்பும், மாதிரியும் கட்டமைப்பும் சட்டத்தினல் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ;

6 : 2 கலைத்தற்கான தத்துவமுட்பட, (சட்டத்தினல் ஏற்பாடு செய்யப்படக் கூடியவாறு, கலைத்தற்கான ஏதுக்கள்பற்றிய அத்தகைய நீதிமுறை மருவிய விசாரணைகளுக்கும், அவை தொடர்பிலான சட்டப்படியான பரிகாரங்களுக்கும் அமையவும், அத்துடன் சட்டத்தினல் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாருகக் கணக்காய்வு தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமையவும்), சட்டத்தினல் தாபிக்கப்பட்ட உள்ளூரதிகார சபைகளின் நிருவாகத்தை மேற்பார்வை செய்தல் ;

6 : 3 உள்ளூரதிகார சபைகளுக்குத் தற்போதுள்ள சட்டத்தின்கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களையே அவை கொண்டிருக்கும். மாநகர சபைகளும் நகர சபைகளும், மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழும் நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழும் அவற்றுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டிருக்கும். தற்போதுள்ள சட்டத்தின் கீழ் நகர சபைகளுக்கும், பட்டின சபைகளுக்கும் கிராம சபைகளுக்கும் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரதேச சபைகள் கொண்டிருக்கும். மாகாண சபை உள்ளூரதிகார சபைகளுக்கு மேலதிகத் தத்துவங்களை அளிக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 : 4 தற்போதுள்ள சட்டத்தின் கீழ் கிராமோதய சபைகளுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களையே கிராமோதய சபைகள் கொண்டிருக்கும். மாகாண சபை கிராமோதய சபைகளுக்கு மேலதிகத் தத்துவங்களை அளிக்கக்கூடும்.

7. மாகாண வீடமைப்பும் நிர்மாணமும்—

7 : 1 உதவியளிக்கப்பட்ட சுய உதவி வீடமைப்புக் கருத்திட்டங்களும், வீடமைப்புக் கடன்களும் கட்டடப் பொருட்களை ஏற்பாடுசெய் கருத்திட்டங்கள் அல்லாத மாகாண வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்தலும், ஒருங்கிணைத்தலும், மேற்பார்வைசெய்தலும் கண்காணிப்புச் செய்தலும் ;

7 : 2 வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்புச் சட்டத்தையும் வாடகைச் சட்டத்தையும் ஒரு மாகாணத்தினுள் செயற்படுத்துதல் ;

7 : 3 இந்நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பிலான நிர்மாணச் செயற்பாடு.

9. மாகாணத்தினுள், பின்வருவன தவிர, வீதிகளும், பாலங்களும், பாதைகளும்—

(அ) தேசியப் பெருவழிகள் ;

(ஆ) தேசியப் பெருவழிகள் மீதான பாலங்களும் பாதைகளும்.

10. சமூகசேவைகளும் புனர்வாழ்வளித்தலும் —

10 : 1 நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ;

10 : 2 இலம்பாடுற்ற ஆட்களுக்கும் குடும்பங்களுக்கும் புனர்வாழ்வளித்தல் ;

10 : 3 உடல், உள, சமூகக் குறைபாடுடைய ஆட்களுக்குப் புனர்வாழ்வளித்தலும் அவர்களின் சேமநலனும் ;

10 : 4 உடற்குறைபாடுள்ளவர்களுக்கும் ஊழியத்துக்கமர்த்தப்பட முடியாதவர்களுக்கும் நிவாரணமளித்தல்.

12. மாகாணத்தினுள் வீதிப் பயணிகள் வண்டிச் சேவைகளையும் மோட்டார் வாகனங்களின்மூலம் பண்டங்களை ஏற்றிச்செல்வதையும் ஒழுங்குபடுத்தலும் மாகாணங்களுக்கு இடையேயான வீதிப் போக்குவரத்துச் சேவைகளை ஏற்பாடு செய்தலும்.

13, 14 கமத்தொழிலும் கமநலச் சேவைகளும் —

: 1 (மாகாணங்களுக்கு இடையேயான நீர்ப்பாசன, காணிக் குடியிருப்புத்திட்டங்கள், அரச காணி, பெருந்தோட்டக் கமத்தொழில் என்பவற்றில் தவிர) மாகாண நோக்கங்களுக்காகவும் கமத்தொழிற் சேவைகளுக்காகவும் கமத்தொழில் விசாலிப்பு, மேம்படுத்துகை, கல்வி என்பன உட்பட, கமத்தொழில் ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

: 2 சிறு நீர்ப்பாசன வேலைகளை மறுசீரமைத்தலும் பேணுதலும் ;

: 3 தேசியக் கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்களாகப் பெயர் குறிக்கப்பட்ட நிறுவனங்களன்றியும் அவை தவிரவும், கமத்தொழில் ஆராய்ச்சி.

15. கிராமிய அபிவிருத்தி —

16. சுகாதாரம் —

16 : 1 (போதனை வைத்தியசாலைகளும் விசேட நோக்கங்களுக்காகத் தாபிக்கப்பட்ட மருத்துவமனைகளும் தவிர) பொது மருத்துவ மனைகளையும், கிராமிய மருத்துவ மனைகளையும், மகப்பேற்று மனைகளையும், மருந்தகங்களையும் தாபித்தலும் பேணுதலும் ;

16 : 2 பொது சுகாதாரச் சேவைகள், சுகாதாரக் கல்வி, போசணை, குடும்பச் சுகாதாரம், மகப்பேற்று, சிறுவர் பராமரிப்பு, உணவும் உடனலமும், சூழல்சார் சுகாதாரம் ;

16 : 3 மாகாணத்துக்கான சுகாதார அபிவிருத்தித் திட்டத்தையும் ஆண்டுச் சுகாதாரத் திட்டத்தையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும் ;

16 : 4 ஒளடதங்களைப் பெற்றுக்கொடுத்தல் நீங்கலாக, மேலே 1 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட மாகாணத்திலுள்ள எல்லா நிறுவனங்களுக்கும் வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

16 : 5 மேலே 1 இல் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த ஆளணியினருக்கு இலங்கையினுட் பட்டபின் கல்விக்காகப் புலமைப் பரிசில்களை அளித்தல்.

17. சுதேச வைத்தியம் — ஆயுள்வேத, சித்த, அத்துடன் ஊணனி —

17 : 1 ஆயுள்வேத மருந்தகங்களையும் மருத்துவ மனைகளையும் தாபித்தலும், அத்தகைய மருந்தகங்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் மானியக் கொடைகளை வழங்குதலும் ;

17 : 2 மருந்துத் தாவரக் கொட்டில்களைத் தாபித்தலும் பேணுதலும்.

18. 18 : 1 உள்ளூராதிகாரசபைகளினால் பேணப்படும் வாடிவீடுகள் ; அத்துடன்

18 : 2 அவற்றின் பணிகள் இந்நிரையில் புறநீங்கலாகக் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கத் திணைக்களங்களினால் தற்போது நிருவகிக்கப்படும் சுற்றுப்பயண வங்களாக்கள்.

22. அடைவு பிடிப்போர் —

வங்கிகளினால் கொண்டுநடாத்தப்படும் அடைவு பிடிப்போர் தொழில் அல்லாத அடைவு பிடிப்போர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. சந்தைகள், முறைச்சந்தைகள்.

24. மாகாணத்தினுள் உணவு வழங்கலும் விநியோகித்தலும்.

25. கூட்டுறவுகள்—

25 : 1 மாகாணத்தினுள் கூட்டுறவுப் பொறுப்பு முயற்சிகளும் கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்குபடுத்தலும், பதிவுசெய்தலும், மேற்பார்வை செய்தலும், கணக்காய்வு செய்தலும் ;

25 : 2 கூட்டுறவுக் கல்வியும் பிரசாரமும் உட்பட, மாகாணத்தினுள் கூட்டுறவு அபிவிருத்தி ;

25 : 3 மாகாணக் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு ;

25 : 4 மாகாணத்தினுள் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் ஊழியம், பதவியுயர்வு, ஓய்வுபெறுகை சம்பந்தமான கருமங்களும் அத்துடன் வேறு சம்பந்தப்பட்ட கருமங்களும்.

26. காணி—

பின்னிணைப்பு (11) இல் தரப்பட்டுள்ள அளவுக்கு, காணி, அதாவது, காணியிலான அல்லது காணியின்மீதான உரிமைகள், காணி ஆட்சி, காணியைக் கைமாற்றுதலும் பராதீனப்படுத்துதலும், காணிப் பயன்பாடு, காணிக் குடியிருப்பும் காணிச் சீர்திருத்தமும்.

29. நீர்ப்பாசனம்—

ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களினூடாக ஓடும் ஆறுகள் தொடர்பான நீர்ப்பாசனத் திட்டங்கள் தவிர, எல்லா நீர்ப்பாசன வேலைகளையும் திட்டமிடுதலும், உருவரைத் திட்டமிடுதலும், செயற்படுத்துதலும், மேற்பார்வைசெய்தலும், பேணுதலும்.

33. விலங்கு வேளாண்மை—

மாகாணத்தினுள் கால்நடைகளைப் பேணிக்காத்தலும், பாதுகாத்தலும் சீர்ப்படுத்துதலும் விலங்கு நோய்களைத் தடுத்தலும்.

39, 40, 47.

அபிவிருத்தியும் திட்டமிடலும் பற்றிய தேசியக் கொள்கையை வகுத்தமைத்தலுக்கும் செயற்படுத்தலுக்கும் அமைய, கமத்தொழில், கைத்தொழில், வர்த்தக, வியாபாரத் தொழில் முயற்சிகள், அத்துடன் வருமானம் தோற்றுவிக்கும் வேறு கருத்திட்டங்கள் என்பனவற்றை மாகாணத்தினுள் உடையதாகவிருப்பதற்கு மத்திய அரசாங்கத்திற்கும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும் உள்ள தத்துவத்துக்குப் பங்கமின்றி, அத்தகைய தொழில் முயற்சிகளையும் கருத்திட்டங்களையும் மேம்படுத்துவதற்கும், தாபிப்பதற்கும் அவற்றில் ஈடுபடுவதற்குமான தத்துவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இது, மாகாணத்தினுள் விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சியை மேம்படுத்தலையும், மாகாணத்துக்கான கைத் தொழில் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தலையும், ஒருங் கிணைத்தலையும் செயற்படுத்தலையும் உள்ளடக்கும்.)

42. சீர்திருத்தும் நிலையங்களும், சிறுவர் நன்னடத்தை நிறுவனங்களும் அத்துடன் இவைபோன்ற தன்மையினவான வேறு நிறுவனங்களும், அவற்றின்கண் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆட்களும் அத்தகைய நிறுவனங்களைப் பயன்படுத்துவதற்காக ஏனைய மாகாணங்களுடனை ஒழுங்குகளும்.

43. போதையூட்டும் மதுபானங்களை உடைமையில் வைத்திருத்தலும், இடம் பெயர்த்தலும், கொள்வனவு செய்தலும் விற்பனைசெய்தலும்.

44. தேசிய ஞாபகார்த்த மயானங்களெனப் பாராளுமன்றத்தினுல் ஆக்கப் பட்ட சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, புதைத்தல்களும் இடுகாடுகளும், தகனங்களும் சுடுகாடுகளும்.

45. 45 : 1 மாகாண சபையொன்றினுல் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது நிதி யளிக்கப்பட்ட நூலகங்கள், நூதனசாலைகள், அத்துடன் இவற்றை யொத்த வேறு நிறுவனங்கள் ;

45 : 2 தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையெனப் பாராளுமன்றத்தினுல் ஆக்கப்பட்ட சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப் பட்டவை தவிர, புராதன, வரலாற்று முக்கியத்துவமான நினைவுச் சின்னங்களும் பதிவேடுகளும்.

46. மாகாணத்தினுள், பாராளுமன்றத்தினுல் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தி னுல் அல்லது சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுவரை, சுரங்கங்களை யும் கனிப்பொருள் அபிவிருத்தியையும் ஒழுங்குபடுத்துதல்.

48. வியாபாரக் கூட்டுத்தாபனங்கள், வங்கித்தொழில், காப்புறுதி அத்துடன் நிதிசார் கூட்டுத்தாபனங்கள் நீங்கலாக, மாகாணத்துக்கென்றே வரை யறுக்கப்பட்ட குறிக்கோள்களுடனை கூட்டுத்தாபனங்களைக் கூட் டிணைத்தலும், ஒழுங்குபடுத்துதலும் நீதிமுறையாக ஒடுக்குதலும்.

49. கூட்டிணைக்கப்படாத வியாபார, இலக்கிய, விஞ்ஞான, சமய, அத்துடன் வேறு சங்கங்களையும் கழகங்களையும் ஒழுங்குபடுத்துதல்.

11, 31, 50.

: 1 திரையிடப்படுவதற்கும் பகிரங்க அரங்காட்டுகளுக்குமான திரைப்படச் சுருள்களை அனுமதித்தல் நீங்கலாக, படமாளிகைகள், நாடக அரங்காட் டுகள், சங்கீதம், திரைப்படம், களியாட்டங்கள், அத்துடன் பொழுதுபோக்கு கள்.

: 2 (தேசிய விளையாட்டுகள் கழகங்கள் அல்லாத) விளையாட்டுக்களை ஊக்கு வித்தலும் அபிவிருத்தி செய்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. உரிமக் கட்டணங்களையும் வரிகளையும் விதித்தல் தவிர, பணயம் வைத்தலும் சூதாடுதலும்.

53, 54, 55. —

பகிரங்க, மாகாண சேவைகளின் கட்டமைப்பு தீர்மானிக்கப்பட்ட பின்னர் கவனத்துட்கொள்ளப்படும்.

56. மாகாணக் கடன்.

57. இந்நிரலில் குறித்துரைக்கப்பட்ட கருமங்களுள் எது தொடர்பிலும் நியதிச் சட்டங்களுக்கு எதிரான தவறுகள்.

59. ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக, இந்நிரலிலுள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான கட்டணங்கள்.

65. (நீர்-மின்சக்தியும் தேசிய மின்னிணைப்புக்கு மின்வழங்குவதற்குத் தோற்றுவிக்கப்படும் சக்தியும் அல்லாத) மின்வலுவைத் தோற்றுவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் மாகாணத்திலுள்ள அமைவிடங்களையும் வசதிகளையும் அபிவிருத்தி செய்தலும், காப்பாற்றுதலும் முகாமை செய்தலும்.

69, 70.

பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுவரை, மாகாண நோக்கங்களுக்காக அரசிறை திரட்டுவதற்கென மாகாணத்தினுள் பணம் கடன் பெறுதலும் நேரடியாக வரி விதித்தலும்.

(அ) பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுவரை, மாகாணத்தினுள் சூழலைப் பாதுகாத்தல்.

குறிப்பு : தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் நிரலிலுள்ள இலக்கமிடுதலுக்கிணங்க மேலேயுள்ள விடயங்கள் இலக்கமிடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. 9. 86

பின்னிணைப்பு 1

சட்டமும் ஒழுங்கும் சம்பந்தமாக தத்துவத்தைப் பரவலாக்குதல் பற்றிய குறிப்பு

1. பரவலாக்கப்பட்ட விடயப்பொருள் பின்வருமாறு விபரிக்கப்படுதல் வேண்டும் :—

இந்த அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு மாகாணத்தினுள் பொது ஒழுங்கும், பொலிசுத் தத்துவங்களைப் பிரயோகித்தலும். ஆனல் இதில் பின்வருவன உள்ளடங்கமாட்டா :—

(அ) தேசிய பாதுகாப்பு ;
(ஆ) தேசிய பந்தோபஸ்து ; அத்துடன்
(இ) இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் ஆயுதந்தாங்கிய படைகளை அல்லது வேறு எவையேனும் படைகளை குடியியல் தத்துவ உதவியாகப் பயன்படுத்துதல்.

2. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி இலங்கைப் பொலிசுப் படையின் தலைவராகவிருத்தல் வேண்டும். இலங்கைப் பொலிசுப் படை பின்வருமாறு பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் :—

(அ) (சிறப்புக் கூறுகள் உள்ளிட்ட) தேசியப் பகுதி ; அத்துடன்
(ஆ) ஒவ்வொரு மாகாணத்திற்கும் மாகாணப் பகுதியொன்று.

2 . 1 தேசியப் பகுதி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிமார், சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர்கள், உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேசிய மட்டத்தில் திரட்டப்படும் வேறு பதவித்தரத்தினர் ஆகியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2 . 2 மாகாணப் பகுதியானது, தேசியப் பகுதியிலிருந்து மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்டவர்களான பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர்கள், பொலிசுக் கண்காணிப்பாளர்கள், உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர்கள் ஆகியோரையும், அத்துடன் மாகாணத்தில் திரட்டப்பட்டவர்களான மாகாண உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர்கள், பிரதான பரிசோதகர்கள், பரிசோதகர்கள், உதவிப் பரிசோதகர்கள், சார்ஜண்டுகள், கொசுத்தாப்பல்கள் ஆகியோரையும் கொண்டிருத்தல் வேண்டும். மாகாணப் பகுதியின் உறுப்பினர்கள் தேசியப் பகுதிக்குப் பதவியுயர்த்தப்படுவதற்குத் தகவுடையவர்களாதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தேசியப் பகுதிக்கு ஆட்சேர்த்தலும், மாகாணப் பகுதிகளில் உள்ள பொலிசு அலுவலர்களைத் தேசியப் பகுதிக்குப் பதவியுயர்த்துதலும், மூன்று உறுப்பினர்களைக் கொண்டமைந்த தேசியப் பொலிசு ஆணைக்குழுவொன்றினால் செய்யப்படுதல் வேண்டும். இவ்வாணைக்குழு பின்வருவோரைக் கொண்டிருக்கும் கும் :—

(அ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ;

(ஆ) சனாதிபதியின் கலந்தாலோசனையுடன் பகிரங்கசேவை ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆள் ஒருவர் ; அத்துடன்

(இ) பிரதம நீதியரசரின் நியமத்தர் ஒருவர்.

3 . 1 தேசிய பொலிசு ஆணைக்குழுவானது, மாகாணப் பகுதி எதிலும் சேவையாற்றும் பொலிசு அலுவலர் எவரையும் தேசியப் பகுதிக்குப் பதவியுயர்த்துவதற்கு முன்னர், இயைபான மாகாண பொலிசு ஆணைக்குழுவிடமிருந்து அத்தகைய அலுவலர் பற்றிய அந்தரங்க அறிக்கையொன்றைக் கோருதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அலுவலரைப் பதவியுயர்த்துவதா இல்லையா எனத் தீர்மானிப்பதில் அத்தகைய அறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களைக் கவனத்திற்கெடுத்தலும் வேண்டும்.

3 .2 ஆணைக்குழுவானது, கீழே தரப்பட்டுள்ள 4.1 என்னும் பந்திக்கு அமைவாக, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தவிர்ந்தவர்களான தேசியப் பகுதியினது உறுப்பினர்களின் பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

3.3 இது, மாகாணப் பகுதிகளுக்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்டவர்களும், அவர்களுக்கு எதிராக மாகாணப் பொலிசு ஆணைக்குழுவினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றவர்களுமான அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகளைக் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும்.

3.4 இது, எல்லாப் பகுதிகளுக்கும் பொலிசு அலுவலர்களைச் சேர்ப்பதற்கும், அவர்களின் பதவியுயர்வுக்குமான தரங்களை வகுத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தரங்கள் எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஒருசீராகவமைதலும் வேண்டும்.

4. ஒவ்வொரு மாகாணப் பகுதிக்குமான ஆட்சேர்த்தல் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட மாகாணப் பொலிசு ஆணைக்குழுவொன்றினால் செய்யப்படுதல் வேண்டும். இது பின்வருவோரைக் கொண்டிருக்கும் :—

(அ) மாகாணத்தின் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ;

(ஆ) சனாதிபதியின் கலந்தாலோசனையுடன் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆள் ஒருவர் ; அத்துடன்

(இ) மாகாணத்தினது பிரதம அமைச்சரின் நியமத்தர் ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.1 மாகாணப் பொலிசு ஆணைக்குழுவொன்று மாகாணப் பகுதியின் அலுவலர்களினது இடமாற்றங்கள், பதவியுயர்வுகள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும், மாகாணப் பகுதிக்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்டவர்களான தேசியப் பகுதியின் அலுவலர் களை சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளர் பதவித் தரம் வரையில் பதவியுயர்த்துவதற்கும், பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமை யதிபதி தவிர்ந்தவர்களான மாகாணப் பகுதிக்கு மாற்றுச்சேவைக்கு விடுவிக்கப்பட்ட அலுவலர்களின் இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப் பாடு ஆகியவற்றிற்கும் பொறுப்பானதாகவிருத்தல் வேண்டும் :

ஆயின், மாகாணப் பகுதி எதற்கும் மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்டவரும், அவருக்கு எதிராக மாகாணப் பொலிசு ஆணைக்குழுவொன்றினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றவருமான தேசியப் பகுதியின் அலுவலர் எவரும் தேசியப் பொலிசு ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய உரிமை யுடையவராதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டின்மீது தேசிய பொலிசு ஆணைக்குழுவின் முடிபு இறுதியானதாதலும் வேண்டும்.

5. தேசிய பொலிசு ஆணைக்குழு அல்லது மாகாணப் பொலிசு ஆணைக்குழு வொன்று அதன் தத்துவங்களுள் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகையன வற்றை, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு ஆளுக்கு அல்லது அதிகாரசபைக்குக் கையளிப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

6. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மாகாணத்தின் பிரதம அமைச் சரின் ஒருப்பாட்டுடன் ஒவ்வொரு மாகாணத்திற்குமான பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியொருவரை நியமித்தல் வேண்டும். எவ்வாறாயினும், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கும் பிரதம அமைச்சருக்கும் இடையில் உடன்பாடு எதுவும் காணப்படாவிடில், இவ்விடயம் சனாதிபதிக்கு ஆற்றுப்படுத்தப் படும் என்பதுடன், சனாதிபதி பிரதம அமைச்சருடன் முறையாகக் கலந்தாலோ சித்த பின்னர் நியமனத்தைச் செய்தலும் வேண்டும்.

7. தேசியப் பகுதியின் எல்லாப் பதவித்தரங்களையும் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் ஊழியர் கோப்புக்கள் இலங்கை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப் படுதல் வேண்டும். ஒவ்வொரு மாகாணப் பகுதியினதும் அலுவலர்களினதும் வேறு பதவித்தரத்தினரதும் ஊழியர் கோப்பு —

(அ) மாகாணத்தின் பரப்பளவு ;

(ஆ) மாகாணத்தின் சனத்தொகை ; அத்துடன்

(இ) உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அல்லது விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு கட்டளைக்கல்,

ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, சனாதிபதியின் அங்கீகாரத்துடன் மாகாண நிருவாகத்தினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நெறிகள் எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஒருசீராக ஏற்புடையனவாதல் வேண்டும்.

7.1 மாகாணப் பகுதிகளின் ஊழியர் கோப்புக்களானவை, சனத்தொகை, பரப்பளவு, சம்பந்தப்பட்ட பொலிசு நிலையங்களின் எண்ணிக்கை போன்ற நிச்சயிக்கப்பட்ட நெறிகளையும், வேறு இயைபான பிரதிபயன்களையும் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். இந்நெறிகள் எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் பாகுபாடு இன்றி ஏற்புடையனவாதல் வேண்டும்.

7.2 தேசிய, அத்துடன் மாகாணப் பகுதிகளில் உள்ள பல்வேறு பதவித் தரத்தினராலும் துய்க்கப்படும் சம்பள அளவுத்திட்டங்களும், அலுவலக மேலதிக வருவாய்களும் மாகாணங்களின் பிரதம அமைச்சர்களைக் கலந்தாலோசித்த பின்னர் இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். மாகாணப் பகுதிகளின் உறுப்பினர்களால் துய்க்கப்படும் சம்பள அளவுத்திட்டங்களும் அலுவலக மேலதிக வருவாய்களும் எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஒருசீராக ஏற்புடையனவாதல் வேண்டும்.

8. தேசியப் பகுதிக்கான சுடுபடைக் கலங்களினதும், வெடிமருந்துகளினதும் வேறு சாதனங்களினதும் தன்மையையும், வகையும் அளவும் தேசியப் பொலிசு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். எல்லா மாகாணப் பகுதிகளுக்குமான சுடுபடைக்கலங்களினதும், வெடிமருந்துகளினதும் வேறு சாதனங்களினதும் தன்மையும், வகையும், அளவும் மாகாணப் பொலிசு ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையின் பின்னர் தேசியப் பொலிசு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் படுதல் வேண்டும் என்பதுடன், எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஒருசீரான தரங்களும் நெறிகளும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

9. தேசியப் பகுதிக்கான ஆட்சேர்ப்பு, பொலிசுக் கொசுத்தாப்பல், உதவிப் பரிசோதகர்கள், உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் ஆகிய பதவித் தரங்களில் செய்யப்படுதல் வேண்டும். மாகாணப் பகுதிக்கான ஆட்சேர்ப்பு, பொலிசுக் கொசுத்தாப்பல், உதவிப் பரிசோதகர்கள், (மேலே 2.2 என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவித்தரமாகிய) மாகாண உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர்கள் ஆகிய பதவித்தரங்களில் செய்யப்படுதல் வேண்டும்.

9.1 ஆட்சேர்ப்புத் தராதரங்களையும், அதற்கென விதித்துரைக்கப்படும் ஏனைய கட்டளைக்கல்லையும் கவனத்திற்கொண்டு தேசியப் பகுதிக்கான ஆட்சேர்ப்பு, தேசியப் பொலிசு ஆணைக்குழுவினாலும், மாகாணப் பகுதிக்கான ஆட்சேர்ப்பு, மாகாணப் பொலிசு ஆணைக்குழுவினாலும் செய்யப்படுதல் வேண்டும். ஆயின், அத்துடன் சேர்க்கப்படும் ஆள் ஒருவர், நியமிக்கப்பட்டதன் மேல், அவர் எப்பகுதியில் சேவையாற்ற விரும்புகின்றாரோ அப்பகுதிகள் பற்றிய அவரது முந்துரிமைகளைத் தரலாம். அத்துடன் இயலுமாயின், அவர் விரும்பும் பகுதியில், சம்பந்தப்பட்ட பகுதியின் சம்மதத்துடன் பதவிக்கமர்த்தப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.2 இலங்கைப் பொலிசுப்படையில் சேர்க்கப்பட்ட எல்லோரினதும் அத்துடன் இலங்கைப் பொலிசுப் படையின் எல்லாப் பகுதியினதும் உறுப்பினர்களினதும் பயிற்சிக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புடையதாகவிருத்தல் வேண்டும்.

சனுதிபதி, அவர் அவசியமானதெனக் கருதுகின்றவிடத்து, ஏதேனும் மாகாணப் பகுதியின் உறுப்பினர்களுக்கு மாற்றுப்பயிற்சியளிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

10. தேசியப் பகுதியினதும், மாகாணப் பகுதியினதும் உறுப்பினர்கள் ஒரே சீருடையை பதவித்தர்த்திற்குரியதாக அணிதல் வேண்டும் என்பதுடன், ஆணின் ஒவ்வொரு பகுதியினதும் உறுப்பினர்களின் சீருடைகள், அவர் எப்பகுதியைச் சேர்ந்தவரோ அப்பகுதியினைச் சுட்டிக்காட்டும் தனிவேருன தோற்பட்டியொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

10.1 மாகாணப் பகுதிகளின் உறுப்பினர்களையும், அதற்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்ட அலுவலர்களையும் கொண்டமைந்த ஒருசீரான பொலிசுப்படையொன்று ஒவ்வொரு மாகாணத்திலும் இருத்தல் வேண்டும். தேசியப் பகுதியின் உறுப்பினர்கள் வழமையாக சாதாரண உடையில் இருத்தல் வேண்டும். ஆயின் அவர்கள் 12.2, 12.3, 12.4 ஆகிய பந்திகளில் தரப்பட்டுள்ளவாறு பொது ஒழுங்கமைதியைப் பேணுதல் அல்லது நிலைநாட்டுதல் சம்பந்தமான கடமைகள் எவற்றையும் புரியும்போது சீருடைகளை அணியலாம். ஆயின், அத்துடன் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியும், குறித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய ஏனைய அலுவலர்களும் பொதுவாக சீருடை அணிந்திருத்தல் வேண்டும்.

11. தேசியப் பகுதிகளின் கூறுகளிலும் ஏதேனும் மாகாணத்தின் மாகாணப் பகுதிகளிலும் சேவையாற்றும் எல்லாப் பொலிசு அலுவலர்களும், அத்தகைய மாகாணத்தின் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் பணியாற்றுதல் வேண்டும்.

11.1 மாகாணத்தில் பொது ஒழுங்கமைதியைப் பேணுதல் அத்துடன் இந்த அட்டவணையில் தரப்பட்டுள்ளவாருக மாகாணத்தில் பொலிசுத் தத்துவங்களைப் பிரயோகித்தல் ஆகியன தொடர்பில் மாகாணத்தின் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அம்மாகாணத்திற்கான பிரதம அமைச்சருக்குப் பொறுப்பாளியாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அவரது கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதலும் வேண்டும்.

11.2 மேற்கூறிய 11.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் பின்வரும் தகைமைகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும் :—

(அ) மாதாணத்தில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டதன் மேல், சனுதிபதி, ஒழுங்குவிதிமூலம் ஏற்பாடு செய்யக்கூடியவாருக, பிரதம அமைச்சரின் அத்தகைய தத்துவங்களையும் பொறுப்புடைமைகளையும் அத்துடன் மாகாணத்தினுள் பொது ஒழுங்கமைதி சம்பந்தமான மாகாண நிருவாகத்தையும் பொறுப்பேற்கலாம் ; அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஒரு மாகாணத்தின் பந்தோபஸ்து நிலைமை அல்லது பொது ஒழுங்கமைதி, கடுமையான உள்ளகக் குழப்பநிலை காரணமாக அச்சுறுத்தப்படுகின்றதென சனாதிபதி அபிப்பிராயப்படுகின்ற விடத்து, அவர் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தாமல், ஆனால் அத்தகைய மாகாணத்தின் பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடனும், பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையவும், பொது ஒழுங்கமைதியை நிலைநாடடும் நோக்கத்துக்காக, மாகாணத்தில், சிவில் தத்துவத்திற்கு உதவியாக, தேசியப் பகுதியின் ஏதேனும் கூறினை, கட்டளைமூலம் அமர்த்தலாம்:

ஆயின், அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும், பொது ஒழுங்கமைதி நிலைநாட்டப்பட்டிருக்கின்றதென சனாதிபதி திருப்திப்பட்டதன் பின்னர் விரைவில் அல்லது கட்டளைத் தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைந்ததன் மேல், இவற்றுள் ஏது முந்தியதோ அப்போது, வலுவிலில்லாதொழிதல் வேண்டும்.

12.1 மாகாணத்தினுள் பொது ஒழுங்கமைதியைப் பேணிக்காப்பதற்கும், (அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தவிர்ந்த) எல்லாத் தவறுகளையும் தடுத்தல், கண்டுபிடித்தல், புலனுய்வு செய்தல் ஆகியவற்றுக்கும் அத்துடன் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் நியதிகளின்படி சட்டத்துறைத் தலைமையதிபதியின் தத்துவங்களுக்கு அமைய அத்தகைய தவறுகள் தொடர்பில் இயைபான நீதிமன்றங்களில் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் மாகாணப் பகுதி பொறுப்புடையதாகவிருத்தல் வேண்டும்.

இலங்கைப் பொலிசுப்படையின் தேசியப் பகுதியானது, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எல்லாத் தவறுகளையும் தடுத்தல், கண்டுபிடித்தல், புலனுய்வு செய்தல் ஆகியவற்றுக்கும், அத்துடன் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் நியதிகளின்படி சட்டத்துறைத் தலைமையதிபதியின் தத்துவங்களுக்கு அமைய அத்தகைய தவறுகள் தொடர்பில் இயைபான நீதிமன்றங்களில் குற்ற வழக்குகள் தொடுப்பதற்கும் பொறுப்புடையதாகவிருத்தல் வேண்டும்.

12.2 பிரதம அமைச்சர் ஒரு மாகாணத்தினுள் பொது ஒழுங்கமைதியைப் பேணிக்காப்பதற்குத் தேசியப் பகுதியின் உதவியை நாடுமிடத்து, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, அந்நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான தேசியப் பகுதியின் அத்தகைய ஆளணியினரை விரிவு படுத்தலாம் என்பதுடன், அவர்களை மாகாணத்தின் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் அமர்த்துதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.3 மாகாணத்தில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்படுமிடத்து, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, அத்தகைய மாகாணத்தினுள் பொது ஒழுங்கை நிலைநாட்டிப் பேணுவதற்கென அவசியமானதென அவர் கருதுகின்றவாறான தேசியப் பகுதியின் அத்தகைய கூறுகளை அம்மாகாணத்திற்கும் விரிவுபடுத்தலாம்.

12.4 சாதாரணமாக மாகாணப் பகுதியொன்றினுல் புலனுய்வு செய்யப்படக் கூடிய தவறு எதுவும்,—

(அ) அத்தகைய புலனுய்வு குற்றவியல் புலனுய்வுத் திணைக்களத்தினுல் அல்லது தேசியப் பகுதியின் வேறு ஏதேனும் கூறினுல் பொறுப் பேற்கப்படவேண்டுமென பிரதம அமைச்சர் வேண்டுமிடத்து ; அத்துடன்

(ஆ) பொதுமக்கள் நலன்கருதி அத்தகைய தவறு குற்றவியல் புலனுய்வுத் திணைக்களத்தினுல் அல்லது தேசியப் பகுதியின் வேறு ஏதேனும் கூறினுல் புலனுய்வு செய்யப்படவேண்டியது அவசியமானதென பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அபிப்பிராயப்பட்டு, பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையின் பின்னரும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடனும், அத்தகைய தவறு குற்றவியல் புலனுய்வுத் திணைக்களத்தினுல் அல்லது தேசியப் பகுதியின் வேறு ஏதேனும் கூறினுல் புலனுய்வு செய்யப்படவேண்டுமெனப் பணிக்கின்றவிடத்து, குற்றவியல் புலனுய்வுத் திணைக்களத்தினுல் அல்லது தேசியப் பகுதியின் வேறு ஏதேனும் கூறினுல் புலனுய்வு செய்யப்படலாம்.

13. தேசியப் பகுதியானது, ஏதேனும் மாகாணத்தில், மாகாணப் பகுதி யொன்றுக்கு உரித்தாக்கப்படும் எல்லாப் பணிகளையும், ஓராண்டு காலப்பகுதிக்கு அல்லது அத்தகைய மாகாணத்தில் மாகாணப் பகுதியொன்று தாபிக்கப்படுகின்ற வரையில், இவற்றுள் எது முந்தியதோ அதுவரையில் புரிந்துவருதல் வேண்டும்.

14. தேசியப் பகுதியினதும், மாகாணப் பகுதியினதும் எல்லா கசெற் அலுவலர்களும் தமிழிலும், சிங்களத்திலும் விதித்துரைக்கப்பட்ட தரத்தை எய்தும் படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் பதவித் தரத்திலும் அதற்கு மேற்பட்ட தரத்திலும் உள்ளவர்களான எல்லா அலுவலர்களும் ஆங்கிலத்திலும் விதித்துரைக்கப்பட்ட தரத்தை எய்தும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

இலங்கைப் பொலிசுப்படைக்குச் சேர்க்கப்படும் ஒவ்வொருவரும் அவரது தாய்மொழியில் திறமைபெற்றவர்களாக இருத்தல் வேண்டும். முதலாவது பதவி யுயர்வுக்கு அவர் தமது தாய்மொழி தவிர்ந்த ஒரு மொழியில் திறமை பெறுதல் வேண்டும். அடுத்த பதவியுயர்வுக்கு அவர் மூன்றுவது மொழியில் அறிவு பெறுதல் வேண்டும். இந்நோக்கத்திற்கென ஏற்றங்கீகரிக்கப்பட்ட மூன்று மொழிகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியனவாகும்.

86. 08. 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு II
காணியும் காணிக் குடியேற்றமும்

காணி என்னும் விடயம், அதாவது காணியில் அல்லது காணி மீதுள்ள உரிமைகள், காணி ஆட்சி, காணிக் கைமாற்றம், காணியைப் பராதீனப்படுத்துதல், காணிப் பயன்பாடு, காணிக் குடியேற்றம், காணி அபிவிருத்தி என்பன மாகாண சபைகளுக்கு உரித்தாக்கப்படும். இந்தப் பரவலாக்கல் பின்வரும் முன்மொழிவுகளுக்கு அமைந்ததாக இருக்கும் :—

1. அரசுக்கு உரித்தாக்கப்பட்ட காணிகள் (அரச காணி)

1.2 மாகாண சபைகளுக்கு உரித்தாக்கப்படாத விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படும் காணிகள், இலங்கை அரசாங்கத்தின் மட்டுப்பாடு எதுவும் இல்லாது தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கைக்கிணங்க பயன்படுத்தப்படலாம். அத்தகைய விடயங்கள் தொடர்பில் அத்தகைய காணிப் பயன்பாடு சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் இயைபான மாகாண சபையைக் கலந்தாலோசிக்கும்.

1.3 மாகாண சபைகள் அவற்றுக்கு உரித்தாக்கப்பட்ட விடயங்களின் நோக்கங்களுக்காக அதன் மாகாணத்துக்குள்ளாக இருக்கும் அரச காணிகளை நிருவகித்து, கட்டுப்பாடு செய்து, பயன்படுத்திவருதல் வேண்டும். அத்தகைய காணியானது தேசிய காணிப் பயன்பாட்டுச் கொள்கைக் கிணங்க அத்தகைய நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

1.4 அத்தகைய திட்டங்களின் கீழ் எவரேனும் பிரசைக்கு அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்புக்கு அத்தகைய காணிகளைப் பராதீனப்படுத்தும் அல்லது கையுதிர்க்கும் பணி மாகாண சபையின் நியதிச் சட்டங்களுக்கு இணங்கவும் வேறு எச் சட்டங்களின் கீழ் மாகாண சபைகள் செயற்படுவதற்கு உரித்தளிக்கப்பட்டதோ அத்தகைய வேறு சட்டங்களுக்கிணங்கவும் மாகாண சபையின் ஆலோசனையின் பேரில் அம்மாகாண சபையின் ஆளுநரினால் செய்யப்படும்.

2. மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன, மற்றும் காணி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

2.1 அத்தகைய செயற்றிட்டங்கள் —

(அ) அம்மாகாணத்துக்குள்ளாக அரசினால் ஆரம்பிக்கப்பட்டனவும் ஒன்றுக்குமேற்பட்ட மாகாணங்களுக்கூடாகப் பாயும் ஆறுகளிலிருந்து பெறப்பட்ட நீரைப் பயன்படுத்துவனவுமான நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கும் ; எனினும், ஒரு மாகாண சபையானது அத்தகைய ஆறுகளிலிருந்து நீரைப் பயன்படுத்தி அதன் மாகாணத்துக்குள்ளாக நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கலாம் ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) மாகாணத்துக்கு வெளியேயுள்ள நீர்த்தொகுதிகளிலிருந்து திசை திருப்புவதன்மூலம் பெற்ற நீரைப் பயன்படுத்தும் மாகாணத்துக் குள்ளாக இருக்கும் நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்திச் செயற்றிட்டங்களை உள்ளடக்கும் ; அத்துடன்

(இ) மகாவலி அபிவிருத்திச் செயற்றிட்டம் போன்று முக்கிய இடப்பரப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்குள் வரும் எல்லாத் திட்டங்களையும் உள்ளடக்கும்.

2.2 இச் செயற்றிட்டங்கள் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும்.

2.3 இச்செயற்றிட்டங்கள் மூலம் தோன்றும் கமத்தொழில் மற்றும் குடியிருப் புக் காணிகள் வைத்திருக்கப்படும் அளவு தொடர்பான நெறிகளும் கோட்பாடுகளும் மாகாண சபைகளின் ஆலோசனையுடன் இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படும்.

2.4 காணியற்றோர் அளவு, விண்ணப்பகாரரின் வருமானம், விண்ணப்பகார ரது குடும்பத்தின் அளவு, மற்றும் அவரது கமத்தொழிற் பின்னணி என்பன உட்பட குடியிருப்பவர்களைத் தெரிவு செய்யும்போது கடைப்பிடிக் கப்பட வேண்டிய கோட்பாடுகளைக் கருத்துட்கொண்டு அத்தகைய காணிகளைக் குறித்தொதுக்கப்படுவோரைத் தெரிவு செய்தலானது இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படும். இக் கோட்பாடுகள உள்ளபடியாகக் கடைப்பிடித்தல், காணி குறித்தொதுக்கப்படுபவர்களைத் தெரிவுசெய்தல் மற்றும் அதனோடு தொடர்புபட்ட இடைநேர்வினைவான ஏனைய கருமங்கள் மாகாண சபைகளின் தத்துவத்துக்குட்பட்டனவாக இருக்கும்.

2.5 அத்தகைய செயற்றிட்டங்களில் அத்தகைய காணிகளைக் குறித்தொதுக்கிப் பகிர்தலானது தேசிய இன விகித அடிப்படையில் இடம்பெறும். அத்தகைய விகித அடிப்படையில் குறித்தொதுக்கலைப் பகிரும்போது அச்செயற்றிட் டத்தின் மூலம் காணி பறிக்கப்பட்டவர்களான ஆட்களுக்கும், அச்செயற் றிட்டம் அமைந்துள்ள மாவட்டத்திலுள்ள காணியற்றோருக்கும் அதன் பின்னர் மாகாணத்தில் உள்ள காணியற்றோருக்கும் முதலிடமளிக்கப்படுதல் வேண்டும்.

2.6 ஏதேனும் அத்தகைய செயற்றிட்டத்தில் ஏதேனும் சமூகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் தமக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட உரித்து நிலங்களைப் பெறுதுவிட்டால் அல்லது பெறமுடியாதிருந்தால், அவர்களை வேறு மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன அல்லது காணி அபிவிருத்தித் திட்டத்தில் சம அளவான குறித்தொதுக்கல்களைப் பெற்றுக்கொள்ளு வதற்கு உரித்துடையவர்களாவர். இத்தகைய பயன்படுத்தப்படாத காணி யின் அளவு,கொடுக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்குள்ளாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.7 மேற்சொல்லப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் அத்தகைய செயற் றிட்டங்களில் குறித்தொதுக்கல்களைப் பகிர்தலானது அம்மாகாணத்தின் குடிநிலைப் புள்ளியியல் அமைப்பைப் பெருமளவில் பாதிக்காத விதமாகவும் மனித குடியிருப்புக்களில் சமுதாய ஒட்டுறவை உறுதிப்படுத்தும் கோட் பாட்டுக்கிணங்கவும் இயலக்கூடியவரை செயற்படுத்தப்படும்.

2.8 அத்தகைய செயற்றிட்டங்களின் நிருவாகமும் முகாமையும் இலங்கை அரசாங்கத்தினுல் செய்யப்படும்.

3. தேசிய காணி ஆணைக்குழு

3.1 இலங்கை அரசாங்கம் தேசிய காணி ஆணைக்குழுவொன்றைத் தாபிக்கும். இது அரச காணியின் பயன்பாடு தொடர்பாக தேசிய கொள்கையொன்றை உருவாக்குவதற்குப் பொறுப்புடையதாக இருக்கும். இவ்வாணைக்குழு தீவின் சகல மாகாண சபைகளினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

3.2 தேசிய காணி ஆணைக்குழுவுக்குத் தொழினுட்பச் செயலகம் ஒன்றிருக்கும். இயற்கை மூலவள முகாமைக்கு இயைபான பௌதிக மற்றும் சமூக பொருளியல் காரணிகளை மதிப்பீடு செய்வதற்குத் தேவைப்படும் இயை பான அறிவுத்துறைகளை இது பிரதிநிதித்துவப்படுத்தும்.

3.3 காணிப் பயன்பாடு மீதான தேசிய கொள்கை தொழினுட்ப அம்சங்களை (அரசியல் அல்லது இறைவரி அம்சங்களை அல்ல) அடிப்படையாகக் கொண்டிருக்கும்; மண்வலம், காலநிலை, மழைவீழ்ச்சி, மண் அரிப்பு, காட்டுவனப்பு, சுற்றுடல் காரணிகள், பொருளாதார நிலைப்பாடு முதலியவற் றைக் கருத்தில் கொண்டு காணிப்பயன்பாடு தொடர்பான பொதுக்கோட் பாடுகளை ஆணைக்குழு வகுக்கும்.

3.4 மாகாண சபைகள், அவற்றுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக் கையில், அத்தத்துவங்கள் தேசிய காணி ஆணைக்குழுவினுல் உருவாக்கப் பட்ட தேசிய கொள்கையைக் கருத்துட்கொண்டு மாகாண சபைகளினுல் பிரயோகிக்கப்படவேண்டும்.

86. 09. 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி

கல்வி விடயத்தில் பரவலாக்கல் செயற்படுத்தப்படும் முறை, குழு 1 ஆகிய பொது பரவலாக்கல் பற்றிய குழுவின் அறிக்கைக்கான இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க பின்வரும் தத்துவங்களும் பணிகளும் மாகாண அதிகாரசபையைச் சார்ந்ததாதல் வேண்டும் :—

1. குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள் அல்லாத எல்லா அரச பாடசாலை களுக்கும் வசதிகளைச் செய்துகொடுத்தல், (தேசிய பாடசாலைகள், சேவை ஆளணியினர்க்கான சிறப்புப் பாடசாலைகள், குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கான பாடசாலைகள் ஆகியன குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகளாக விருக்கும்.)

2. (அ) எல்லா ஆரம்பப் பாடசாலைகளினதும் ; அத்துடன்

(ஆ) மேலேகூறப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த எல்லா அரசாங்கப் பாடசாலைகளினதும் முகாமையை மேற்பார்வை செய்தல்.

(தராதரங்களை உறுதிப்படுத்துவதற்கென பாடசாலைகளின் முகாமையைப் பார்வையிடுவதற்கும் மேற்பார்வை செய்வதற்கு மான உரிமையை கல்வி அமைச்சு தம்வசம் வைத்திருத்தல் அவசியமாகும்)

3. எல்லாக் கல்வி ஆளணியினரதும், அதாவது ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரினது இடமாற்றமும், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும். தேசிய சேவையைச் சேர்ந்தவர்களும், மாற்றுச் சேவையின் மேல் மாகாண அதிகாரசபையில் சேவையாற்றுகின்றவர்களுமான அலுவலர்கள், பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய உரிமையுடையவர்களாவர். மாகாணச் சேவையைச் சேர்ந்த அலுவலர்கள், வேலை நீக்கத்திற்கு எதிராக பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய உரிமையுடையவர்களாவர்.

4. ஆசிரியத் தகைமைகளாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட திப்புளோமாக்களையும், அத்துடன் கல்விக் கல்லூரிகளிலிருந்தும் பலகலைக்கழகங்களிலிருந்தும் பெறப் பட்டனவான பட்டங்களையும் கொண்டவர்களான ஆட்களை ஆசிரிய சேவையில் சேர்த்துக்கொள்ளுதல்.

5. இந்த வகுதிகளைச் சேர்ந்த போதிய எண்ணிக்கையினர் கிடைக்கத் தக்கனவாக இருக்கின்றவரையில், ஆசிரிய சேவைக்கு ஏனையோரைச் சேர்த்துக் கொள்ளுதலானது, பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் ஆட் சேர்ப்புப் பரீட்சைகளின் முடிபைப் பொறுத்ததாகவிருக்கும். இத்தகைய பரீட்சை களின் முடிபைப் பொறுத்து நேர்முகப்பரீட்சையும் தேர்தலும் மாகாணசபை அதிகாரிகளுடன் சேர்ந்து நடத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வகுதிகள் 1அ, ஆ, இ என்பவற்றைச் சேர்ந்தவர்கள் அல்லாத எல்லாப் பாடசாலைகளினதும் அதிபர்களை நியமித்தல். (கட்டளைக்கல் கல்வி அமைச்சு/க.சே.ஆ. வினுல் விதிக்கப்படும்.)

7. 1அ, ஆ, இ பாடசாலைகளின் அதிபர்களின் நியமனம், மாகாண அதிகாரசபையின் ஒருப்பாட்டுடன் அமைச்சினுல் செய்யப்படும்.

8. ஆசிரியர்களுக்கும், ஏனைய கல்விசார் ஆளணியினருக்கும் பயிற்சியளித்தல் தேசிய கல்வி நிறுவகத்தின் நோக்கெல்லைக்குள் அடங்கும் ; மாகாண அதிகாரசபைகள் தங்கள் தேவைகளை தே. க. நிறுவகத்திற்கு அறிவிக்கும்.

9. மதியுரைப் பணிகளைக் கொண்ட மாகாண கல்விச் சபைகளை நியமித்தலானது கல்வி அமைச்சரின் பொறுப்பாகும். எவ்வாருயினும், இது மாகாண அதிகாரசபையின் பிரதம அமைச்சரின் ஒருப்பாட்டுடன் செய்யப்படும்.

10. மாகாண அதிகாரசபைகள் கல்வி அமைச்சினுல் விதிக்கப்படும் அளவுக் குறிப்பீடுகளுக்கு இயைவதாக பாடசாலைச் சபைகளைத் தாபிக்கும்.

11. மாகாண அதிகாரசபைகள் பாடசாலைச் சபைகளின் தொழிற்பாட்டை மேற்பார்வை செய்யும்.

12. திட்டங்கள் (கல்வி அபிவிருத்தித்திட்டமும் வருடாந்த செயற்படுத்தற் திட்டமும்) தயாரித்தல் மாகாண அதிகாரசபையின் பொறுப்பாகும்.

13. வருடாந்த கல்வி அபிவிருத்தித் திட்டத்தைச் செயற்படுத்தல்.

14. அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரின் செயல் நிறைவேற்றத்தை மதிப்பீடு செய்தல்.

15. தே. க. நிறுவகத்தின் முன்னங்கீகாரம் கிடைக்கப்பெற்றனவான சேவையிலிருக்கும்போதான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

16. பரீட்சை ஆணையாளர் தலைமையதிபதியினுல் அங்கீகரிக்கப்படும் உண்ணுட்டுப் பரீட்சைகளை நடாத்துதல்.

17. விதிமுறைப்பட்டனவல்லாத கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.

18. ஆரம்பப் பாடசாலைகளைப் பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்.

19. முதனிலை பாடவிதானத்திலும், இரண்டாந்தர பாடவிதானத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடங்களிலும் ஆன உள்ளக வேறுபாடுகளுக்கு தே. க. நிறுவகத்தின் அங்கீகாரத்தைப் பெறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கல்விசார் கட்டிடங்கள், நூலகங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றை நிருமாணித்தலும் பேணிவருதலும்.

21. கற்பித்தல் உபகரணங்கள், கற்புல உபகரணங்கள், செவி-கட்புல சாதனங்கள், தளபாடம், வேறு சாதனம் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுத்தலும் பகிர்ந்தளித்தலும்.

22. அமைச்சினுல் காட்டப்பட்ட குறித்தசில குறித்துரைக்கப்பட்ட விடயப் பொருட்கள் அல்லாத விஞ்ஞான சாதனங்களைப் பெற்றுக்கொடுத்தலும் பகிர்ந்தளித் தலும்.

23. பாடசாலைப் பாடப்புத்தகங்களை அமைச்சின் அங்கீகாரத்தின் பின்னர் தயாரித்தலும் பகிர்ந்தளித்தலும்.

24. தேசிய நூலகச் சேவைகள் சபையினுல் அளிக்கப்படும் வழிகாட்டல் நெறிகளுக்கு இணங்க பாடசாலை நூலகங்களை ஒழுங்கமைத்தலும், அபிவிருத்தி செய்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரல் III (ஒருங்கியை நிரல்)
(உறுப்புரை 154 எ (5))

(1) (1) திட்டமிடல் —

1 : 1 மாகாண மட்டத்தில் திட்டம் செயற்படுத்தல். உபாயங்களை வகுத்தமைத்தலும் கணிப்பீடுசெய்தலும் ;

1 : 2 முன்னேற்றக் கட்டுப்பாடு ;

1 : 3 பகிரங்க, தனியார் துறை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்புச் செய்தல் ;

1 : 4 பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களினதும் தொழில் முயற்சிகளினதும் புரிகையை மதிப்பீடு செய்தல் ;

1 : 5 திட்டமிடப்பட்ட இலக்குகளை எய்துவதில் இயைபான தரவுகளை முன்வைத்தல் ;

1 : 6 திட்டமிடப்பட்ட இலக்குகளின் எய்துகை சம்பந்தப்பட்ட தகவலைப் பரப்புதல் ;

1 : 7 செயற்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களைப் பிரசித்தஞ்செய்தல் ;

1 : 8 ஆள்வலுத் திட்டமிடுதல், ஊழியத் தரவு வங்கி ;

1 : 9 போசணைசார் திட்டமிடலும் நிகழ்ச்சித்திட்டங்களும்.

(3) (4) கல்வியும் கல்விச் சேவைகளும் —

நிரல் I இன் (3) ஆம், (4) ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்பட்ட அளவுவரை தவிர, கல்வி.

(5) உயர் கல்வி —

5 : 1 புதிய பல்கலைக்கழகங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

5 : 2 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழ் பட்டமளிக்கும் நிறுவனங்களையும் அத்துடன், மூன்றாம்நிலை, தொழினுட்ப, பாடசாலைப்பின் கல்விக்கும் பயிற் சிக்குமான வேறு நிறுவனங்களையும் தாபித்தல்.

(7) தேசிய வீடமைப்பும் நிர்மாணமும்—

ஒன்றிணைந்த திட்டமிடலை மேம்படுத்தலும், நகர அபிவிருத்தி இடப்பரப்பு களின் பொருளாதார, சமூக, பௌதீக அபிவிருத்தியைச் செயற்படுத்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) ஆதனத்தைக் கொள்ளுதலும் தேவைக்கெடுத்தலும் —

(10) சமூக சேவைகளும் புனர்வாழ்வளித்தலும் —

10 : 1 இடம் பெயர்க்கப்பட்ட ஆட்களுக்கு நிவாரணமளித்தலும், புனர் வாழ்வளித்தலும் அவர்களை மீளக் குடியிருத்தலும் ;

10 : 2 வெள்ளங்கள், வரட்சிகள், கொள்ளைநோய்கள் அல்லது வேறு புறநீங்கலான காரணங்களின் விளைவான இடர்ப்பாட்டுக்கு நிவாரணமளித்தலும், பாதிக்கப்பட்டோருக்கும் புனர்வாழ்வளித்த லும் அவர்களை மீளக்குடியிருத்தலும் ;

10 : 3 அழிக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட பட்டினங்கள், கிராமங் கள், பகிரங்க நிறுவனங்களும் ஆதனங்களும், கைத்தொழில்கள், தொழிலிடங்கள், வழிபாட்டிடங்கள், வேறு ஆதனங்கள் என்ப வற்றை மீளப்புதுப்பித்தலும் மீள நிர்மாணித்தலும், மறுசீரமைத்த லும் நட்டம் அல்லது சேதம் உற்றுள்ள ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு நட்டஈடு அல்லது நிவாரணம் அளித்தலும், குடியியல் வாழ்க்கையை மீள ஒழுங்குபடுத்தலும்.

(13)(14) கமத்தொழிலும் கமநலச் சேவைகளும்—

13 : 1 கமத்துடன் இணைந்த கைத்தொழில்களைத் தாபித்தலும் மேம்படுத்த லும், பண்ணைகளைத் தாபித்தலும் பேணுதலும், தனியார் நாற்று மேடைகளை மேற்பார்வை செய்தலும் ;

13 : 2 மண் பேணல் ;

13 : 3 தாவரப் பீடைகள்.

16. சுகாதாரம் —

16 : 1 துணைநிலையான மருத்துவ ஆளணியினருக்குப் பயிற்சியளிப்பதற் கான பாடசாலைகள்;

16 : 2 ஒரு மாகாணத்தினுள் தனியார் மருத்துவப் பராமரிப்பை மேற் பார்வை செய்தலும், ஆதுலர் மனைகளையும் நோய்குறி கண்டறிதல் வசதிகளையும் கட்டுப்படுத்தலும்;

16 : 3 சனத்தொகை கட்டுப்பாடும் குடும்பத் திட்டமிடலும்;

16 : 4 மாகாண மருத்துவச் சபைகளின் அமைப்பு.

19. பிறப்புகளை, திருமணங்களை, அத்துடன் இறப்புகளைப் பதிவு செய்தல்.

20. பட்டினங்களுக்கும் கிராமங்களுக்கும் மீளப் பெயரிடுதல்.

22. மாகாணத்தினுள் தனியார் லொத்தர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. விழாக்களும் கண்காட்சிகளும்.

24. உணவைப் பங்கீடு செய்தலும் உணவுக் கையிருப்புகளைப் பேணுதலும்.

25. கூட்டுறவுகள் —

கூட்டுறவு வங்கிகள்.

28. நில அளவைகள் —

மாகாண அல்லது ஒருங்கியை நிரலில் எடுத்துக்கூறப்பட்ட கருமங்களுள் எதனதும் நோக்கத்துக்காக.

29. நீர்ப்பாசனம் —

29 : 1 நீர் களஞ்சியப்படுத்தலும் முகாமை செய்தலும்; வடிகாலமைப்பும் அணைக்கட்டுகளும், வெள்ளப்பாதுகாப்பு, நீர் மூலவளங்களைத் திட்டமிடுதல்;

29 : 2 கிராமிய அபிவிருத்தி, சுகாதாரம், கல்வி, வாழ்க்கைத் தொழில்சார் அத்துடன் தொழினுட்பப் பயிற்சி, கூட்டுறவுகளும் வேறு வசதிகளும் தொடர்பான அத்தகையனவாகவுள்ள, மாகாணங்களுக்கு இடையேயான காணி, நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட சேவைகள்.

30. சமூகக் காடுவளர்ப்பும் காட்டு விலங்குகளையும் பறவைகளையும் பாதுகாத்தலும்,

32. கடற்றொழில் —

ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கப்பால் மீன்பிடித்தல் அல்லாதது.

33. விலங்கு வேளாண்மை —

33 : 1 கால்நடைகளையும் கால்நடை உற்பத்திப் பொருட்களையும் உற்பத்தி செய்தலும், பதனிடுதலும், விநியோகித்தலும், விற்பனை செய்தலும்;

33 : 2 விஞ்ஞான ஆய்வுகூடங்களையும் விஞ்ஞானச் சாதனத்தையும் ஏற்பாடு செய்தலுட்பட, விலங்கு மருத்துவப் பயிற்சிச் சேவைகளும் ஆராய்ச்சியும்;

33 : 3 விலங்கு வளர்ப்பு, பராமரிப்பு, அத்துடன் சுகாதாரம்;

33 : 4 மேய்ச்சல் நிலங்களைத் தாபித்தல்.

34. ஊழியம் —

34 : 1 மாகாண மட்டத்தில் ஊழியத் திட்டமிடல்;

34 : 2 மாகாணம் தொடர்பான விசேட ஊழிய நிகழ்ச்சித் திட்டங்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34 : 3 மாகாணம் தொடர்பான இளைஞர் ஊழியச் செயற்பாடுகளை மேம் படுத்துதல்;

34 : 4 மாகாணம் தொடர்பான தொழினுட்ப ஆள்வலு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.

36. உல்லாசப் பயணம் —
மாகாணத்தில் உல்லாசப் பயணத் தொழிலை அபிவிருத்தி செய்த லும் கட்டுப்படுத்தலும்.

39, 40, 47 —பின்வருவனவற்றிலான வியாபாரமும் வர்த்தகமும்,அவற்றின் உற் பத்தியும், வழங்கலும், விநியோகமும் :—

(அ) மத்திய அரசாங்கத்தினால் ஏதேனும் கைத்தொழிலின் கட்டுப்பாடு பொதுமக்கள் நலனுக்கு உசிதமானதெனப் பாராளுமன்றத்தினால் சட்டத்தின்மூலம் வெளிப்படுத்தப்படுமிடத்து அத்தகைய கைத் தொழிலின் உற்பத்திப் பொருட்களும், அத்தகைய உற்பத்திப் பொருட்களைப் போன்ற அதேவகையினவான இறக்குமதி செய்யப் பட்ட பண்டங்களும்; அத்துடன்

(ஆ) உணவுப் பொருட்களும், ஆடு மாட்டுத் தீனியும்.

45. செய்தித்தாள்களும், புத்தகங்களும் பருவவிதழ்களும் அத்துடன் அச்சகங் களும்.

57. இந்நிரலில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் கருமங்கள் தொடர்பில் நியதிச் சட்டங்களுக்கெதிரான தவறுகள்.

59. ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் கட்டணங்கள். நீங்கலாக, இந் நிரலிலுள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான கட்டணங்கள்.

60. தருமங்களும் தரும நிறுவனங்களும், தரும, சமய அறக்கொடைகளும் அத்துடன் சமய நிறுவனங்களும்.

61. விலைக் கட்டுப்பாடு.

62. இந்நிரலில் அல்லது மாகாண நிரலில் உள்ள கருமங்களுள் எதனதும் நோக்கத்துக்கான விசாரணைகளும் புள்ளிவிபரங்களும்.

63. உணவுப் பொருட்களையும் ஏனைய பண்டங்களையும் கலப்படம் செய்தல்.

64. ஒளடதங்களும் நஞ்சுகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. மாகாணத்தினுள் மின்னிணைப்பு வழங்கலை விசாலித்தலும் மாகாணத்தினுள் மின்சக்தி பயன்படுத்தப்படுவதனை மேம்படுத்துதலும் ஒழுங்குபடுத்துதலும்.

(அ) சூழலைப் பாதுகாத்தல்.

(ஆ) தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையெனப் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, தொல்பொருள்சார் அமைவிடங்களும் புராதனவிடங்களும்.

(இ) மனிதர்களை, விலங்குகளை அல்லது தாவரங்களைப் பாதிக்கின்ற தொற்றுநோய்கள் அல்லது தொடுநோய்கள்அல்லது பீடைகள் ஒரு மாகாணத்திலிருந்து இன்னொன்றுக்குப் பரவுவதைத் தடுத்தல்.

(ஈ) யாத்திரைகள்.

குறிப்பு.— தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் நிரலிலுள்ள இலக்கமிடுதலுக்கிணங்க மேலேயுள்ள விடயங்கள் இலக்கமிடப்பட்டுள்ளன.

CENTRE FOR POLICY ALTERNATIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெங்களூர் பேச்சுவார்த்தை மீதான ஆய்வறிக்கை

பாயிரம்

இலங்கை அரசாங்கம், தமிழர் தரப்புக்கு அனுப்பிவைக்கப்படுவதற் கென ஒருசில யோசனைகள் அடங்கிய பட்டியலொன்றை இந்திய அரசாங்கத்திடம் 1986 செப்டெம்பரில் ஒப்படைத்தது. இந்த யோசனைகள் பற்றி இங்கு குறிப்பிடப்படலாம். இந்த யோசனைகள் குறித்து தமிழர்கள் தரப்பினுல் ஒரு சில தயக்கங்களும் மாற்றுயோசனைகளும் வெளியிடப்பட்டு, அவை இலங்கையின் தரப்பினருக்கு இன்று தெரிவிக்கப்பட்டன. இவற் றைக் கவனத்தில் கொண்டு, சனுதிபதி ஜயவர்த்தனுவுக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில் 7.11.1986 ல் பெங்களூரில் மேலும் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட்டன. இதனையடுத்து, அமைச்சர்கள் மட்டத்தி லும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இப்பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில், பின்வரும் வினைமுறைமைகள் உருவாயின. அவற்றை மேற்சொன்ன யோசனைப் பட்டியலுக்கான சீர்திருத்தங்கள்/மாற்றுத் திட்டங்கள் என்றவாறு கருதிக்கொள்ளவேண்டும்.

1. மாகாணமொன்றின் ஆளுநர் விடயத்தில், இந்திய மாநில மொன்றின் ஆளுநருக்குள்ள அதே தத்துவங்கள் இந்த ஆளுநருக்கும் இருத்தல் வேண்டுமென இலங்கையின் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது. எனினும், இவ்விடயத்தில் இந்திய அரசியலமைப்பு ஏற்பாடுகளைச் செயற்ப டுத்துவதில் அனுபவத்தில் காணப்பட்ட சில தெளிவற்ற தன்மைகளும் சிக்கல்களும் இலங்கை அரசியலமைப்புக்குள்ளும் இடம்பெறுத விதமாக இந்தத் தெளிவில்லாத தன்மைகளையும் சிக்கல்களையும் இக்கட்டத் திலேயே தவிர்த்துவிட வேண்டுமென இலங்கையின் தரப்பினருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. ஆகவே, பின்வரும் அம்சங்களை மனதிற்கொண்டு, வரையப்படலாமென இலங்கையின் தரப்பினரிடம் தெரிவிக்கப்பட்டது :—

(அ) மாகாண ஆளுநருக்கு, அவரது பணிகளைப் பிரயோகிப்பதில் உதவியும் ஆலோசனையும் அளிப்பதற்காக பிரதான அமைச்சர் தலைமையில் மந்திரிகள் சபையொன்று இருத்தல் வேண்டும்.

(ஆ) ஆளுநர் ஆனவர், அவரது பணிகளைப் பிரயோகிப்பதில் அப்பணி களை அல்லது அவற்றுள் எவற்றையேனும் தமது தற்றுணிபில் பிரயோகிப்பதற்கு அரசியலமைப்பினுல் தேவைப்படுத்தப்பட் டுள்ள அந்தளவுக்கு நீங்கலாக, அத்தகைய ஆலோசனைக் கிணங்க, நடந்துகொள்ளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) ஆளுநரின் தற்றுணிபுத் தத்துவங்களைப் பின்வருவன தொடர்பில் வரையறை செய்வதற்கென, அரசியலமைப்பில் பொருத்தமான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும் :—

(i) பிரதான அமைச்சர் ஒருவரின் நியமனம் ;

(ii) அரசியலமைப்பு ஆட்சியந்திரத்தின் தோல்வி பற்றி சனாதிபதிக்கு அறிவிப்பதுடன் சனாதிபதியின் ஆட்சியை ஏற்படுத்தும்படிகோரல்.

1.1 ஆளுநரின் பதவி தொடர்பான இதர எல்லா விடயங்கள் குறித்தும், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியுடன் நடாத்தப்பட்ட இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் தரப்பட்ட இலங்கையின் அறிக்கையில் அடங்கியுள்ள வினை முறைமைகள் பற்றி குறிப்பீடு செய்யப்படலாம்.

2. தற்போது கிழக்கு மாகாணத்தைக் கொண்டுள்ள பிரதேசத்தில் மூன்று மாகாண சபைகள் அமைக்கப்படல் வேண்டும். மூன்று மாகாணங்களில் ஒன்று தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தைக் கொண்டுள்ள பிரதேசத்தைக் கவனத்திற் கொண்டு அமைக்கப்படல் வேண்டும்.

2.1 சனாதிபதியானவர், மேற்சொன்ன மூன்று மாகாணங்களையும் அமைப்பது பற்றி சனாதிபதிக்கு ஆலோசனை கூறுவதற்கென இவ்வினைக்கம் ஒப்பமிடப்பட்ட இரண்டு வாரங்களுக்குள், எல்லை நிர்ணயக் குழுவொன்றை அமைத்தல் வேண்டும். எல்லை நிர்ணயக் குழு, அதிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.2 குழுவானது, பின்வரும் வழிகாட்டல் நெறிகளைக் கவனத்தில் கொண்டு அதன் பணியை நிறைவேற்றுதல் வேண்டும் :—

(அ) திருகோணமலையிலும் அம்பாறையிலும் தமிழர்கள் பெரும்பான்மையாகக் குடியிருக்கும் இடப்பரப்புகள் உத்தேச மட்டக்களப்பு மாகாணத்துடன் சேர்க்கப்படல் வேண்டும்.

(ஆ) திருகோணமலையிலும் அம்பாறையிலும், தற்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தை ஒட்டியும் அடுத்தும் உள்ளவையும், அத்துடன் தமிழர்கள் கணிசமான எண்ணிக்கையில் உள்ளவையுமான அவ்விடப்பரப்புகள், உத்தேச மட்டக்களப்பு மாவட்டத்துடன் சேர்க்கப்படல் வேண்டும்.

(இ) இயற்கையமைப்பு அமிசங்கள், ஆற்றின் போக்குகள், மலைச்சாரல்கள் என்பவற்றை கவனத்தில் கொண்டு எல்லைகளை வரைகின்ற வழமையான கோட்பாடும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

(ஈ) மட்டக்களப்பு மாகாணத்துடன் சேர்க்கப்படக்கூடியனவான திருகோணமலையிலும் அம்பாறையிலும் உள்ள இடப்பரப்புகளின் வரலாற்றையும் கலாசாரத்தையும் குழு கவனத்தில் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

(உ) உத்தேச மட்டக்களப்பு மாகாணத்தின் நிருவாக வசதிகளையும் குழு கவனத்தில் எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) மட்டக்களப்பு மாவட்டம் உருவாக்கப்பட்ட பின்னர், மேலே (அ) முதல் (உ) வரையில் உள்ளவாருன அதேபோன்ற கோட்பாடுகள், இப்போது கிழக்கு மாகாணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதேசத்தின் எஞ்சியவற் றிலிருந்து இரண்டாவது, மூன்றுவது மாகாணத்தையும் உருவாக்குவதற் காகப் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

3. சொல்லப்பட்ட மாகாணங்களின் மாகாண சபைகள் அவ்வாறு தீர்மானிக்கு மாயின், இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாகாணங்களுக்கென, மாகாணங்களுக்கிடையிலான அமைச்சுசார் பேரவை தாபிக்கப்படல் வேண்டும். மாகாணங்களுக்கிடையிலான அமைச்சுசார் பேரவையானது, தத்தமது மாகாணங் களில் வாழும் மக்களுடைய பொதுவான கவனத்துக்குரிய விடயங்கள் பற்றித் தீர்மானம் எடுக்கலாம். அத்தகைய தீர்மானம் ஒவ்வொன்றும், சம்பந்தப்பட்ட மாகாணத்தினுல் அல்லது மாகாணங்களினுல், அத்தீர்மானம் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் சபையின் தீர்மானம் என்ருற்போன்று நிறைவேற்றப்படல் வேண் டும். அத்தகைய கருமங்கள் ஆனவை, மாகாண நிரலிலும் ஒருங்கியை நிரலிலும் உள்ளபடி மாகாணங்கள்மீது வந்துற்றவையான விடயங்கள் எல்லாவற்றுக்கும், அத்துடன் குறிப்பாக மொழி, கலாசாரம், கல்வி, மருத்துவம், சுகாதாரம், விளையாட்டு, நீர்ப்பாசனம், வலு, போக்குவரத்து என்பவற்றுக்கும் நீடிக்கப்படுதல் வேண்டும். பங்குபற்றுகின்ற மாகாண சபைகள் அவ்வாறு தீர்மானிக்குமாயின், பங்குபற்றுகின்ற மாகாண சபைகளில் உள்ளடக்கப்பட்ட பிரதேசத்தின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் வண்ணம் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் போன்ற பொது நிறுவனங்களை, மாகாணங்களுக்கிடையிலான அமைச்சுசார் சபை தாபிக்கலாம்.

3.1 பங்குபற்றும் மாகாணசபைகள் அப்படித் தீர்மானித்து, அத்துடன் மாகாணங்களுக்கிடையிலான அமைச்சுசார் சபை அப்படி விதந்துரைத்தால், உயர் நீதிமன்றமானது, பங்குபற்றும் மாகாணங்களுக்காகவெனப் பொதுவான மேல் நீதிமன்றமொன்று தாபிக்கப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கலாம்.

4. மாகாண நிரலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீதான பாராளு மன்றத்தின் சட்டமாக்கும் தத்துவத்தைப் பொறுத்தவரை, இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் 249 ஆம் உறுப்புரையின் ஒப்புமையின் மேல் பொருத்தமான ஏற்பாடொன்றைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் அத்தகைய தத்துவம் ஒன்று பிரயோகிக்கப்படுவது மேலும் மட்டுப்படுத்தப்பட முடியுமா என்பது பற்றி இலங்கைத் தரப்பினர் பரிசீலிப்பது நன்மைக்குரியதாகும்.

5. ஒருங்கியை நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயமொன்று தொடர்பில், (பாராளுமன்றச் சட்டமொன்றுக்கு முன்னரோ அல்லது பின்னரோ) சட்டமொன்று ஆக்குவதற்கு மாகாணசபைக்குள்ள தத்துவத்தைப் பொறுத்தவரையிலும், அத்து டன் ஒருங்கியை நிரலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விடயமொன்று தொடர்பில் பாராளுமன்றச் சட்டமொன்றைத் திருத்துவதற்கு மாகாணசபைக்குள்ள தத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தைப் பொறுத்தவரையிலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 254 ஆம் உறுப்புரையைப் போன்ற பொருத்தமான ஏற்பாடு ஒன்றைச் சேர்த்துக்கொள்வது பற்றி இலங்கைத் தரப்பினர் பரிசீலிக்கலாம்.

6. அரச காணிகள் விடயத்தைப் பொறுத்தவரை, இலங்கை தரப்பினருக்கும் தமிழ் தரப்பினருக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைத் தீர்த்துவைப்பதற்கு, சனதிபதி பின்வரும் சாத்தியக்கூறுகள் பற்றிப் புத்தாய்வு செய்யலாம் :—

"(அ) மாகாணசபையொன்று தாபிக்கப்பட்டதன்மேல், சொல்லப் பட்ட மாகாணசபைப் பிரதேசத்தில் அடங்கியுள்ள அரச காணி, சொல்லப்பட்ட மாகாண சபைக்கு 99 ஆண்டுக் குத்தகையொன்றுக்கு வழங்கப்பட லாமா ?

(ஆ) அரச காணியானது, முழு இலங்கைக்குமான காணிச்சபை/ஆணைக்குழு வொன்றுக்கு (சபை/ஆணைக்குழுவிலுள்ள ஓர் உபபிரிவு ஒவ்வொரு மாகாணத்துக்கும் இருக்கும்) உரித்தாக்கப்படலாமா அத்துடன் தேசிய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும், தத்தமது நோக்கங்களுக்குத் தேவையான காணியைச் சொல்லப்பட்ட காணிச்சபை/ஆணைக்குழுவிடமி ருந்து பெற்றுக் கொள்ளலாமா ?

(இ) மாகாணசபை தாபிக்கப்பட்டதன்மேல், எவ்வாறுயினும் தேசிய அரசாங் கத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுகின்ற ஏதேனும் காணியைப் பெறுவதற்கு அல்லது கொள்வதற்குத் தேசிய அரசாங்கத்துக்கு உள்ள தத்துவத்துக்கு அமைவாக, மாகாண சபை பிரதேசத்தில் அமைந்துள்ள அரச காணியானது, உடனடியாக மாகாண சபைக்கு உரித்தாக்கப்பட லாமா. "

7. சனதிபதியினால் அவசரகாலப் பிரகடனம் ஒன்று செய்யப்பட்டதன் மேல், உடனடியாக, சொல்லப்பட்ட பிரகடனமானது உயர் நீதிமன்ற முதன்மை நீதியரசுக்கு முன்வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பிரகடனத்துக்கான ஏதுக்கள் இருக்கின்றவென அவர் திருப்திப்பட்டால், அப்பயன்தருமாறு அவர் அதை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். அவர் அப்படிச் செய்யத் தவறினால், பிரகடனமானது செல்லுபடியற்றதாதல் வேண்டும்.

சரிபார்க்கப்பட்டு கலந்துரையாடப்பட வேண்டியது.

8. தேசிய பொலிஸ் பிரிவின் நியாயாதிக்கத்துக்கென ஒதுக்கப்பட்ட விடயங்கள், இலங்கை தரப்பினரால் கொடுக்கப்பட்ட பத்திரத்தில் ஏற்கனவே எடுத்துக்காட்டப்பட்டுவிட்டன. இவ்விடயங்களில் எவற்றையாவது மாகாணப் பொலிஸ் பிரிவுகளின் நியாயாதிக்கத்துக்கு மாற்றமுடியுமா என்பது பற்றிப் பார்ப்பதற்கு, இலங்கைத் தரப்பினர்கள் விடயங்களை மறுபரிசீலனை செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. முன்னர் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட அடிப்படையில், விஸ்தீரணத்தையும் சனத்தொகையையும் கவனத்துக்கெடுத்துக்கொண்டு, ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள பிரதேசமானது தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும், பாராளுமன்றத்தினால் ஆக்கப்படும் சட்டத்தினால் நிர்ணயிக்கப்படக்கூடியவாருக, மாகாண சபைக்கு, ஓர் அல்லது அதற்கு மேற்பட்ட அபேட்சகர்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

தேர்தல் முறையானது விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் அமைந்திருத்தல் வேண்டும். இதைப்பற்றிய விவரங்கள், பாராளுமன்றத் தேர்தல்களுக்கான விவரங்களோடு சேர்க்கப்பட்டுள்ளன. (இங்கு இலங்கை அரசியலமைப்பின் இயைபான ஏற்பாடுகளைக் குறிப்பிடுக)

10. சனாதிபதியபனவர் இவ்வுடன்பாட்டொழுங்கிற்குக் கையொப்பமிட்டோரின் ஆலோசனையுடன், வடமாகாணத்திற்கென நிர்வாகி ஒருவரையும் அத்துடன், கிழக்கிலுள்ள மாகாண சபைக்கு/சபைகளுக்கு, நிர்வாகி/நிர்வாகிகளையும் நியமித்தல் வேண்டும்.

